பெ. தூரன்

# பாரதியும் தமிழகமும்

வானதி பதிப்பகம்

# பாரதியும் தமிழகமும்

செந்தமிழ்ச்செல்வர்

ம. ப. பெரியசாமித் தூரன்

வானதி பதிப்பகம்

தி. நகர் - சென்னை-17

முதற் பதிப்பு : பிப்ரவரி, 1979.

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 3-75

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை—600 014

தமிழ்நாடு மேலவைத் தலைவர்

## மாண்புமிகு ம. பொ. சிவஞானம்

அவர்கள் அளித்த

# அணிந்துரை

இந்நூலாசிரியர் திரு. பெரியசாமித் தூரன் அவர்கள், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள பணிகள் சரித்திரச் சிறப்பு மிக்கவையாகும். தமிழில் 10 தொகுதிகளாக கலைக் களஞ்சியம் வெளி வந்ததற்கு இவருடைய அரும்பணியே அடிப்படையாக அமைந்ததெனலாம்.

தமிழின்மீது கொண்ட பற்றுக் காரணமாக, தமிழ்த் தாய் பெற்ற புலவர்களிடமும் இவருக்குத் தளராத பக்தி உண்டு. புலவர்களைத் தரம் அறிந்து போற்றும் திறமும் உண்டு. அந்த வகையில் பாரதியைத் தம் வழி காட்டியாகக் கொண்டு இவர் வாழ்க்கை நடத்தி வருகிறார். இவருடைய தேச பக்திக்கும் தாய் மொழிப் பற்றுக்கும் பாரதிதான் ஆசான். அந்த ஆசானின் தமிழ்ப் பற்றையும், தமிழ் இனப் பற்றையும், தமிழ்நாட்டுப் பற்றையும் அவருடைய எழுத்தோவியங்களைக் கொண்டே இந்நூலில் அறிமுகப் படுத்துகிறார் ஆசிரியர் தூரன்.

பாரதியாரின் கவிதைகளிலும், கதைகளிலும், கட்டுரைகளிலும் காணப்படும் தமிழ் மாணிக்கங்களை யெல்லாம் தொகுத்து நூல்வடிவில் ஒரு மாலையாக்கித் தந்துள்ளார்,

பாரதியாரின் விழாக்களிலேயும், பட்டிமன்றங்களி லேயும் அந்த மகாகவியைப் பற்றிப் பேசும் இளைஞர் களுக்கும், பத்திரிகைகளிலும் நூல்களிலும் பாரதியைப் பற்றிக் குறிப்பிடும் எழுத்தாளர்களுக்கும் இந்நூல் பயன் படுவதாகும். பல மணி நேரத்தைச் செலவழித்து உடல் நலம் குன்றியுள்ள நிலையிலும் உழைத்து, பாரதியாரின் எழுத்துக்களைத் துருவித் துருவி ஆய்ந்து இந்நூலைத் தந்துள்ளார். அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன். இத்தகைய தமிழ்ப் பணிகளே பிணியின் மத்தியிலும் அவரை வாழ்வித்துக் கொண்டிருக்கின்றன. அவர் இன்னும் நெடுங்காலம் வாழப் பிரார்த்திக்கின்றேன்.

வானதி பதிப்பக உரிமையாளர் திரு. திருநாவுக்கரசு அவர்கள், சான்றோர் பலருடன் தொடர்பு கொண்டு, அவர்களின் கருத்தோவியங்களை நூல்களாக வெளியிடு வதில் தனி ஆர்வமுடையவர். இப்படி எத்தனையோ நூல் களை தமிழ்க் கலைக்களஞ்சியத்தில் அவர் சேர்த்துள்ளார். இந்நூலை வாங்கி, அவரைத் தமிழ் மக்கள் ஊக்குவிக்க வேண்டும்.

தமிழரிடையே தேசபக்தியானது குன்றியும் குறைந்தும் வரும் இந்நாளிலே, அதனை ஊக்கி வளர்ப் பதற்கு இந்நூல் பயன்படும் என்று நம்புகிறேன்.

வாழ்க, பாரதியின் புகழ்!

வாழ்க, தமிழ் மொழி!

**ம. பொ. சிவஞானம்**

# அறிவு முத்துக்கள்

மகாகவி பாரதி, தமிழ்மொழியின் சிறப்பைப் பற்றியும், தமிழ் நாட்டின் உயர்வைப் பற்றியும் தமிழ் மக்களின் நலனைப் பற்றியும் சொன்ன கருத்துக்களை "பாரதியும் தமிழகமும்" என்ற தலைப்பில் செந்தமிழ்ச் செல்வர் திரு. பெரியசாமித் தூரன் அவர்கள் தொகுத்துத் தந்துள்ளார்கள். இதற்குப் பைந்தமிழ்க் கவிஞன் பாரதியின் கவிதைகளும், காவியங்களும், கட்டுரைகளும், வசன கவிதைகளும், உரை நடையும் தொகுப்பாசிரியர் தூரன் அவர்களுக்கு மிகவும் பயன்பட்டிருக்கின்றன.

பாரதி நம் தாய்மொழி வளர்ச்சி குறித்தும் நாட்டின் நலன் குறித்தும் மக்களின் மேம்பாடு குறித்தும் எவ்வளவு கவலைப்பட்டிருக்கிறான்; உளம் உருகிப் பாடியிருக்கிறான் என்பதை இந்நூலைப் படித்தால் போதும்.

ஆயிரக் கணக்கான பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால் மட்டுமே அறிந்து கொள்ளக் கூடிய விஷயங்களை இச்சிறு நூலிலே தொகுப்பாசிரியர் தூரன் அவர்கள் பாரதியின் உள்ளத்தை நமக்குத் தெளிவாக விண்டு காட்டுகிறார்.

மாகவிஞன் பாரதியின் கவலைகளும், கனவுகளும், கருத்துக்களும் தமிழ் நாட்டு மக்களின் உயர்வுக்கு நிச்சயம் பயன்படும் என்று கருதி இந்நூலை வெளியிட்டுள்ளோம். இம்மாதிரி பாரதியின் கருத்துக்களை வரிசைப்படுத்தி சிறு சிறு நூல்களாக வானதி பதிப்பகத்தில் வெளியிடவும் எண்ணியுள்ளோம்.

பாரதியின் கருத்துக்கள் அனைத்தையும் தொகுத்துத்தர தமிழறிஞர் திரு. தூரன் அவர்கள் இசைந்துள்ளார்கள்.

இது தமிழ்மக்களின் பாக்கியம். அண்மையில் '**பாரதியும் பாட்டும்**' என்ற நூல் வெளிவந்துள்ளது. இப்பொழுது **பாரதியும் தமிழகமும்** வெளிவருகிறது. இதைத் தொடர்ந்து **பாரதியும் பாரததேசமும்** மற்றும் பல நூல்கள் வெளிவரும்.

பாரதியின் மணிவாக்குக்கிசைய திரு. தூரன் அவர்கள் தம் அறிவுத் திறத்தாலே தமிழ் மக்களின் உயர்வு கருதி பாரதியின் அரிய பெரிய கருத்துக்களைத் தொகுத்துத் தர முன்வந்துள்ளார்கள்.

திரு. தூரன் அவர்கள் கலைக் களஞ்சியத்துக்கு தொகுப்பாசிரியராக இருந்து நல்லறிஞர் கருத்துக்களை எல்லாம் தமிழ்க் கலைக் களஞ்சியத்துக்குக் கொண்டு வந்தவர்கள். இப்பொழுது பாரதியின் கருத்துக்களை எல்லாம் தொகுத்துத் தருவது தமிழ் மக்கள் செய்த பாக்கியம்.

நல்ல பல கருத்துக்கள் நாடு முழுவதும் பரவி, தமிழ் மக்கள் எல்லாச் செல்வங்களும் பெற திரு. தூரன் அவர்களின் தொகுப்பான அறிவுக் களஞ்சியப் பாரதி வரிசை நூல்கள் நிச்சயம் பயன்படும்.

தமிழ் மக்களும், தமிழ் மொழியும், தமிழ் நாடும் பலதுறைகளிலும் உயர்வு பெற உளமுருகி உயர்ந்த பல கருத்துக்களை, அறிவு முத்துக்களை வழங்கிய கவிக்கடல் பாரதியை நெஞ்சார்ந்த நன்றியுடன் போற்றி வணங்குவோம். பாரதியின் அறிவு முத்துக்களைத் தொகுத்து அற்புதமான மாலையாக்கித் தந்துள்ள செந்தமிழ்ச் செல்வர் திரு. தூரன் அவர்களை நன்றிப் பெருக்குடன் போற்றிப் பாராட்டுவோம்.

**ஏ. திருநாவுக்கரசு**
வானதி பதிப்பகம்

# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| **கவிதை** | | **பக்கம்** |
| 1. | செந்தமிழ் நாடு | 23 |
| 2. | தமிழ் | 25 |
| 3. | தமிழ் மொழி வாழ்த்து | 27 |
| 4. | தமிழ்த் தாய் | 28 |
| 5. | ஆங்கிலப் பயிற்சி | 30 |
| 6. | தமிழச்சாதி | 32 |
| **உரைநடை** | | |
| 7. | நெல்லையப்பருக்குக் கடிதம் | 37 |
| 8. | தமிழ் | 40 |
| 9. | தமிழ் நாட்டு நாகரிகம் | 43 |
| 10. | தமிழின் நிலை | 54 |
| 11. | தமிழ் நாட்டின் விழிப்பு | 58 |
| 12. | தமிழில் சாஸ்த்ர பரிபாஷை | 63 |
| 13. | தமிழ் வசன நடை | 66 |
| 14. | தமிழ் நாட்டிலே புஸ்தகப் பிரசுரம் | 68 |
| 15. | தமிழருக்கு | 69 |
| 16. | தமிழ் நாட்டு மாதருக்கு | 72 |
| 17. | தமிழ் நாடே சரியான களம் | 81 |
| 18. | புனர் ஜன்மம் | 85 |
| 19. | தென்றலுடன் பிறந்த பாஷை | 88 |
| 20. | தமிழில் எழுத்துக் குறை | 92 |
| 21. | தமிழ் பாஷைக்கு உள்ள குறைகள் | 97 |
| 22. | வருங்காலம் | 103 |
| 23. | தேசீயக் கல்வி | 106 |
| 24. | தமிழ் நாட்டில் கல்வி | 111 |
| 25. | ஸரஸ்வதி பூஜை—உண்மை வழி | 112 |
| 26. | வீரத் தாய்மார்கள் | 114 |
| 27. | பாரதி வாக்கு | 120 |

தமிழா, தெய்வத்தை நம்பு
பயப்படாதே
உனக்கு நல்ல காலம் வருகிறது

*—பாரதி வாக்கு*

தமிழ்நாட்டிலே புதிய கவிதையும்
சாஸ்திர ஒளியும் விரைவிலே தோன்றும்
உலகம் பார்த்து வியப்படையும்

*—பாரதி வாக்கு*

# முன்னுரை

தமிழன் தூங்கிக் கொண்டிருந்தான். கும்பகர்ணத் தூக்கம்.

தாழ்வு மனப்பான்மையாலும், சோர்வாலும் தமிழன் தலைகுனிந்து உறங்கிக் கொண்டிருந்தான்.

தமிழகத்தின் பெருமையை அவன் உணர்ந்துகொள்ள வில்லை.

தமிழின் உயர்வை அவன் அறிந்து கொள்ளவில்லை.

மேற்கு மொழிகளின் ஆதிக்கத்திலே அவன் கட்டுண்ட பாம்பெனக் கிடந்தான்.

தலைவர்கள் என வந்தவர்கள் ஆங்கிலம் பேசுவதையே நாகரிகம் என்று கொண்டார்கள். ஆங்கிலேயனைவிட ஆங்கிலத்தைத் தமிழன்தான் திருத்தமாக உச்சரிக்கிறான் என்று பெருமைப்பட்டார்கள்.

ஆங்கிலம் படித்தவனுக்கு அதிகாரம். ஆங்கில நடை உடை பாவனைகளைக் கைக் கொள்வதிலே ஒரு தனிப்பட்ட மோஹம்; அதற்கே தலைவணக்கம்.

ஆங்கில ஆட்சியிலே ஆங்கிலம் படித்த தமிழனுக்கு உயர் பதவிகள். அவன் தனது சுயதர்மத்தை மறந்தான்.

நீதி மன்றங்கள் ஆங்கிலத்தில் நீதி செலுத்தின. வழக்குரைஞர்கள் ஆங்கிலத்தில் பேசித் தமிழனை மயங்க வைத்தார்கள். பொது மேடைகளிலே ஆங்கிலத்தில் பேசுபவனுக்குத்தான் மதிப்பு. தமிழ் அங்கே தலைகாட்ட முடியாது.

பள்ளிகளிலே தமிழ் இரண்டாம், மூன்றும் இடத்தைப் பெற்றது. படிப்பெல்லாம் ஆங்கிலத்திலே. மொழியாக்கம் என்று ஏதோ ஒப்புக்குப் பாடத்திட்டத்திலே இடம் பெற்றது.

பனைமரம் என்பதைப் பூனைமரம் என்று எழுதி விட்டால் செம்பாதிக்கு மேல் தேர்வு அம்சம் கிடைத்து விடும்.

தமிழால் ஒன்றும் செய்ய முடியாது என்ற ஒரே சுதியில் ஆங்கிலம் கற்றவர்கள் முழங்கினார்கள்.

தமிழ்ப் புலவர்கள் வாய்திறக்கவில்லை. யமகம், திரிபு, மடகு, நாகபந்தனம் என்று கவிகள் பாடித் தம் புலமையைக் காட்டினார்கள். அப்படிப் பாடுவதே கவிதை; அப்படி எழுதுவதே எழுத்து என்று நினைத்தார்கள். தமிழ்ப் புலவர்கள் ஒரு தனி ஜாதியாக ஒதுக்கப்பட்டார்கள். அண்டர் புகழும் ஆடுசாபட்டியில் அவதரித்தவர்களாக அவர்கள் கருதப்பட்டார்கள்.

பள்ளியிலே தமிழ் வகுப்பு நகைப்புக் கிடமாயிற்று. தமிழ் என்றாலே உதாசீனம்.

ஆனால் இந்த அவல நிலைக்கு மத்தியிலும் தமிழின் பெருமையை உணர்ந்த ஒரு சிலர் இருக்கவே செய்தார்கள்.

தமிழில் உள்ள கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலியவற்றைப் படித்து அவற்றின் சிறப்பை அவர்கள் உணர்ந்து போற்றினார்கள். தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தம், வள்ளலார் திருவருட்பா முதலிய நூல்களிலே அவர்கள் உள்ளத்தைச் செலுத்தி இன்பமடைந்தார்கள். பெரும்பாலும் சமயப்பற்றுடையவர்களே இவ்வாறு தமிழைப் போற்றினார்கள். அவர்களுக்குத் திருக்குறள் தெரியும். நாலடியார் முதலிய நூல்கள் தெரியும். அவற்றின் இணையற்ற உயர் தனிச் சிறப்பும் தெரியும்.

தமிழ் படிப்பதென்றால் இவற்றைப் படிப்பதென்றே அன்று இருந்தது.

இந்தத் தமிழ், அற நெறியைக் கடைப்பிடிக்க அவர்களுக்கு உதவிற்றேயல்லாமல் ஆங்கிலத்தோடு சரிநிகர் சமானமாகவோ உயர்வாகவோ இருக்கத் தகுதி வாய்ந்தது என்று பெரும்பாலும், யாரும் கருதவில்லை.

இந்த அந்தகார நிலையிலே தமிழ்த் தாத்தா உ. வே. சுவாமிநாத ஐயர் அவர்கள் தமது பெருமுயற்சியால் தேடிக் கண்டுபிடித்த சங்க இலக்கியங்களைச் சிறந்த முறையிலே பதிப்பித்து வெளியிட்டார்கள்.

தமிழர்களுக்குக் கொஞ்சம் நாடித்துடிப்பு வந்தது. உயிர் இருப்பதைப் போல உணர்ந்தார்கள்.

என்றாலும் தூக்கம் கலையவில்லை. மயக்கம் தெளியவில்லை. தாழ்வு மனப்பான்மையைத் தள்ளித் தலை நிமிர முடியவில்லை.

இந்த நிலையில்தான் தேசிய இயக்கம் தலை தூக்கியது. எதிலும் நமது பெருமையைத் தேடிப் பார்க்கப் பலர் முயன்றனர். நமது மொழி, நமது சங்கீதம், நமது சிற்பம் நமது கலை என்று பேசத் தொடங்கினர்.

இந்தப் பின்னணியிலே பாரதியார் சென்னையில் பத்திரிகை ஆசிரியராகத் தோன்றினார். முதலில் சுதேச மித்திரனில் வேலை பார்த்தார். பிறகு இந்தியா வார இதழுக்கு ஆசிரியரானார்.

பாரதியார் சென்னைக்கு வந்தது தமிழருக்கும், தமிழகத்திற்கும், பாரத தேசத்திற்கும் நல்ல காலம்.

இந்த நூலிலே பாரதியார் தமிழர்களுக்கும், தமிழகத்திற்கும் ஆற்றிய இணையற்ற சேவையை ஓரளவு எடுத்துக் காட்ட முன் வந்துள்ளேன்.

தாழ்வு மனப்பான்மையில் விழுந்து கிடக்கும் தமிழர்களை அவர்களுடைய பெருமையை உணர்ந்து வீறுகொண்டு எழுவதற்கு அவர் ஓங்கிய குரல் கொடுத்தார்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுதுகாதினிலே

என்று முழங்கினார்.

தமிழா, கவனி,

தமிழகம் ஒப்பற்றது.

—செல்வம்

எத்தனையுண்டு புவிமீதே—அவை
யாவும் படைத்த தமிழ்நாடு

என்று மேலும் முழங்கினார்.

தமிழா, கவனி!

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்
யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோவைப்போல்

பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை

என்று மேலும் முழங்கினார்,

தமிழர்களின் உடம்பிலே மின்சக்தி பாய்ந்ததுபோல அவர்கள் உணர்ந்து தலை நிமிர்ந்தார்கள். "எங்கள் தமிழ் மொழி, எங்கள் தமிழ் மொழி, என்றென்றும் வாழியவே" என்று கவிஞரோடு சேர்ந்து ஒரே மூச்சில் பாடினார்கள்.

பாரதியாருக்கு முன்பு தமிழின் பெருமையைக் கூறியவர்கள் இல்லையா என்று வினவலாம். இருந்தார்கள். பெரும் புலவர்கள் இருந்தார்கள். அவர்களுடைய புலமை மேருமலை போன்றது.

இவர்கள் எல்லாம் தமிழ்ப்பொழில், செந்தமிழ் என்ற உயர்ந்த இலக்கிய ஏடுகளிலே தங்கள் கருத்தைத் திங்கள் தோறும் வெளியிட்டார்கள். வாதப் பிரதிவாதம் செய்தார்கள். பின்னால் செந்தமிழ்ச் செல்வியும் ஓர் அணிகலனைச் சேர்ந்து கொண்டது.

கொழுத்துன்னூசி என்பது பற்றி அவர்கள் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்ட ஒன்றை மட்டும் சான்றாக எடுத்துக் காட்டுகிறேன்.

தவலரும் தொல் கேள்வித்தன்மையுடையார், இகலிலர், எஃகுடையார் என்று நாலடி புகழ்வதைப் போன்று அவர்கள் வாதம் அமைந்திருந்தன. ஊசிமுனையிலே நூறு திக்குகளை அவர்கள் கூறும்போது அவர்களுடைய பெரும் புலமையைக் கண்டு வியக்காமலிருக்க முடியாது.

ஆனால் அவர்களுடைய புலமை தமிழ்அறிவு மிக்கவர்களுக்கே பயன்பட்டது. பொதுமக்களை அது கவரவில்லை.

பாரதியார் மக்களுக்காக மக்கள் பேசும் எளிய மொழியிலே பாடினார்; எழுதினார். எளிமையிலும் வலிமை வாய்ந்த எழுத்து அவருடையது.

"சுற்றி நில்லாதே பகையே
துள்ளி வருகுது வேல்"

"வலிமை யற்ற தோளினாய் போ போ போ
மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ"

இக் கவிதை வரிகள் எத்தனை எளிமையானவை! ஆனால் அதே வேளையில் எத்தனை வலிமையுடையவை!

பாரதியாரே எளிய நடையின் தேவையைப் பற்றி எழுதுவதைப் பார்ப்போம்,

"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு—இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான்."

இவ்வாறு பாஞ்சாலி சபதம் என்ற நூலின் முகவுரையிலே பாரதியார் தெளிவாகக் கூறியுள்ளார்.

இந்த எளிமையும், கவிதைக்குள்ள பொருட்செறிவும் இவருடைய படைப்புக்களிலே எங்கும் ஒளி விடுவதைக் காணலாம்.

பண்டித உலகுக்கு மட்டும் என்றிருந்த தமிழ் மொழியமுதத்தை பாரதியார் மக்கள் அனைவருக்குமாகப் பகிர்ந்தளித்தார்.

மக்கள் அந்த அமுதை மாந்திக்களிகொண்டு நெஞ்சை நிமிர்த்திக் கண்களில் சுடர் வீச "நான் தமிழன்; நான் ஓர்

ஒப்பற்ற பழம்பெருமை வாய்ந்த தாய்மொழியைப் பேசு கின்றவன்; எனது நாடு இளங்கோவை அளித்த நாடு, திருவள்ளுவரை உலகுக்கே தந்த உயர் நாடு, கம்பன் என்ற மானிடனைப் பாரெல்லாம் கண்டு வியக்கும்படியாகப் பெற்றெடுத்துத் தந்த நாடு, இணையில்லாத நாடு'' என்று மார்தட்டிப் பேசும் வன்மை உடையவர்கள் ஆனார்கள்.

பாரதியார் நமது கலைகளின் பெருமையைப் பற்றிப் பேசினார். தமிழைக் குறைத்துப்பேசியவர்களைச் சாடினார். சேமமுறவேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் என்று தூண்டினார்.

பாரதியார் தமிழின் பெருமையைப் பாடியதோடு நிற்கவில்லை; தமிழ் நாட்டின் பெருமையைப் பாடியதோடு நிற்கவில்லை. தமிழிலே உள்ள குறைபாடுகளையும் காண பித்து அவற்றைப் போக்க வேண்டுமென்று அறிவுறுத் தினார். தமிழர்களின் குறைகளை எடுத்துக் காட்டி, இடித்துக் காட்டி, எள்ளி நகையாடி, நையாண்டி செய்து இவ்வாறு பலவழிகளிலும் தமிழர்களைத் தங்கள் சிறுமை களை ஒழித்துக் கட்டிப் பெருமை கொள்ளச் செய்தார். இவற்றில் அவர் தயங்கியதே இல்லை.

ஒரு பக்கம் அளவு கடந்து பற்று; மறுபக்கம் தமிழர் களின் நிலைகண்டு கோபக் கனல்.

விதி வசத்தை நம்பும் தமிழனையும், உண்மையான சாஸ்த்ரங்களை வளர்க்கத் தவறிவிட்ட தமிழனையும் பாரதி யார் எப்படிச் சாடுகின்றார் என்று பார்ப்போம்!

மழை பெய்கிறது.

ஊர் முழுதும் ஈரமாகிவிட்டது.

தமிழ் மக்கள் எருமைகளைப் போல எப்போதும் ஈரத்தி லேயே நிற்கிறார்கள், ஈரத்திலேயே உட்காருகிறார்கள்.

ஈரத்திலேயே நடக்கிறார்கள், ஈரத்திலேயே படுக்கிறார்கள், ஈரத்திலேயே சமையல், ஈரத்திலேயே உணவு.

உலர்ந்த தமிழன் மருந்துக்குக்கூட அகப்பட மாட்டான்.

ஓயாமல் குளிர்ந்த காற்று வீசுகிறது.

தமிழ் மக்களில் பலருக்கு ஜ்வரம் உண்டாகிறது.

நாள்தோறும் சிலர் இறந்து போகிறார்கள். மிஞ்சியிருக்கும் மூடர் விதிவசம் என்கிறார்கள்.

ஆமடா, விதி வசந்தான்.

'அறிவில்லாதவர்களுக்கு இன்பமில்லை' என்பது
ஈசுவரனுடைய விதி
சாஸ்த்ரமில்லாத தேசத்திலே நோய்கள் விளைவது விதி.

தமிழ் நாட்டிலே சாஸ்த்ரங்களில்லை. உண்மையான சாஸ்திரங்களை வளர்க்காமல், இருப்பனவற்றையும் மறந்துவிட்டுத் தமிழ் நாட்டுப் பார்ப்பார் பொய்க்கதைகளை மூடரிடங்காட்டி வயிறு பிழைத்து வருகிறார்கள். (காற்று—வசன கவிதை.)

இனி அவர் நையாண்டி செய்வதற்கு இரண்டொரு எடுத்துக் காட்டுகளை நோக்குவோம்!

ஞானரதம் என்ற அவருடைய சிறந்த நூலிலே மண்ணுலகத்தைப் பற்றியும் கூறுகிறார்.

"நான் சோம்பருக்குத் தொண்டன். எனது நண்பர்கள் புளியஞ்சோற்றுக்குத் தொண்டர்கள். சிலர் மட்டிலும் பணத் தொண்டர்; காலணாவின் அடியார்க்கும் அடியார்.

ஆனால் எங்களிலே ஒவ்வொருவனும் பேசுவதைக் கேட்டால் கைகால் நடுங்கும்படியாக இருக்கும். பணத்

தொண்டரடிப் பொடி யாழ்வாரீ எங்களெல்லோரைக் காட்டிலும் வாய்ப்பேச்சில் வீரர் ஒருவன் வானத்தை வில்லாக வளைக்கலாம் என்பான். மற்ருெருவன் மணலைக் கயிருகத் திரிக்கலாம் என்பான். ஒருவன் "நாம் இந்த ரேட்டில்—இந்த விதமாகவே—வேலை செய்து கொண்டு வந்தால் ஆங்கிலேயரின் வர்த்தகப்பெருமை ஆறு மாதத்தில் காற்ருய்ப் போய்விடும்" என்பான். மற்ருெருவன், "சியாம்ஜி கிருஷ்ணவர்மா ஸ்வராஜ்யம் கிடைக்கப் பத்து வருஷமாகுமென்று கணக்குப் போட்டிருக்கிருர். ஆறு வருஷத்தில் கிடைத்து விடுமென்று எனக்குத் தோன்று கிறது" என்பான். தவளை யுருவங்கொண்ட மூன்ருமொருவன், "ஆறு மாதமென்று சொல்லடா" என்று திருத்திக் கொடுப்பான்.

*தமிழ்நாட்டின் விழிப்பு என்ற கட்டுரையில் பாரதியார் தமிழர்களை எப்படி நயமாக இடித்துரைக்கிருர் என்று பாருங்கள்!*

*கும்பகர்ணன் தூங்கிஞனும், இலங்கையில் சண்டை நடக்கிறது. மூன்று லோகமும் நடுங்குகிறது...அப்படிப் பட்ட சண்டையின் அதிர்ச்சியிலேகூட, கும்ப கர்ணனுடைய தூக்கம் கலையவே இல்லை. ஆயிரக்கணக்கான ஆடு, மாடு, குதிரைகளின் காலில் கூர்மையான கத்திகளைக் கட்டி அவன் மேலே நடக்கச் சொன்ஞர்கள்; தூக்கம் கலையவில்லை......*

*மேற்படி கும்பகர்ணனைப் போலே சில தேசங்கள் உண்டு. அந்த தேசங்களிலே வாஸம் செய்வோர் மஹா பாவிகள்......*

*ஆஞல் ஹிந்து தேசம் அப்படி...யில்லை! இங்கு தமிழ் நாட்டைப் பற்றி முக்கியமாகப் பேச வந்தோம்; தமிழ்நாடு மேற்படி மஹாபாதக ஜாபிதாவைச் சேர்ந்ததன்று, அன்று!*

இவ்வாறு இடித்துக் கூறினலும் தமிழின் மேலும் தமிழர்களின் மேலும் பாரதியாருக்கு அளவில்லாத பக்தியும், நம்பிக்கையும், பெ _ மையும் இருந்தது.

தமிழ், என்னும் கட்டுரையிலே, "மிகவும் விரைவிலே் தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள்" என்று பெருமிதத்தோடும், பெரு நம்பிக்கையோடும் முழங்குகிருர்.

தமிழ் நாட்டின் விழிப்பு என்ற கட்டுரையில் "உலகத்திலுள்ள மதபேதங்களையெல்லாம் வேருடன் களைந்து ஸர்வ ஸமய ஸமரசக் கொள்கையை நிலைநாட்ட வேண்டுமானல், அதற்குத் தமிழ் நாடே சரியான களம். உலக முழுவதும் மத விரோதங்களில்லாமல் ஒரே தெய்வத்தைத் தொழுது உஜ்ஜீவிக்கும்படி செய்யவல்ல மஹான்கள் இப்போது தமிழ் நாட்டில் தோன்றியிருக்கிருர்கள். அது பற்றியே பூமண்டலத்தில் புதிய விழிப்பு தமிழகத்தே தொடங்குமென்கிறேம்" என்று பெருமையோடு கூறுகிருர்.

பாரதியார் எழுதியுள்ள பாப்பாப் பாட்டை ஒவ்வொரு குழந்தையும் தாரக மந்திரமாகக் கொள்ள வேண்டும் என்பது என்னுடைய ஆசை. அது அத்தனை உயர்வானது

அதிலே பாரதியார் பாடுகிருர்.

"தமிழ்த்திருநாடுதன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா"

என்றும்,

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா"

என்றும் உபதேசம் செய்கிருர்.

இவற்றிற்கு அடுத்த இரண்டு வரிகளிலும் தமிழ் நாட்டைப் பற்றி மட்டும் எண்ணிக்கொண்டிராதே, பாரத தேசத்தையும் சேர்த்து எண்ணவேண்டும் என்ற ஒருமைப் பாட்டு உணர்ச்சியையும் உடனடியாகவே பாப்பாவின் உள்ளத்திலே விதைக்கிறார். இதுபற்றி அடுத்த நூலிலே, விரிவாகப் பேசுவேன். ஆகையால் இத்துடன் இங்கு நிறுத்திக் கொள்கிறேன்.

தமிழர்களுக்கு மகத்தான சக்தி ஏற்படவேண்டும் என்பது பாரதியாருடைய ஆசை. "தமிழ் ஜனங்களுக்குள் சக்தி மேன்மேலும் பெருகச் செய்யவேண்டுமென்பது நமது நோக்கம். இந்த நோக்கத்தை நிறைவேற்றும் பொருட் டாகவே நாம் உயிர் தரிக்கின்றோம். 'மாதா, இந்த நாட்டு ஜனங்களுக்கு சக்தி யதிகரிக்கும்படி செய்க; அக்காரியத்தை நிறைவேற்றுதற்குரிய சக்தியை எனக்கருள் புரிக' என்று நம்மில் ஒவ்வொருவனும் தியானம் புரிய வேண்டும்" என் கிறார் அவர்.

பரலி சு. நெல்லையப்பருக்கு எழுதிய கடிதம் அவருடைய அளவற்ற ஆசையை நன்கு வெளிக்காட்டுகின்றது. தமிழும், தமிழகமும் ஓங்கி ஓங்கி விளங்க வேண்டுமென் பதை அக் கடிதம் தெளிவாக நமக்கு வெளிப்படுத்து கின்றது.

நமது குறைகளை அவர் ஒரு பக்கம் எடுத்துக் காட்டு வார்; ஆனால் அதே வேளையில் மற்றொருவன் குறை சொல் வதைப் பொறுக்கமாட்டார்.

பச்சையப்பன் கல்லூரியில் ஆசிரியராக அக்காலத்தில் பணிபுரிந்த ரோலோ என்பவர் நமது மொழிகள் சயன்ஸ் கற்றுக் கொடுக்கத் தகுதி வாய்ந்தவை அல்ல என்று கூறினாராம். பாரதியார் எழுதுகிறார். "அவருக்கு இவ்விடத்

துப் பாஷைகள் தெரியாது. ஸங்கதி தெரியாமல் விரிக்கிறார். சாஸ்திர பரிபாஷையை நமது பாஷைகளில் மிகவும் எளிதாகச் சேர்த்து விடலாம் மேலும், இயற்கை நடையிலே இங்கிலீஷைக் காட்டிலும் தமிழ் அதிக நேர்மை உடையது. ஆதலால் சாஸ்திர ப்ரவசனத்துக்கு மிகுந்த சீருடையது. இந்த ஸங்கதி நம்மவர்களிலேகூட இங்கிலீஷ்ப் பண்டிதருக்குத் தெரியாது."

இதை, விடக் கடுமையாகத் தாககியிருக்கிறார் நமது ஆங்கிலம் கற்ற ஆசிரியர்களைத் தமிழ் என்னும் கட்டுரையிலே. அதை ஒவ்வொரு தமிழனும் ஆழ்ந்து படிக்க வேண்டும்.

யாரெல்லாம் தமிழின் சிறப்பை எடுத்துச் சொல்கிறார்களோ அவர்களுடைய வசனங்களை எடுத்துக் காட்டி அந்த வழியாலும் தமிழருக்குத் தலை நிமிருமாறு செய்யமுயன்றார் பாரதியார்.

அவனீந்திர நாத தாகூர் ஒரு சிறந்த மறுமலர்ச்சி ஓவியர் என்பது பலருக்கும் தெரிந்திருக்கலாம். அவர், இக்காலத்திலும் தமிழ் நாட்டில் வாழும் ஸ்தபதிகளிடம் உயர்ந்த தொழில் இருப்பதாகப் புகழ்ந்து பேசியுள்ளார் என்பதை எடுத்துக் காட்டுவார். தமிழ்ப் பெரும் புலவராகிய மு. இராகவய்யங்கார் எழுதிய வீரத் தாய்மார்கள் என்ற கட்டுரையைப் புகழ்ந்து கடிதம் எழுதுவார். தமிழ் மக்களின் முன்னிலையிலும் அவற்றை வைப்பார்.

யார் உண்மையான தமிழ் அபிமானி என்று பேச வந்த இடத்திலே "தெலுங்கருக்குத் தெலுங்கு பாஷையில் பிறந்திருக்கும் உண்மையான அபிமானம் தமிழருக்குத் தமிழினிடம் இல்லை. தமிழிலிருந்து பூமண்டலத்திலுள்ள பாஷைகளெல்லாம் பிறந்து நிற்பதாகக் கூவின

மாத்திரத்திலே ஒருவன் தமிழபிமானி ஆகமாட்டான். பள்ளிக் கூடத்து சாஸ்திரங்களெல்லாம் தமிழ்ப் பாஷை யில் கற்றுக் கொடுக்கும் படி முயற்சி செய்கிறவன் தமிழ பிமானி. தமிழராகப் பிறந்தோர் கூடியிருக்கும் சபை களிலேயும், தமிழராகப் பிறந்தோர் ஒருவருக் கொருவர் பேசும் போதும் இதர பாஷைகளில் பேசாமல் தமிழே பேசும்படி முயற்சி செய்கிறவன் தமிழபிமானி, தமிழில் புதிய கலைகள், புதிய காவியங்கள், புதிய உயிர் தோன்றும் படி செய்வோன் தமிழபிமானி என்று அழுத்தம் திருத்த மாகக் கூறுகின்றார். (தெலுங்கு மஹா சபை என்ற கட்டுரை)

"உலகம் எவ்வளவு தீவிரமாக மாறிக் கொண்டு வருகிற தென்பதைத் தமிழ் நாட்டார் ஆழ்ந்து கவனிக்க வேண்டும்" என்று அவர் எச்சரிக்கிறார்.

இவ்விதமாகத் தமிழ் மொழிக்கும் தமிழகத்திற்கும் புதிய உயிர் வரும்படி செய்தவர் பாரதியார். அவருடைய எழுத்துக் களால் தமிழ்க் கவிதை மறுமலர்ச்சி பெற்றது; தமிழ் உரை நடை புதிய வேகமும், வலிமையும் கொண் டதாக மாறிற்று.

இந்த மறுமலர்ச்சியும் வலிமையும் பாரதிதாசனுர் மூலம் முழுமை பெற்றது என்பதையும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். முழுமை என்று கூறும் போது மொழி யின் வளர்ச்சி அத்துடன் நின்று விட்டதாக எண்ணக் கூடாது.

தமிழ் மறுமலர்ச்சியே முழுமை பெற்றது. ஆனல் தமிழ் இம் மறுமலர்ச்சிப் பாதையில் வளர்ந்து கொண்டே இருக்கும். புதுப்புது அழகுகள், நயங்கள், புதுப்புதுச்

சொல்லாட்சிகள் மரபுகள் தோன்றிக் கொண்டேயிருக்கும். தமிழ் செழித்தோங்கும்.

ஆனால் முதலில் துணிச்சலாக விதை விதைத்த பாரதியாருக்குகே தமிழ் மறுமலர்ச்சியின் பெருமை சாரும் என்பதில் ஐயமில்லை.

தமிழைப் பற்றியும் தமிழகத்தைப் பற்றியும் பாரதியார் எழுதியுள்ள எல்லாக் கவிதைகளையும் கட்டுரைகளையும் இந்தத் தொகுப்பில் ஒருங்கு சேர்த்துத் தந்திருக்கிறேன்.

எனது அருமைத் தமிழ் மக்களே, இவற்றைப் படித்து, மீண்டும் படித்துப் பயனுடையுமாறு உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

இப் பகுதியோடு தொடர்புடைய ஏதாவது ஒரு பாரதி எழுத்து விட்டுப் போயிருந்தால் அதையும் அடுத்த் பதிப்பில் சேர்ப்பேன்.

வாழிய செந்தமிழ்; வாழ்க நற்றமிழர்.

வணக்கம்.

பெ. தூரன்

# 1. செந்தமிழ் நாடு

1. செந்தமிழ் நாடெனும் போதினிலே — இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே — எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே — ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.
(செந்தமிழ்)

2. வேதம் நிறைந்த தமிழ்நாடு—உயர்
வீரம் செறிந்த தமிழ் நாடு—நல்ல
காதல் புரியும் அரம்பையர் போல்—இளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ் நாடு.
(செந்தமிழ்)

3. காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்ட தோர் வையை பொருனை நதி—யென
மேவிய யாறு பல வோடத்—திரு
மேனி செழித்த தமிழ்நாடு.
(செந்தமிழ்)

4. முத்தமிழ் மாமுனி நீள் வரையே—நின்று
மொய்ம்புறக் காக்குந் தமிழ்நாடு—செல்வம்
எத்தனை யுண்டு புவி மீதே—அவை
யாவும் படைத்த தமிழ்நாடு. (செந்தமிழ்)

5. நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தந் தவஞ் செய் குமரி யெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு.
(செந்தமிழ்)

6. கல்வி சிறந்த தமிழ் நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு—நல்ல
பல்வித மாயின சத்திரத்தின்—மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு.

(செந்தமிழ்)

7. வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி கார மேன் றோர்—மணி
யாரம் படைத்த தமிழ் நாடு.

(செந்தமிழ்)

8. சிங்களம் புட்பகம் சாவக—மாகிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்கு
தங்கள் புலிக் கொடி மீன் கொடியும்—நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு.

(செந்தமிழ்)

9. விண்ணையிடிக்கும் தலை யிமயம்—எனும்
வெற்பை யடிக்கும் திறனுடையார்—சமர்
பண்ணிக் கலிங்கத் திருள் கெடுத்தார்—தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ் நாடு.

(செந்தமிழ்)

10. சீன மிசிரம் யவன ரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ் வீசிக்—கலை
ஞானம் படைத் தொழில் வாணிபமும்—மிக
நன்று வளர்த்த தமிழ் நாடு.

(செந்தமிழ்)

## 2. தமிழ்

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்;
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும். 1

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர் போல், இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை
வெறும் புகழ்ச்சி யில்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம். ஒரு சொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்! 2

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை;
திறமான புலமையெனில் வெளி நாட்டார்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும். 3

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்;
வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

## 3. தமிழ் மொழி வாழ்த்து

*தான தனத்தன தான தனத்தன*
*தான தந்தானனா*

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழிய வே.

2. வான மளந்த தனைத்து மளந்திடு
வண் மொழி வழிய வே.

3. ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழிய வே

4. எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழிய வே.

5. சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி யோங்கத்
துலங்குக வையக மே.

6. தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

7. வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!

8. வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழிய வே!

## 4. தமிழ்த் தாய்

தன் மக்களைப் புதிய சாத்திரம் வேண்டுதல்

*(தாயுமானவர் ஆனந்தக்களிப்பு சந்தம்)*

1. ஆதிசிவன் பெற்றுவிட்டான்—என்னை
ஆரிய மைந்தன் அகத்திய னென்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே—நிறை
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்.

2. மூன்று குலத்தமிழ் மன்னர்—என்னை
மூண்டநல் லன்பொடு நித்தம் வளர்த்தார்;
ஆன்ற மொழிகளினுள்ளே—உயர்
ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்.

3. கள்ளையுந் தீயையுஞ் சேர்த்து—நல்ல
காற்றையும் வான வெளியையுஞ் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள்—பல
தீஞ்சுவைக் காவியஞ் செய்து கொடுத்தார்.

4. சாத்திரங் கள்பல தந்தார்—இந்தத்
தாரணியெங்கும் புகழ்ந்திட வாழ்ந்தேன்;
நேத்திரங் கெட்டவன் காலன்—தன்முன்
நேர்ந்த தனைத்துந் துடைத்து முடிப்பான்.

5. நன்றென்றுந் தீதென்றும் பாரான்—முன்பு
நாடும் பொருள்கள் அனைத்தையும் வாரிச்
சென்றிடுங் காட்டுவெள் ளம்போல்—வையச்
சேர்க்கையனைத்தையுங் கொன்றுநடப்பான்.

6. கன்னிப் பருவத்தில் அந்நாள்—என்றன்
காதில் விழுந்த திசைமொழி யெல்லாம்
என்னென்ன வோபெய ருண்டு—பின்னர்
யாவும் அழிவுற் றிறந்தன கண்டீர்.

7. தந்தை அருள்வலி யாலும்—முன்பு
சான்ற புலவர் தவவலி யாலும்
இந்தக் கணம்மட்டுங் காலன்—என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சி யிருந்தான்.

8. இன்றொரு சொல்லினைக் கேட்டேன்!—இனி
ஏது செய்வேன்! எனதாருயிர் மக்காள்
கொன்றிடல் போலொரு வார்த்தை—இங்கு
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்!

9. "புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

10. சொல்லவுங் கூடுவதில்லை—அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை;
மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்"

11. என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ!
இந்த வசையெனக் கெய்திடலாமோ?
சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந் திங்குசேர்ப்பீர்!

12. தந்தை யருள்வலி யாலும்—இன்று
சார்ந்த புலவர் தவவலி யாலும்
இந்தப் பெரும்பழி தீரும்—புகழ்
ஏறிப் புவிமிசை யென்று மிருப்பேன்.

# 5. ஆங்கிலப் பயிற்சி

*நெல்லை யூர்சென் றவ் வூணர் கலைத்திறன்*
*நேரு மாறெனை எந்தை பணித்தனன்;*
*புல்லை யுண்கென வாளரிச் சேயினைப்*
*போக்கல் போலவும், ஊன்விலை வாணிகம்*
*நல்ல தென்றொரு பார்ப்பனப் பிள்ளையை*
*நாடு விப்பது போலவும், எந்தைதான்*
*அல்லல் மிக்கதோர் மண்படு கல்வியை*
*ஆரியர்க் கிங் கருவருப் பாவதை* (1)

*நரியு யிர்ச்சிறு சேவகர் தாதர்கள்*
*நாயெ னத்திரி யொற்றர் உணவினைப்*
*பெரிதெ னக்கொடு தம்முயிர் விற்றிடும்*
*பேடி யர்பிறர்க் கிச்சகம் பேசுவோர்*
*கருது மிவ்வகை மாக்கள் பயின்றிடுங்*
*கலைப யில்கென வென்னை விடுத்தனன்;*
*அருமை மிக்க மயிலைப் பிரிந்துமிவ்*
*வற்பர் கல்வியி னெஞ்சு பொருந்துமோ?* (2)

*கணிதம் பன்னிரண் டாண்டு பயில்வர்பின்*
*கார்கொள் வானிலோர் மீனிலை தேர்ந்திலார்*
*அணிசெய் காவிய மாயிரங் கற்கினும்*
*ஆழ்ந்தி ருக்குங் கவியுளம் காண்கிலார்*
*வணிக மும்பொரு ளூநூலும் பிதற்றுவார்*
*வாழு நாட்டிற்பொ ருள்கெடல் கேட்டிலார்*
*துணியு மாயிரஞ் சாத்திர நாமங்கள்*
*சொல்லு வாரெட் டுணைப்பயன் கண்டிலார்.* (3)

கம்ப னென்றொரு மானிடன் வாழ்ந்ததும்
காளி தாசன் கவிதைபு னைந்ததும்
உம்பர் வானத்துக் கோளையு மீனையு
மோர்ந்த ளந்ததோர் பாஸ்கரன் மாட்சியும்
நம்ப ருந்திற லோடொரு பாணினி
ஞால மீதிலி லக்கணங் கண்டதும்
இம்பர் வாழ்வி னிறுதிகண் டுண்மையின்
இயல்பு ணர்த்திய சங்கர னேற்றமும் (4)

சேரன் தம்பி சிலம்பை யிசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பார ளித்ததுந் தர்மம் வளர்த்ததும்
பேர ருட்சுடர் வாள்கொண்ட சோகனுர்
பிழை படாது புவித்தலங் காத்ததும்
வீரர் வாழ்த்த மிலேச்சர்தந் தீயகோல்
வீழ்த்தி வென்ற சிவாஜியின் வெற்றியும் (5)

அன்ன யாவு மறிந்திலர் பாரதத்
தாங்கி லம்பயில் பள்ளியுட் போகுநர்;
முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டி ருக்குமிந் நாளி னிகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியுந் தேர்கிலார்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்;
என்ன கூறிமற் றெங்க னுணர்த்துவேன்
இங்கி வர்க்கென துள்ள மெரிவதே! (6)

# 6. தமிழச்சாதி

விதியே, விதியே, தமிழச் சாதியை
என் செய நினைத்தா யெனக்குரை யாயோ?
சார்வினுக் கெல்லாந் தகத்தக மாறித்
தன்மையுந் தனது தருமமு மாயா
தென்றுமோர் நிலையா யிருந்து நின்னருளால்
வாழ்ந்திடும் பொருளொடு வகுத்திடு வாயோ?
தோற்றமும் புறத்துத் தொழிலுமே காத்துமற்
றுள்ளுறு தருமமு முண்மையு மாறிச்
சிதைவுற் றழியும் பொருள்களிற் சேர்ப்பையோ?
'அழியாக் கடலோ? அணிமலர்த் தடமோ?
வானுறு மீனோ? மாளிகை விளக்கோ ?
கற்பகத் தருவோ? காட்டிடை மரமோ?
விதியே தமிழச் சாதியை யெவ்வகை
விதித்தா' யென்பதன் மெய்யெனக் குணர்த்துவாய்
ஏனெனில்,
'சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்,
திருக்குறளுறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவு மழகுங் கருதியும்,
''எல்லை யொன்றின்மை'' யெனும் பொருளதனைக்
கம்பன் குறிகளாற் காட்டிட முயலு
முயற்சியைக் கருதியும், முன்பு நான் தமிழச்
சாதியை யமரத் தன்மை வாய்ந்தது' வென்
றுறுதி கொண்டிருந்தேன். ஒரு பதினாயிரஞ்
சனிவாய்ப் பட்டுந் தமிழச் சாதிதான்
உள்ளுடை வின்றி யுழைத்திடு நெறிகளைக்
கண்டெனதுள்ளங் கலங்கிடா திருந்தேன்.

ஆப்பிரிக்கத்துக் காப்பிரி நாட்டிலுந்
தென்முனை யடுத்த தீவுகள் பலவினும்
பூமிப் பந்தின் கீழ்ப்புறத்துள்ள
பற்பல தீவினும் பரவி யிவ்வெளிய
தமிழச் சாதி தடியுதை யுண்டும்
காலுதை யுண்டும் கயிற்றடி யுண்டும்
வருந்திடுஞ் செய்தியும் மாய்ந்திடுஞ் செய்தியும்
பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறுது
செத்திடுஞ் செய்தியும் பசியாற் சாதலும்
பிணிகளாற் சாதலும் பெருந்தொலை யுள்ள தம்
நாட்டினைப் பிரிந்த நலிவினுற் சாதலும்
இஃதெலாங் கேட்டு மெனதுள மழிந்திலேன்;
'தெய்வ மறவார், செயுங்கடன் பிழையார்,
ஏதுதாஞ் செயினு மேதுதான் வருந்தினும்
இறுதியில் பெருமையு மின்பமும் பெறுவார்'
என்பதென்னுளத்து வேரகழ்ந் திருத்தலால்.

எனினும்,
இப்பெருங் கொள்கை யிதய மேற் கொண்டு
கலங்கிடாதிருந்த வெனைக்கலக் குறுத்தும்
செய்தியொன் றதனைத் தெளிவுறக் கேட்பாய்:—
ஊன மற்றெவைதாம் உறினுமே பொறுத்து,
வானம் பொய்க்கின் மடிந்திடு முலகுபோல்,
தானமுந் தவமுந் தாழ்ந்திடல் பொறுத்து
ஞானமும் பொய்க்க நசிக்குமோர் சாதி,
சாத்திரங் கண்டாய் சாதியி னுயிர்த்தலம்;
சாத்திர மின்றேற் சாதி யில்லை.
பொய்மைச் சாத்திரம் புகுந்திடின் மக்கள்
பொய்மை யாகிப் புழுவென மடிவர்.
நால்வகைக் குலத்தார் நண்ணுமோர் சாதியில்,
அறிவுத் தலைமை யாற்றிடுந் தலைவர்—

மற்றிவர் வகுப்பதே சாத்திரமாகும்.
இவர் தாம்—
உடலு முளமுந் தம் வசமிலராய்
நெறிபிழைத் திகழ்வுறு நிலைமையில் வீழினும்.
பெரிதிலை; பின்னும் மருந்திதற்குண்டு.
செய்கையுஞ் சீலமுங் குன்றிய பின்னரும்
உய்வகைக்குரிய வழி சில வுளவாம்,
மற்றிவர்,
சாத்திரம்—(அதாவது, மதியிலே தழுவிய
கொள்கை, கருத்து, குளிர்ந்திடு நோக்கம்)—
ஈங்கிதிற் கலக்க மெய்திடு மாயின்
மற்றதன் பின்னர் மருந்தொன் றில்லை.
இந்த நாளெமது தமிழ் நாட்டிடையே
அறிவுத் தலைமை தமதெனக் கொண்டார்
தம்மிலே யிருவகை தலைப்படக் கண்டேன்:
ஒரு சார்,
'மேற்றிசை வாழும் வெண்ணிற மாக்களின்
செய்கையு நடையுந் தீனியு முடையும்
கொள்கையு மதமுங் குறிகளு நம்முடை
யவற்றினுஞ் சிறந்தன; ஆதலி னவற்றை
முழுதுமே தழுவி மூழ்கிடி னல்லால்,
தமிழச் சாதி தரணிமீ திராது.
பொய்த்தழி வெய்தல் முடி' பெனப் புகலும்.
நன்றடா! நன்று! நாமினி மேற்றிசை
வழியெலாந் தழுவி வாழ்குவ மெனிலோ.
'ஏ ஏ ! அஃதுமக் கிசையா' தென்பர்
'உயிர் தருமேற்றிசை நெறிகளை யுவந்து நீர்
தழுவிடா வண்ணம் தடுத்திடும் பெருந்தடை
பல, அவை நீங்கும் பான் மையவல்ல'
என்றருள் புரிவர். இதன் பொருள் 'சீமை

மருந்துகள் கற்ற மருந்துவர் தமிழச்
சாதியின் நோய்க்குத் தலையசைத் தேகினர்'
என்பதேயாகும். இஃதொரு சார்பாம்.
பின்னொரு சார்பினர் வைதிகப் பெயரொடு
'நமது மூதாதையர் நாற்பதிற்றாண்டின்
முன்னிருந்தவரோ, முந்நூற்றாண்டிற்
கப்பால் வாழ்ந்தவர் கொல்லோ, ஆயிரம்
ஆண்டின் முன்னவரோ, ஐயாயிரமோ ?
பவுத்தரே நாடெல்லாம் பல்கிய காலத்
தவரோ ? புராணமாக்கிய காலமோ ?
சைவரோ? வைணவ சமயத்தாரோ ?
இந்திரன்றானே தனி முதற் கடவுள்
என்று நம்முன்னோ ரேத்திய வைதிகக்
காலத்தவரோ? கருத்திலா தவர் தாம்
எமது மூதாதைய ரென் பதிங் கெவர்கொல் ?
நமது மூதாதையர் நயமுறக் காட்டிய
ஒழுக்கமு நடையுங் கிரியையுங் கொள்கையும்
ஆங்கவர் காட்டிய வவ்வப் படியே
தழுவிடின் வாழ்வு தமிழர்க் குண்டு:
எனிலது தழுவ லியன்றிடா வண்ணம்
கலி தடைபுரிவன், கலியின் வலியை
வெல்ல லாகா' தென விளம்புகின் றனரால்.
நாசங்கூறு 'நாட்டு வயித்தியர்'
இவராம். இங்கிவ் விருதலைக் கொள்ளியி
னிடையே நம்மவ ரெப்படி யுய்வர் ?
விதியே ! விதியே ! தமிழச் சாதியை
யென் செயக் கருதி யிருக்கின்றாயடா ?

36

## விதி

மேலே நீ கூறிய விநாசப்புலவரை
நம்மவ ரிகழ்ந்து நன்மையு மறிவும்
எத்திசைத் தெளினும் யாவரே காட்டினும்
மற்றவை தழுவி வாழ்வீராயின்,
அச்சமொன் றில்லை.

# 7. நெல்லையப்பருக்குக் கடிதம்.

*19 ஜூலை 1915*

ஓம்.

புதுச்சேரி,
*19—7—1915*

என தருமைத் தம்பியாகிய ஸ்ரீ நெல்லையப்பபிள்ளையைப் பராசக்தி நன்கு காத்திடுக.

தம்பி-மாதத்துக்கு மாதம் நாளுக்கு நாள் நினதறிவு மலர்ச்சி பெற்று வருவதைக் காண்கிறேன். நினது உள்ளக் கமலத்திலே பேரறிவாகிய உள்ஞாயிற்றின் கதிர்கள் விரைவிலே தாக்கி நினக்கு நல்லின்பம் உண்டாகுமென்றே கருதுகிறேன்.

* * *

நெஞ்சம் இளகி விரிவெய்த விரிவெய்த அறிவிலே சுடர் ஏறுகிறது. நம்மிலும் மெலியாருக்கு நாம் இரங்கி அவர்களை நமக்கு நிகராகச் செய்து விட வேண்டுமென்று பாடுபடுதலே நாம் வலிமை பெறுவதற்கு வழியாகும். வேறு வழியில்லை.

ஹா! உனக்கு ஹிந்தி மராட்டி முதலிய வட நாட்டு பாஷைகள் தெரிந்திருந்து, அந்தப் பாஷைப் பத்திரிகைகள் என்ன அற்புதமான புதுமை பெற்றுள்ளன என்பதை நேரில் தெரிந்து கொள்ள முடியுமானால்—

தமிழ் நாட்டிற்கு எத்தனை நன்மையுண்டாகும்; தமிழ் தமிழ், தமிழ் என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே

கடமையாகக் கொள்க. ஆனால் புதிய புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம் தமிழில் ஏறிக் கொண்டே போக வேண்டும்.

* * *

தம்பி— நான் ஏது செய் வேனடா; தமிழை விட மற்றொரு பாஷை சுக்மாக இருப்பதைப் பார்க்கும்போது எனக்கு வருத்தமுண்டாகிறது. தமிழனை விட மற்றொரு ஜாதியான் அறிவிலும் வலிமையிலும் உயர்ந்திருப்பது எனக்கு ஸம்மதமில்லை. தமிழச்சியைக்காட்டிலும் மற்றொரு ஜாதிக்காரி அழகாயிருப்பதைக் கண்டால் என் மனம் புண் படுகிறது.

தம்பி—உள்ளமே உலகம்.

ஏறு! ஏறு! ஏறு! மேலே, மேலே! மேலே! நிற்கும் நிலையிலிருந்து கீழே விழாதபடி கயிறுகள் கட்டி வைத்துக் கொண்டு பிழைக்க முயற்சி பண்ணும் பழங்காலத்து மூடர்களைக் கண்டு குடல் குலுங்கச் சிரி.

உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்துபோ. பற! பற! மேலே, மேலே, மேலே.

* * *

தம்பி, தமிழ் நாடு வாழ்க என்றெழுது. தமிழ்நாட்டில் நோய்கள் தீர்க என்றெழுது. தமிழ் நாட்டில் வீதி தோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் மலிக என்றெழுது.

அந்தத் தமிழ்ப் பள்ளிக் கூடங்களிலே நவீன கலைகளெல்லாம் பயிற்சி பெற்று வளர்க என்றெழுது. தமிழ் நாட்டில் ஒரே ஜாதிதான் உண்டு. அதன் பெயர் தமிழ் ஜாதி. அது ஆர்ய ஜாதி என்ற குடும்பத்திலே தலைக் குழந்தை என்றெழுது. ஆணும் பெண்ணும் ஒருயிரில் இரண்டு கலைகள் என்றெழுது.

ஒன்றிலொன்று தாழ்வில்லை என்றெழுது.

பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது.

பெண்ணை அடைத்தவன் கண்ணை அடைத்தவன் என்றெழுது.

தொழில்கள், தொழில்கள், தொழில்கள் என்று கூவு.

தப்பாக வேதம் சொல்பவனைக் காட்டிலும் நன்றாகச் சிரைப்பவன் மேற்குலத்தான் என்று கூவு.

வியாபாரம் வளர்க, யந்திரங்கள் பெருகுக. முயற்சிகள் ஓங்குக. ஸங்கீதம், சிற்பம், யந்திரநூல், பூதநூல், வானநூல் இயற்கை நூலின் ஆயிரம் கிளைகள் இவை தமிழ்நாட்டிலே மலிந்திடுக என்று முழங்கு.

சக்தி, சக்தி, சக்தி என்று பாடு.

தம்பி— நீ வாழ்க.

*                *                *

உனது கடிதம் கிடைத்தது. குழந்தைக்கு உடம்பு செம்மையில்லாமல் இருந்தபடியால் உடனேஜவாப் எழுத முடியவில்லை. குழந்தை உயிர் கொண்டது. இன்று உன் விலாஸத்துக்கு நாட்டுப் பாட்டுக்கள் அனுப்புகிறேன். அவற்றைப்பகுதி பகுதியாக உனது பத்திரிகையிலும் ஞான பானுவிலும் ப்ரசுரம் செய்வித்திடுக. 'புதுமைப்பெண்' என்றொரு பாட்டு அனுப்புகிறேன். அதைத் தவறாமல் உடனே அச்சிட்டு அதன் கருத்தை விளக்கி எழுதுக. எங்கேனும், எப்படியேனும் பணம் கண்டுபிடித்து ஒரு நண்பன் பெயரால் நமக்கனுப்புக. தம்பி— உனக்கேனடா இது கடமையென்று தோன்றவில்லை? நீ வாழ்க.

உனதன்புள்ள,

பாரதி

# 8. தமிழ்

*3 ஏப்ரல், 1916*

கல்கத்தாவிலிருந்து வெளிப்படும் 'மாடன் ரெவ்யூ' என்ற மாதப் பத்திரிகையின் தை-மாசி ஸஞ்சிகையை நேற்றுப் பொழுது போக்கின் பொருட்டாகத் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதிலே திருநெல்வேலி ஹிந்து காலேஜ் சரித்திர பண்டிதர் ஸ்ரீ நீலகண்டையர் ஒரு சிறிய கடிதமெழுதியிருக்கிறார். ஏற்கெனவே மேற்படி பத்திரிகையில் ஸ்ரீயதுநாத ஸர்க்கார் என்ற வித்வான் எழுதியிருந்த சில வார்த்தைகளைக் குறித்து ஸ்ரீஐயர் தமது கருத்துக்களை வெளியிட்டார்.

கலாசாலையிலே சரித்திரப் பாடங்களை இங்கிலீஷில் கற்றுக் கொடுப்பது பயனில்லாத வீண் தொல்லையாக முடிகிறதென்றும் தேச பாஷைகளிலே கற்றுக் கொடுத்தால் நல்ல பலன் விளையு மென்றும் ஸ்ரீ ஸர்க்கார் தமது அனுபவத்திலே கண்ட செய்தியைச் சொன்னார். அதற்கு நமது திருநெல்வேலிப் பண்டிதர் சொல்லுகிறார்:— "பாஷைத் தொல்லை பெருந்தொல்லையாகவே இருக்கிறது. ஆனால் எனது ஜில்லா, எனது காலேஜ் சம்பந்தப்பட்ட வரையிலே பிள்ளைகளுக்குச் சரித்திரப் பாடம் இங்கிலீஷிலே கற்றுக் கொடுப்பதைக் காட்டிலும் தேச பாஷையில் கற்றுக் கொடுப்பது அதிகம் பயன்படுமென்று சொல்வதற்கில்லை. எனது மாணாக்கர்களிலே பெரும்பாலோர் இங்கிலீஷ் இலக்கணப் பிழைகளும் வழக்குப் பிழைகளும் நிறையச் செய்தபோதிலும் மொத்தத்திலே தமிழைக் காட்டிலும் இங்கிலீஷை நன்றாக எழுதுகிறார்கள். சரித்திர

விஷயங்களை வியவஹாரிக்கும்போது எனக்கும் இங்கிலீஷ் தான் தமிழைக் காட்டிலும் நன்ருகச் சொல்ல வருகிறது.''

இங்ஙனம் எழுதுகிற ஸ்ரீ நீலகண்டையரின் நிலைமையை நினைத்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன். சொந்த பாஷையை நேரே பேசத் தெரியாதவர்கள் சாஸ்திர பாடங்கள் நடத்தும் விநோதத்தை இந்தத் தேசத்திலே தான் பார்த்தோம். புதுமை! புதுமை!! புதுமை!!!

மேலும் இவர் தமக்குத் தாய்மொழி தெரியாதென்ற செய்தியை வங்கப் பத்திரிகைக்கு ஏன் எழுதப் போஞர் என்பது எனக்கு அர்த்தமாகவில்லை. ஜப்பானியர், சீனர், நார்வேக்காரர் முதலிய உலகத்து ஜாதியாரெல்லாம் நம்மை அறிவிலும் சாஸ்திரங்களிலும் பாஷைத் திறமையிலும் தாழ்வென்று நினைத்து வந்தார்கள். இப்போது தான் ஹிந்து ஜாதியாராகிய நாம் காட்டு மனிதரில்லை, வாலில்லாத குரங்குகளில்லை, நமக்குப் பாஷைகள் இருக்கின்றன; நமக்குள்ளே சாஸ்திர விற்பன்னர்கள் இருக்கிருர்கள்; கவிகள் இருக்கிருர்கள் என்று நம்மவரிலே சிலர் வெளியுலகத்தார் தெரிந்து கொள்ளும்படி செய்து வருகிருர்கள். இதற்குள்ளே தமிழ் வகுப்பு மற்ற ஹிந்துஸ்தான வகுப்புகளைக் காட்டிலும் குறைவுபட்டதென்று நம்மில் சிலர் முரசடிக்கத் தொடங்குவது எனக்கு நகைப்புண்டாக்குகிறது,

என்னுடைய சொந்த அபிப்பிராயத்தைக் கொஞ்சம் சொல்லி விடுகிறேன்.

உலகத்திலுள்ள ஜாதியார்களிலே ஹிந்து ஜாதி அறிவுத் திறமையில் மேம்பட்டது. இந்த ஹிந்து ஜாதிக்குத் தமிழராகிய நாம் சிகரம்போல் விளங்குகிறேம். எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு. இவற்றிலே

தமிழைப் போல வலிமையும், திறமையும், உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறொன்றுமே யில்லை.

இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளி யுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவொளி சற்றே மங்கியிருந்ததையும் நானறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் ஸத்யமில்லை. நாளை வரப்போவது ஸத்யம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவா விட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள். அதுவரையில் இங்கு பண்டிதர்களாக இருப்போர் தமக்குத் தமிழ்ச் சொல் நேரே வராவிட் டால் வாயை மூடிக்கொண்டு வெறுமே இருக்க வேண்டும். தமிழைப் பிறர் இழிவாகக் கருதும்படியான வார்த்தை கள் சொல்லாதிருக்க வேண்டும். இவ்வளவுதான் என்னு டைய வேண்டுகோள்.

# 9. தமிழ் நாட்டு நாகரிகம்

தமிழ் நாகரிகத்தைக் குறித்து சென்ற வ்யாசத்தி லே பொதுப் படையாக சில விஷயங்கள் சொன்னேன். இங்கு அவற்றைச் சற்று விஸ்தாரமாகத் தெரிவிக்கிறேன். பண்டைத் தமிழ் நாகரிகத்தில் ஸ்திரீகளுக்கு அதிகமாக ஸ்வதந்திரம் இருந்தது. இதற்குரிய காரணங்களில் முக்கியமானது யாதெனில், தமிழ் நாட்டுக்கு மூல அரண் போல் இயற்கையால் வகுப்புற்றிருக்கும் மலையாள நாட்டின் பயிற்சிக்கும் தமிழ் நாகரிகத்துக்கும் எப் போதும் அதிகமான ஊடாட்டமிருந்துகொண்டு வந்தது. மலையாளத்து நாகரிகமோ ஸ்திரீகளை முன்னிட்டு விளங்குவது.

மிகப் பழைய தமிழ் பாஷையும் மிகவும் புராதன மான மலையாள பாஷையும் ஒரே வஸ்துதான். பிற் காலத்திலும் சேர நாடு தமிழகத்தில் ஒரு பகுதியாகவே கணக்கிடப்பட்டு வந்தது. சேரரனைவரும் தமிழரசரே; தமிழ் நாட்டு வேந்தருள்ளே சேர்த் தென்னப்பட்டு வந்தனர். பாஷையை யொப்பவே நாகரிக விஷயத்திலும் மிகப் பழைய தமிழ் நாகரிகமும் மிகப் பழைய மலையாள நாகரிகமும் ஒரே வஸ்துதான்.

பிற்காலத்தில் மலைக்கோட்டைக்கு உட்பட்ட மலை யாள நாடு பழைய தமிழ் நாகரிகத்தை இயன்றவரை சிதையாமல் காப்பாற்றிக் கொண்டு வந்தது மலை யடிக்கு கீழக்கே மைதானத்தின் மீது வளர்ச்சி பெற்ற தமிழ் நாகரிகமோ வெனில், தெலுங்கு முதலிய வட நாட்டுப் பயிற்சிகளின் ஊடாட்டத்தால் நாளுக்கு நாள்

அதிக மாறுதல் பெற்று ஹிந்து தேசத்தின் பொது நாகரி கத்தை அனுசரித்து வருவதாயிற்று.

எனினும், மலையாளத்துப் பழக்கம் ஒரு போதும் நீங்கவே யில்லை. மலைநாட்டு ஆண் மக்கள் உலமெங்கும், புலி, கரடி, ஓநாய் முதலிய மலை மிருகங்களுடன் போராடி யும், மலைவெப்பத்துக்கும் மலை மழைக்கும் மலைப்பனிக்கும் மலைத் தீக்கும் தப்பியும், கஷ்டத்துடன் பிழைக்க வேண்டி யவர்களாதலால், மைதானங்களில் வாழும் ஜனங்களைப் போல் ஸ்த்ரீகளின் விஷயத்தில் அதிக கடின சித்தமில் லாமல் அவர்களைத் தயவுடனும், மதிப்புடனும் நடத்து வது வழக்கம். ஐரோப்பாவுக்குள்ளே ஸ்விட்சர்லாண்டு தேசத்து மலைப் பெண்கள் மற்றப் பகுதியிலுள்ள மாதரைக் காட்டிலும் ஸ்வதந்திர முடையோராக வாழ்ந்து வருகின்றனர்.

மலையாளத்திலோ, மாதர்கள் மிக உயர்ந்த சுதந்திர முடையோர்களாக யிருப்பது மட்டுமேயன்றி, சொத்து டைமை அங்கு பெண் சந்ததியாருக்கு ஏற்பட்டிருக்கிறது. இவ்விதமான மலையாள நாகரிகத்துள் நெருங்கிப் பழகி ஊடாடிக்கொண்டு வந்திருப்பதனின்றும், தமிழ் நாட்டு நாகரிகமும் இங்குள்ள மாதர்களுக்கு— ஹிந்து தேசத்தின் மற்றப் பகுதிகளிலுள்ள மாதர்களைக் காட்டிலும் — அதிக ஸ்வதந்திரம் கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறது. முகம் மதிய நாகரிகத்தின் ஆதிக்கம் பலமடைந்திதின்றும் வட இந்தியாவில் மேல் ஜாதி ஹிந்து ஸ்திரீகள் கோஷா என்ற முகம்மதிய வழக்கத்தைக் கொள்ளும்படி ஏற் பட்ட காலத்திலே கூட, தமிழ் நாட்டிலும் அதன் நாகரி கத்தைத் தழுவிய தெலுங்கு, கன்னடம் முதலிய நாடு களிலும் அந்த வழக்கம் உண்டாகவில்லை.

மேலும் உலகத்திலுள்ள மாதர்களுக் கெல்லாம் நீதி ஆண் மக்களாலேயே விதிக்கப்பட்டது. தமிழ் நாட்டு

மாதரும் ராஜநீதி சம்பந்தப்பட்ட சிறிதளவிலே பொது வான ஆண் சட்டத்துக்குக் கீழ்ப்பட்டிருந்தனரேயாயினும் ஜன ஸமூஹ நீதிகளின் விஷயத்தில் தமிழ் நாட்டில் எப்போதும் ப்ரமாணமாக இயன்று வருவது ஔவையின் நீதி வாக்கியங்களும் நீதி நூல்களுமேயாம், ஆண் மக்களிலேகூட உயர்ந்த கல்வி பயின்ரோர் மாத்திரமே ஜன ஸமூஹ விஷயங்களில் வள்ளுவர் 'குறள், நாலடியார் முதலியவற்றை ப்ரமாணமாகக் கூறுவர். அதிகப் படிப் பில்லாதவர்களும் படிப்பே தெரியாதவர்களுமாகிய ஜனங்கள் ஆண் பெண் அனைவருக்கும் ஔவையாரின் நீதியே வழிகாட்டி. தமிழ் ஜனங்கள் பெரும்பான்மை யோருக்கு சுமார் சென்ற இரண்டாயிரம் வருஷங்களாக ஔவையாரின் நீதியே ப்ரமாணமாக நடைபெற்று வருகின்றது.

ஸாமான்ய ஜனங்கள் ஔவை நீதியைக் கொண்டாடி வருகிறார்களெனில், கற்ரோரும் அரசரும் அதைப் புறக் கணித்து வந்தார்களென்று கருதுதல் வேண்டா. கற்ரோ ருக்கும் அரசர்க்கும் தமிழ் மக்கள் எல்லோருக்கும் குறள், நாலடியார் முதலிய நூல்களைக் காட்டிலும் ஔவையின் நூல்களில் அகப் பற்றுதலும் அபிமானமும் இருந்து வருகின்றன. ஆனால், இந்த நீதி நூல்கள் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னேயிருந்த முதல் ஔவையால் இயற்றப்பட்டன அல்ல வென்றும் சுமார் ஆயிரம் வருஷங் களுக்கு முன்னேயிருந்த இரண்டாம் ஔவையால் செய்யப் பட்டன என்றும் ஒரு கட்சியார் சொல்லுகிருர்கள்.

ஔவையார் வெறுமே நூலாசிரியர் மட்டுமல்லர். அவர் காலத்திலேயே அவர் ராஜநீதியில் மிகவும் வல்லவ ரென்று தமிழ் நாட்டு மன்னர்களால் நன்கு மதிக்கப்பெற்று ராஜாங்கத் தூதில் நியமனம் பெற்றிருக்கிருர். மேலும்

அவர் சிறந்த ஆத்ம ஞானி; யோக சித்தியால், உடம்பை முதுமை, நோவு, சாவுகளுக்கு இரையாகாமல் நெடுங்காலம் காப்பாற்றி வந்தார்.

"மாசற்ற கொள்கை மனத்தமைந்தக்கால்
ஈசனைக் காட்டு முடம்பு"

அதாவது, ஹிருதயத்தில் சுத்தமான, பயமற்ற, கபட மற்ற, குற்றமற்ற, பகையற்ற எண்ணங்களை நிறுத்திக் கொண்டால், உடம்பில் தெய்வத்தன்மை, அதாவது சாகாத்தன்மை (அமரத்தன்மை) விளங்கும் என்றும் பொருள் படுவது. இந்தக் குறள் பாடியவர் ஔவையார். இவர் தாமே நெடுந்தூரம் இக்கொள்கைப்படி ஒழுகியவ ரென்பது இவருடைய சரித்திரத்தில் விளங்குகிறது.

ஒரு தேசத்தின் நாகரிகத்துக்கு அந்த தேசத்தின் இலக்கியமே மேலான அடையாளமென்று முந்திய வியாசத் தில் சொன்னேன். திருஷ்டாந்தமாக ஆங்கிலேய நாகரிகத் துக்கு 'ஷேக்ஸ்பியர்' முதலிய மஹா கவியின் நூல்களே அளவுக் கருவியாகக் கருதப்படுகின்றன. 'நாங்கள் இந்தியா தேசத்து ராஜ்யாதிகாரத்தை இழக்க ஒருப்பட்டாலும் ஒருப்படுவோமேயன்றி ஷேக்ஸ்பியரை இழக்க ஒரு நாளும் ஒருப் படமாட்டோம்' என்று நாம் மறுமொழி சொல்வோ மென்று மெக்காலே என்னும் ஆங்கிலேய ஆசிரியர் சொல்லுகிறார்.

இந்த மாதிரியாகப் பெருமைப் படுத்தி நம்மவர் கம்பனைச் சொல்லலாம்; திருவள்ளுவரைச் சொல்லலாம்; சிலப்பதிகார மியற்றிய இளங்கோவடிகளைக் கூறலாம்; இன்னும் பல புலவர்களைக் காட்டலாம். எனினும், கம்பர் திருவள்ளுவர் முதலிய பெரும் புலவராலேயே தம் அனைவரி லும் மிகச் சிறந்தவராகக் கருதப்பட்ட ஔவைப் பிராட்டி

யையே மிகவும் விசேஷமாக எடுத்துச் சொல்லக்கூடும். "தமிழ் நாட்டின் மற்றச் செல்வங்களையெல்லாம் இழந்து விடப் பிரியமா? ஔவையின் நூல்களை இழந்துவிடப் பிரியமா?" என்று நம்மிடம் யாரேனும் கேட்பார்களாயின், மற்றச் செல்வங்களை யெல்லாம் பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை. அவற்றைத் தமிழ்நாடு மீண்டும் சமைத்துக் கொள்ள வல்லது. ஔவைப் பிராட்டியின் நூல்களை இழக்க ஒருபோதும் சம்மதப்படமாட்டோம். அது மீண்டும் சமைத்துக் கொள்ள முடியாத தனிப் பெருஞ் செல்வம்" என்று நாம் மறுமொழி உரைக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். தமிழ் நாட்டு நாகரிகத்துக்கு இத்தனை பெரும் செல்வமாகவும், இத்தனை ஒளி சான்ற வாடாவிளக் காகவும் தனிப்பேரடையாளமாகவும் தமிழ் மாதொருத் தியின் நூல்கள் விளங்குவது நமது நாட்டு ஸ்திரீகளுக்குப் பெரு மகிழ்ச்சி தரத்தக்கதொரு செய்தியன்றோ? இஃது தமிழ் ஸ்திரீகளுக்கு வெறுமே புகழ் விளைவிப்பது மாத்திர மன்று. அவர்களுக்கு கிரமமான காவலுமாகும். ஔவை யார் பிறந்த நாட்டு மாதரை, ஔவையார் இனத்து மாதரை, ஆண் மக்களைக் காட்டிலும் அறிவிலே குறைந்த கூட்டத்தாரென்று வாய் கூசாமல் எவனும் சொல்லத் துணிய மாட்டான். மற்ற தேசங்களில், திருஷ்டாந்தமாக இங்கிலாந்து தேசத்தை எடுத்துக் கொள்ளுங்கள், அங்கே ஆண் மக்களுக்கு சமானமான உரிமைகளை பெண்களுக்குக் கொடுப்பது தகாதென்று வாதம் பண்ணுகிற கக்ஷியார், மாதர்கள் இயற்கையிலேயே ஆண் மக்களைக் காட்டிலும் அறிவில் குறைந்தவர்களென்றும், ஆதலால் வீட்டுக் காரியங்களுக்கே அவர்கள் தகுதியுடையோராவாரல்லாது அறிவுண்மையால் நடத்த வேண்டிய நாட்டுப் பொதுக் காரியங்களை நிர்வகிக்க அவர்களுக்கு திறமை கிடையா தென்று தர்க்கிக்கு மிடத்தே, அதற்கு ஒரு ஸாக்ஷியமாக

"ஆண் மக்களில் ஷேக்ஸ்பியர் என்னும் கவியரசர் எழுதியிருப்பது போன்ற கவிதை எழுதும் திறமை கொண்ட ஸ்திரீ ஒருத்தி நமது நமது நாட்டில் எப்போதேனும் தோன்றியிருப்பதுண்டா? ஏன் தோன்றவில்லை? இதனால் இயற்கையிலே ஸ்திரீகள் ஆண் மக்களைக் காட்டிலும் புத்தியில் குறைந்தவர்களென்பது தெளிவாக விளங்குகின்றதன்றோ?" என்கிறார்கள்.

தமிழ்நாட்டிலோவெனில், இப்படிப்பட்ட வாதம் செல்லாது. அதற்கு நேர் எதிரிடையாக இந்நாட்டில் ஸ்திரீகள்:—"ஒளவையாரைப் போல் கவிதையும் சாத்திரமும் செய்யக்கூடிய ஓர் ஆண் மகன் இங்கு பிறந்திருக்கிறானா? ஏன் பிறக்கவில்லை? இதனின்றும் ஆண்மக்கள் இயற்கையிலேயே பெண்களைக் காட்டிலும் அறிவுத்திறமையில் குறைந்தவர்களென்பது தெளிவாக விளங்குகிறதன்றோ?" என்று வாதிக்கக்கூடிய நிலைமையிலிருக்கிறார்கள்.

மகிமை பொருந்திய ஆத்ம ஞானியாகிய ஒளவையார் இயற்றியிருக்கும் "ஒளவை குறள்" என்ற ஞானநூல் தமிழ் நாட்டு யோகிகளாலும் சித்தர்களாலும் உபநிஷத்துக்களுக்குச் சமானமாகப் போற்றப்பட்டு வந்திருக்கிறது. யோக சாஸ்திரத்துக்கும் மோக்ஷ சாஸ்த்திரத்துக்கும் இந்நூல் முக்கிய பாடங்களில் ஒன்றாகக் கருதத்தக்கது. மேலும் யோகாநுபூதி ஸம்பந்தமாகப் பிறர் எழுதுமிடத்தே மிகவும் கடினமும் அஸாதாரணமுமாகிய சொற்களையும் வாக்கியங்களையும் வழங்குதல் இன்றியமையாததென்ற கருத்துடன் வேலை செய்திருக்கிறார்கள். ஒளவையின் நூலோ மிகத் தெளிந்த, மிக எளிய தமிழ்நடையில் எல்லா ஜனங்களுக்கும் பொருள் விளங்கும்படியாக எழுதப்பட்டிருக்கிறது. "சுருங்கச்சொல்லி விளங்க வைத்தல்" என்பது கவிதைத் தொழிலில் மிகவும் உயர்ந்த தொழில். இதில்

ஔவை ஒப்பற்றவள். இத்துடன் மிகவும் அருமையான நுட்பமான விஷயங்களை யாவருக்கும் அர்த்தமாகும்படி மிகவும் எளிய நடையில் சொல்வதாகிய அற்புதத்தொழிலை உயர்ந்த கவிராசர்களே தெய்வீகத் தொழில் என்றும் தெய்வ சக்தி பெருத சாதாரணக் கவிகளுக்கு சாத்தியப் படாத தொழில் என்றும் கருதுகிருர்கள். இந்த அற்புத தொழிலிலும் ஔவை நிகரற்ற திறமை வாய்ந்தவள்.

புருஷார்த்தங்கள், அதாவது மானிட ஜன்மம் எடுத்ததினின்றும் ஒருவன் அடையக்கூடிய மிக உயர்ந்த பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில் வீடு என்று சொல்லப்படும் முக்தி வாக்குக்கும் மனதுக்கும் எட்டாததாகையால் அதனை விரித்துக்கூற முயலாமல், அதற்குச் சாதனமாகிய தெய்வ பக்தியை மாத்திரம் முதல் அத்யாயத்தில் கூறி நிறுத்திவிட்டு, மற்ற மூன்று புருஷார்த்தங்களையும், விளக்கி, திருவள்ளுவநாயனர் 'முப்பால்' (மூன்று பகுதிகளுடையது) என்ற பெயருடைய திருக்குறள் செய்தருளினர். ஆயிரத்து முன்னூற்று முப்பது சிறிய குறட் பாக்களில் நாயனர் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலையும் அடக்கிப் பாடியது மிகவும் அபூர்வமான செய்கை என்று கருதப்பட்டது. இது கண்ட ஔவைப் பிராட்டி வீட்டுப் பாலையும் கூட்டி நன்கு புருஷார்த்தங்களையும் ஒரே சிறிய வெண்பாவுக்குள் அடக்கிப் பாடினர். இந்த ஆச்சரியமான வெண்பா பின்வருமாறு:—

"ஈதலறம்; தீவினைவீட்டீட்டல் பொருள்; எஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே இன்பம்; பரனை நினைந்திம் மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."

இவ்வெண்பாவின் கருத்து யாதெனில், ஈதலாவது அருள் செய்தல்அல்லது கொடுத்தல் என்றும் பொருள்படும்.

அதாவது, உலகத்தாருக்குப் பயன்படும் வண்ணமாக நம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் பண்ணிவிடுதல்; நமது பொருளாலும், வாக்காலும் மனத்தாலும், உடற் செய்கையாலும், பிறருடைய கஷ்டங்களை நீக்கி அவர்களுக் கினியன செய்தல்; பொருள் கொடுப்பது மாத்திரமே ஈகை யென்று பலர் தவருகப் பொருள் கொள்கிருர்கள். பிறர் பொருட்டாக நம் உயிரைக் கொடுத்தல் கொடையன்ருே? வைத்தியம் முதலிய சிகிச்சைகளால் பிறருக்குப் பிராண தானம் செய்தல் ஈகையன்ருே? பொருள் முதலிய நலன் களையெல்லாம் ஒருவன் தனக்குத்தானே சேகரித்துக் கொள்ளக்கூடிய திறமை அவனுக்கு ஏற்படும்படி அவனுக் குக் கல்வி பயிற்றுதல் தானமாகாதா?

எனவே, கைம்மாறு கருதாமல் பிறருக்கு எவ்விதத்தி லேனும் செய்யப்படும் கஷ்ட நிவாரணங்களும் அனுகூலச் செயல்களும் ஈகை எனப்படும். இதுவே மனிதனுக்கு இவ் வுலகத்தில் அறம், அல்லது தர்மம், அல்லது கடமையாம். இனி தீய செயல்கள் செய்யாதபடி எவ்வகைப்பட்ட அறிவு முயற்சியலேனும் சரீர முயற்சியாலேனும் சேகரிக்கப்படும் உணவு, துணி முதலிய அவசியப் பண்டங்களும், குதிரை வண்டிகள், ஆபரணங்கள் வாத்தியங்கள், பதுமைகள் முதலிய சௌக்கிய வஸ்துக்களும், இவற்றை அனுபவிப்ப தற்குச் சாதனங்களாகிய வீடு, தோட்டம் முதலியனவும் இப் பண்டங்களுக்கெல்லாம் பொதுக் குறியீடும் பிரதியு மாக மனிதரால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கும் பொற்காசு, வெள்ளிக் காசு, காகிதப் பணம் முதலியனவும் செல்வம் அல்லது அர்த்தம் எனப்படும். நற்செயலாலே சேர்க்கப்படும்பொருளே இன்பத்தைத் தருவதாகையாலும் தீச்செயல்கள் செய்து சேர்க்கும் பொருள் பலவிதத் துன் பங்களுக்கு ஹேதுவாய் விடுமாகையாலும், தீவினைகள் விட்டுச் சேர்ப்பதே பொருள் என்னும் பெயர்க்குரிய

தென்றும் தீவினைகளாலே சேர்ப்பது துன்பக் களஞ்சியமே யாகுமென்றும் ஔவையார் குறிப்பிட்டருளினார்.

இனி இன்பத்துக்கு ஔவையார் கூறும் இலக்கணமோ நிகரற்ற மாண்புடையது. காதலின்பத்தையே முன்னோர் இன்பமென்று சிறப்பித்துக் கணக்கிட்டனர். பொருளைச் சேர்ப்பதிலும் அறத்தைச் செய்வதிலும் தனித்தனியே பலவகையான சிறிய சிறிய இன்பங்கள் தோன்றும். ஆயினும், இவ் காதலின்பத்துக்குத் துணைக்கருவிகளாவது பற்றியே ஒருவாறு இன்பங்களென்று கூறத் தக்கனவாம். உலகத்தில் மனிதர் ருசியான பதார்த்தங்களை உண்டல்; நல்ல பாட்டுக்கேட்டல், நல்ல மலர்களை முகர்தல் முதலிய இந்திரிய இன்பங்களை விரும்பி அவற்றை அடையும் பொருட்டு மிகவும் பாடுபடுகிறார்கள். அதிகார இன்பம், புகழின்பம் முதலிய எண்ணற்ற வேறு பலஇன்பங்களுக்காகவும் உழைக்கிறார்கள். ஆனால், இவையெல்லாம் அற்பமான இன்பங்களென்று கருதி முன்னோர் இவற்றை இன்பப் பாலிலே சேர்க்கவில்லை. புகழ், அதிகாரம் முதலியவற்றை அறத்துப்பாலிலும் பொருட்பாலிலும் சார்ந்தனவாக கணித்தார்கள். இந்திரிய இன்பங்களுக்குள்ளே இனிய பக்ஷணங்களையும் கனிகளையும் உண்டல், மலர்களை முகர்தல் முதலியன மிகவும் எளிதிலே தெவிட்டக் கூடியனவும், வெறுமே சரீர சுகமாத்திரமன்றி ஆத்ம சுகத்துக்கு அதிக உபகார மில்லாதனவு மாதல் பற்றி அவற்றையும் இன்பப் பாலிலே சேர்க்கவில்லை.

''கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடிக் கண்ணேயுள''

என்று திருவள்ளுவர் பாடியிருக்கிறார்.

'கண்டல், கேட்டல், உண்டல், மோப்பு, தீண்டுதல் எனும் ஐவகை இந்திரியங்களையும் ஒருங்கே இன்புறுத்தும் இயல்பு ஒளிபொருந்திய வளையணிந்த இப்பெண்ணிடத்தே

தானுள்ளது என்பது அக்குறளின் பொருள். இதனுடன் உயிருக்கும் மனத்துக்கும் ஆத்மாவுக்கும் சேர இன்பமளிப்ப தனால் காதலின்பம் இவ்வுலக இன்பங்களனைத்திலும் தலைமைப்பட்ட தாயிற்று. ஆதலால் நான்கு புருஷார்த் தங்களுள் அதாவது மனிதப் பிறவி எடுத்ததனால் ஒருவன் எய்தக்கூடிய பெரும் பயன்களைக் கணக்கிடப் புகுந்த இடத்து நம் முன்னோர் காதலின்பத்தையே இன்பமென் னும் பொதுப் பெயரால் சொல்லியிருக்கிறார்கள். இங்ஙனம் இன்பமென்ற பொதுப் பெயரால் சிறப்பித்துக் கூறத்தக்க பெருஞ்சுவைத் தனியின்பம் மனிதனுக்குக் காதலின்பமே யாகும் என்பதையும், அவ்வின்பத்தை தவறுதலின்றி நுகர் தற்குரிய வழியின்னதென்பதையும் ஔவைப் பிராட்டியார் சால இனிய தமிழ் சொற்களிலே காட்டி அருள் புரிந்திருக் கிறார்.

ஒருவன் ஒருத்தியினிடத்திலும், ஒருத்தி ஒருவனிடத் திலும் மனத்தாலும் வாக்காலும் செய்கையாலும் கற்பு நெறி தவறாமல் நித்தியப் பற்றுதலுடையோராய் மன ஒருமை யெய்தித் தம்முள் ஆதரவுற்றுத்துய்க்கும் இன்பமே இன்பமெனத் தகும் என்று ஔவையார் கூறுகிறார்.

இனி, முக்தியாவது யாதெனில்—கடவுளை உள்ளத்தி லிருத்தி, தானென்ற கொள்கையை மாற்றி ஈசபோதத்தை யெய்தி, மேற்கூறிய மூன்று புருஷார்த்தங்களிலும் பொறுப்பு நீங்கியிருப்பதே முக்தி. இந்த முக்தி பெறுவ தனால் ஒருவன் மற்ற மூன்று புருஷார்த்தங்களிலும் எவ் விதமான ஸம்பந்தமுமில்லாமலே செய்கையற்று மடிந்து கிடப்பானென்றெண்ணுதல் பெருந் தவறு. உயிர் உள்ள வரை ஒருவன் தொழில் செய்யாதிருக்கக் கடவுளுடைய இயற்கை இடங் கொடாது. "யாவனாயினும் (மனத்தா லேனும் வாக்காலேனும்,உடம்பாலேனும்) யாதேனுமொரு விதமான செய்கை செய்துகொண்டிராமல் சும்மாயிருத்தல்

ஒரு க்ஷணங் கூட ஸாத்தியப்படாது. இயற்கையிலே பிறக்கும் குணங்களால் ஒவ்வொருவனும் தன் வசமின்றியே எப்போதும் தொழில் செய்து கொண்டிருக்கும்படி வற்புறுத்தப்படுகிறுன்" என்று கண்ணபிரான்பகவத்கீதையில் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறுர்.

இன்னும் ஔவைப் பிராட்டியின் நூல்களிலுள்ள வசனங்களை உதாரணம் காட்டி அவருடைய மகிமைகளையெல்லாம் விளக்கிக் கூற வேண்டுமாயின் அதற்கு எத்தனையோ சுவடிகள் எழுதியாகவேண்டும். நமது வியாசமோ ஏற்கெனவே மிகவும் நெடிதாய்விட்டது. ஆதலால் இந்தக் கவியரசியைக் குறித்துத்தற்காலத்தினர்தெரிந்து கொள்ள வேண்டிய அம்சங்களில் மிகவும் முக்கியமான, எனக்குத் தோன்றுவனவற்றை மற்ெருரு வியாஸத்தில் சுருக்கமாகச் சொல்ல உத்தேசம் கொண்டிருக்கிறேன்.

தமிழ் நாட்டு மாதராகிய, என் அன்புக்கும் வணக்கத்துமுரிய சகோதரிகளே, இத்தனை பெருமை வாய்ந்த தமிழ் நாகரிகத்தின் எதிர்கால வாழ்வு உங்களுடைய பயிற்சிகளையும் பொறுத்திருக்கிறது. பூமண்டலத்தில் நிகரில்லாத அருஞ் செல்வமுடைய சேம நிதியொன்றுக்கு கடவுள் உங்களைக் காவலாகநியமித்திருக்கின்றுன். மனித உலகமோ இந்த நேரத்தில், பிரமாண்டமான சண்ட மாருதங்களைப் போன்ற மாறுதல்களாலும் கிளர்ச்சிகளாலும், புரட்சிகளாலும், கொந்தளிப்புற்ற கடலிடைப்பட்டதொரு சிறு தோணிபோல் அலைப்புண்டும், புறளுண்டும், மோதுண்டும், எற்றுண்டும், சுழற்றுண்டும் தத்தளிக்கிறது. இந்த மஹா ப்ரளய காலத்தில் தமிழ் நாகரிகம் சிதறிப் போகாதிருக்கும்படி கடவுள் அருள் புரிவாராகுக. அஃது அங்ஙனம் சிதருமலிருக்குமாறு தகுந்த கல்விப் பெருமையாலும், ஒழுக்க மேன்மையாலும் விடுதலையின் சக்திகளாலும் அதைக் காப்பாற்றக்கூடிய திறமையை உங்களுக்கு பர ப்ரம்மம் அருள் செய்க.

# 10. தமிழின் நிலை

கல்கத்தாவில் "ஸாஹித்ய பரிஷத்" (இலக்கியச் சங்கம்) என்றொரு சங்கமிருக்கிறது. அதைத் தென்னாட்டிலிருந்து ஒருவர் சிறிது காலத்திற்கு முன்பு போய்ப் பார்த்துவிட்டு வந்து அச் சங்கத்தார் செய்யும் காரியங்களைப்பற்றி "ஹிந்து" பத்திரிகையில் ஒரு விஸ்தீர்ணமான லிகிதம் எழுதியிருக்கிறார். மேற்படி பரிஷத்தின் நிலைமையையும் காரியங்களையும் அவர் நமது மதுரைத் தமிழ்ச் சங்கம் முதலிய தமிழ் நாட்டு முயற்சிகளுடன் ஒப்பிட்டுக் காட்டி, நம்மவரின் ஊக்கக் குறைவைப் பற்றி மிகவும் வருத்தப்படுகிறார். தெலுங்கர், மலையாளத்தார், கன்னடர் எல்லாரும் தத்தம் பாஷைகளின் வளர்ச்சியின் பொருட்டு வருஷாந்தரப் பெருங்கூட்டங்கள் நடத்தி வருகிறார்கள். அவற்றால் விளையும் பயன் நமது சங்கத்தாரின் காரியங்களால் தமிழ் நாட்டிற்கு விளையவில்லை. வங்காளத்திலுள்ள 'ஸாஹித்ய பரிஷத்'தின் நோக்கமென்ன வென்றால், 'எல்லா விதமான உயர்தரப் படிப்புக்களும் வங்காளப் பிள்ளைகளுக்கு வங்காளி பாஷையில் கற்றுக் கொடுக்கும் காலத்தை விரைவில் கொண்டு வந்து விடவேண்டும்' என்பது 'விரைவாகவே இந்த நோக்கத்தை அவர்கள் நிறைவேற்றி விடுவார்கள்' என்பது பல அடையாளங்களினால் நிச்சயமாகத் தோன்றுகிறது என்று அந்த லிகிதக்காரர் சொல்லுகிறார். வங்காளிகளின் விஷயம் இப்படியிருக்க, மயிலாப்பூரில் சிறிது காலத்திற்கு முன்னே நடந்த ஸ்ரீ வைஷ்ணவ சபைக் கூட்டத்தில் பெரும்பான்மையோர் இங்கிலீஷ் தெரியாத வைதீக பிராமணராக இருந்தும் அதிலே சில இங்கிலீஷ் உபந்நியாஸங்கள் நடந்ததை எடுத்துக்காட்டி மேற்படி

லிகிதக்காரர் பரிதாபப்படுகிறார். 'நமது ஜனத்தலைவர்கள் இங்கிலீஷில் யோசிப்பதையும் பேசுவதையும் நிறுத்தினால் ஒழிய நமது பாஷை மேன்மைப்பட இடமில்லை' என்று அவர் வற்புறுத்திச் சொல்லுகிறார்.

மேற்படி லிகிதக்காரர், தமது கருத்துக்களை இங்கிலீஷ் பாஷையில் எழுதி வெளியிட்டிருப்பது போலவே தமிழில் எழுதித் தமிழ் பத்திரிகைகளில் பிரசுரப்படுத்தி இருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஸபைகள், ஸங்கங்கள், பொதுக் கூட்டங்கள், வருஷோத்ஸவங்கள், பழஞ்சுவடிகள் சேர்த்து வைத்தல், அவற்றை அச்சிடல் இவையெல்லாம் பாஷை வளர்ச்சிக்கு நல்ல கருவிகள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் தமிழ் மக்கள் தமது மொழியை மேன்மைப்படுத்த விரும்பினால் அதற்கு முதலாவது செய்யவேண்டிய காரியம் ஒன்று உண்டு. அதாவது கால விசேஷத்தால் நமது தேசத்திலே விசாலமான லௌகிக ஞானமும் அதனைப் பிறருக்கு உபயோகப்படும்படி செய்வதற்கு வேண்டிய அவகாசம் பதவி முதலிய ஸௌகர்யங்களும் படைத்திருப்பவராகிய இங்கிலீஷ் படித்த வக்கீல்களும், இங்கிலீஷ் பள்ளிக்கூடத்து வாத்தியார்களும், தமது நீதி ஸ்தலங்களையும், பள்ளிக் கூடங்களையும் விட்டு வெளியேறியவுடனே இங்கிலீஷ் பேச்சை விட்டுத் தாம் தமிழரென்பதை அறிந்து நடக்கவேண்டும். பந்தாடும்போதும், சீட்டாடும்போதும், ஆசாரத் திருத்த ஸபைகளிலும், வர்ணாச்ரம ஸபைகளிலும் எங்கும், எப்போதும், இந்தப் "பண்டிதர்கள்" இங்கிலீஷ் பேசும் வழக்கத்தை நிறுத்தினால், உடனே தேசம் மாறுதலடையும். கூடியவரை, இவர்கள் தமிழெழுதக் கற்றுக் கொள்ள வேண்டும். இவர்கள் அத்தனை பேரும் தமிழ் பத்திரிகைகளில் லிகிதங்களாகவும், இவர்கள் எழுதுகிற கதை, காவியம், விளையாட்டு வார்த்தை, வினை வார்த்தை, சாஸ்திர விசாரணை, ராஜ்ய நீதி எல்லாவற்றையும் தமிழில்

எழுத வேண்டும். தமிழ்ப் பத்திரிகைகள் நடத்துவோர் இப்போது படுங் கஷ்டம் சொல்லுந்தரம் அல்ல. வெளியூர் வர்த்தமானங்களைத் தவிர மற்றபடி எல்லா விஷயங்களும் பத்திராதிபர்கள் தாமே எழுதித் தீரவேண்டியிருக்கிறது. வெளியூர்களிலுள்ள "ஜனத்தலைவரும்" ஆங்கில பண்டித "சிகாமணிகளும்" தமிழ்ப் பத்திரிகைகளைச் சரியானபடி கவனிப்பதில்லை. அந்தந்த ஊரில் நடக்கும் பொதுக் காரியங்களையும், அவரவர் மனதில் படும் புது யோசனைகளையும் தெளிந்த தமிழிலே எழுதி தமிழ்ப் பத்திரிகைகளுக்கு அனுப்புதல் மிகவும் ஸுலபமான காரியம். ஜனத்தலைவர்களால் இக்காரியம் செய்ய முடியாத பக்ஷத்தில் பிறருக்குச் சம்பளம் கொடுத்தாவது செய்விக்க வேண்டும்.

## நூலாசிரியர் பாடு

பத்திராதிபரின் கஷ்டங்கள் அதிகமென்று சொன்னேன். இக்காலத்தில் தமிழ் நூலாசிரியர் படுங் கஷ்டங்களை ஈசனே தீர்த்துவைக்க வேண்டும். உண்மையான கவிதைக்குத் தமிழ் நாட்டில் தக்க மதிப்பில்லை. இங்கிலீஷ் பாஷையிலிருந்து கதைகள் மொழிபெயர்த்துப் போட்டால் பலர் வாங்கி வாசிக்கிறார்கள். அல்லது, இங்கிலீஷ் முறையைத் தழுவி மிகவும் தாழ்ந்த தரத்தில் பலர் புது நாவல்கள் எழுதுகிறார்கள்; அவர்களுக்குக் கொஞ்சம் லாபமேற்படுகிறது. தமிழில் உண்மையான இலக்கியத் திறமையும் தெய்வ அருளும் பொருந்திய நூல்கள் எழுதுவோர் ஒரு சிலர் தோன்றியிருக்கிறார்கள். இவர்களுடைய தொழிலை அச்சடிப்பாரில்லை; அச்சிட்டால் வாங்குவாரில்லை. அருமை தெரியாத ஜனங்கள் புதிய வழியில் ஒரு நூலைக் காணும்போது அதில் ரஸ மனுபவிக்க வழியில்லை. இங்கிலீஷ் படித்த "ஜனத்தலைவர்" காட்டும் வழியையே மற்றவர்கள் பிரமாணமென்று நினைக்கும்படியான நிலைமை

யில் தேசம் இருக்கிறது. இந்தப் 'பிரமாணஸ்தர்கள் தமிழ் நூல்களிலே புதுமையும் வியப்பும் காணுவது சாத்தியமில்லை என்ற நிச்சயத்துடனிருக்கிறார்கள். ஆகவே, நூலாசிரியர், தமக்குத் தெய்வம் காட்டிய தொழிலிலே மேன்மேலும் ஆவலுடன் பாடுபட வழியில்லாமல், வேறு தொழில் செய்யப்போய் விடுகிறார்கள்.

காலம் சென்ற ராஜமையர் புதிதாகத் தமிழ்க் கதை எழுதுவதில் உண்மையான திறமை காட்டியிருக்கிறார். அவருக்குத் தகுந்த சம்மானமில்லை. ஆதலால், அவர் அந்தத் திறமையை மேன்மேலும் வளர்த்துக் கொண்டு போக இடமில்லாமல், ஆரம்பத்திலேயே கைவிட்டு, இங்கிலீஷ் மாதப்பத்திரிகை நடத்தப் போய்விட்டார். ஜமீன்தார்கள் மீதும், பிரபுக்கள் மீதும், 'காமா சோமா' என்று புகழ்ச்சிப் பாட்டுகள் பாடினால், கொஞ்சம் சம்மானம் கிடைக்கிறது. உண்மையான தொழிலுக்குத் தகுந்த பயன் கிடைக்கவில்லை. மேற்படி 'பிரமாணஸ்தர்' தமிழ் மணத்தை விரும்பாமல் இருந்ததால், இந்த நிலைமை உண்டாய் விட்டது. ஆகையால், இங்கிலீஷ் படித்த தமிழ் மக்கள்—முக்கியமாக, வக்கீல்களும் பள்ளிக்கூடத்து வாத்தியார்களும்—தமது வாக்கிலும் மனத்திலும் தமிழரசியைக் கொலுவிருக்கும்படி செய்து வணங்கவேண்டுமென்றும், அதுவே இப்போதுள்ள ஸ்திதியில் தமிழ் வளர்ப்புக்கு மூலஸாதனமாகுமென்றும் அறிக்கையிட்டுக் கொள்ளுகிறேன்.

## 11. தமிழ் நாட்டின் விழிப்பு

### பத்திரிகைகளின் நிலைமை

கும்பகர்ணன் தூங்கினனும். இலங்கையில் சண்டை நடக்கிறது. மூன்று லோகமும் நடுங்குகிறது. "ராம ராவண யுத்தத்திற்கு ராமராவண யுத்தமே நிகர்' என்று முன்னோர் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சண்டையின் அதிர்ச்சியிலே கூட, கும்பகர்ணனுடைய தூக்கம் கலையவில்லை. ஆயிரக்கணக்கான ஆடுமாடு குதிரைகளின் காலில் கூர்மையான கத்திகளைக் கட்டி அவன் மேலே நடக்கச் சொன்னார்கள்; தூக்கம் கலையவில்லை. ஏழெட்டு மேகங்களை அவன் காதுக்குள்ளே போய் இடியிடிக்கச் சொல்லி ராவணன் கட்டளையிட்டானும்; மேகங்கள் போய் இடித்தனவாம்; கும்பகர்ணன் குறட்டை நிற்கவேயில்லை.

மேற்படி கும்பகர்ணனைப்போலே சில தேசங்கள் உண்டு. அண்டங்களத்தனையும் இடிந்து விழுந்தாலும் காதுகேட்காத செவிடர் வாழும் தேசங்கள் சிலவுண்டு. அந்த தேசங்களிலே வாஸம் செய்வோர் மஹா பாவிகள். மாதுர் துரோகம், பிதுர் துரோகம், சகோதரத் துரோகம், தெய்வத் துரோகம், சுதேசத் துரோகம் முதலிய பெரிய பாதகங்கள் செய்து சீரழிந்த மானிடர் அப்படிப்பட்ட தேசங்களில் வாழ்கிறார்கள்.

ஆனால், ஹிந்து தேசம் அப்படி...யில்லை! இங்கு தமிழ் நாட்டைப்பற்றி முக்யமாகப் பேச வந்தோம்; தமிழ்நாடு மேற்படி மஹா பாதக ஜாபிதாவைச் சேர்ந்ததன்று, அன்று!

ராமலிங்க சுவாமிகளும், 'சுதேசமித்திரன்' சுப்பிரமணிய அய்யரும், இவர்களைப்போன்ற வேறு சில மகான்களும் தமிழ் நாட்டின் புதிய விழிப்புக்கு ஆதி கர்த்தாக்களாக விளங்கினர். ஹிந்து தர்மத்தின் புதுக் கிளர்ச்சிக்கு விவேகாநந்தர் ஆரம்பம் செய்தார். அவரைத் தமிழ்நாடு முதலாவது அங்கீகாரம் செய்துகொண்ட பிறகுதான், வங்கம், மஹாராஷ்ட்ரம் முதலிய ஹிந்து தேசத்து மாகாணங்கள் அவருடைய பெருமையை உணர்ந்தன.

பூமண்டல முழுதிலும் பெரிய விழிப்பொன்று வரப்போகிறது. அதற்காதாரமாக ஹிந்துஸ்தானம் கண்ணை விழித்து இருபதாண்டுகளாயின. ஹிந்துஸ்தானத்துக்குள் தமிழ்நாடு முதலாவது கண் விழித்தது. ஆனால், இன்னும் புத்தி சரியாகத் தெளியாமல் கண்ணை விழிப்பதும் கொட்டாவி விடுவதுமாக இருக்கிறது.

ஒரு தேசத்தின் பொதுப்புத்தியை அளந்து பார்க்க வேண்டுமானால், அதற்கு எத்தனையோ அறிகுறிகள் உண்டு. அந்த தேசத்து ராஜாங்க நிலை, தர்ம ஸ்தாபனங்களின் நிலை, கோயில்களின் நிலை முதலிய எத்தனையோ அடையாளங்களால் ஒரு தேசத்தாரின் பொது ஞானத்தை அளவிடலாம். இவற்றுள்ளே சமாசாரப் பத்திரிகைகளையும் ஓரடையாளமாகக் கருதத்தகும். ஆனால் ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களில் நடக்கும் பத்திரிகைகளுடன் தமிழ்நாட்டுப் பத்திரிகையை ஒப்பிட்டுப் பார்த்து இவற்றின் பரிதாபக்ரமான நிலைமையைக் கண்டு, 'ஆஹா இப்படிப்பட்ட தமிழ் நாடு எங்கே பிழைக்கப்போகிறது?' என்று எண்ணி, பாழும் நெஞ்சு உடைந்துபோகவேண்டாம், ஏனென்றால், வர்த்தமானப் பத்திரிகை நாமாக உண்டாக்கிய கருவியன்று, பிறரிடமிருந்து கற்றுக்கொண்ட தந்திரம்; சென்ற முப்பது வருஷங்களாகத்தான் தெரிந்து கொண்

டிருக்கிறோம். இன்னும் சரியாக முதிர்ச்சி அடையவில்லை. தவிரவும், தமிழ்ப் பத்திரிகைகளுக்கு ராஜாங்கத்தார் உதவி கிடையாது. பத்திரிகைகளுக்கு ராஜாங்கத்தார் எத்தனைக் கெத்தனை மதிப்புக் கொடுக்கிறார்களோ• அத்தனைக்கத்தனை நாட்டில் மதிப்பேறி, அதனால் பத்திரி கைகளுக்குத் தகுந்த லாபமுண்டாய், அதிலிருந்து சரியான வித்வான்களின் கூட்டம் யதேஷ்டமாய்ச் சேர்ந்து, அந்தத் தொழில் மேன்மையடைய இடமுண்டாகும்.

தமிழ்நாட்டில் இப்போது நடைபெறும் ராஜாங்கம் தமிழ் பாஷையில் தேர்ச்சியுடைய தன்று. தமிழ் பாஷையை முதலாக மதிப்பதன்று. 'தமிழ் முழு நாகரீக முடையதா, இல்லையா' என்பதைப் பற்றி சந்தேகங்களு டையது; ஆதலால், தமிழ்ப் படிப்பில்லாமலும், தமிழ் மணமில்லாமலும் ஸந்தோஷமடைந்திருக்கும் இயல் புடையது.

தவிரவும், தமிழ்ப் பத்திரிகைகள் நடத்துவோருக்குச் சரியான திரவிய லாப மில்லாமலிருப்பதற்கு வேறு பல காரணங்களும் உள. அவற்றுள் பத்திராதியர்களின் அஜாக்கிரதை (சோம்பேறித்தனம்) ஒன்று. எனக்கு நாலைந்து முக்கியமான தமிழ்ப் பத்திரிகைகள் வருகின்றன. அவற்றுள் ஒன்று வாரப் பத்திரிகை. அது பழுத்த சுதே சியக் கக்ஷியைச் சேர்ந்தது. ஆனால் தக்க பயிற்சியில்லாதவர் களால் நடத்தப்படுவது. சில தினங்களின் முன்பு அந்தப் பத்திரிகையில் யுத்த சம்பந்தமான தலையங்கம் ஒன்று எழு தப்பட்டிருந்தது. அதில் ருஷியாவில் "போல்ஷெவிக்" என்ற ஒரு மனுஷ்யன் இருப்பதாகவும், அவன் ஒரு கக்ஷி ஏற்படுத்தி நமது நேசக் கக்ஷிக்கு விரோதம் செய்வதாக வும் சொல்லியிருந்தது! அஃது அந்நாட்டில் ராஜ்யப் புரட்சிக் கூட்டங்களில் ஒன்றாகிய 'மாக்ஸிமிஸ்த்' கக்ஷிக்கு

மற்ருெரு பெயரென்றும், ஒரு மனுஷ்யனுடைய் பெயர் அல்ல வென்றும் அந்தப் பத்திராதிபர் தெரிந்து கொள்ள வில்லை. மேலும் அதே பத்திரிகையில் ஒவ்வொரு வியாசத் துக்கும் தமிழ் மகுடத்துக்கு மேலே இங்கிலீஷ் மகுட மொன்று சூட்டியிருக்கிறது. "ருஷியாவின் நிலைமை" "The Situation, in Russia," "தாய்ப்பாஷையின் மூலமாகக் கல்வி பயிற்றல்" "The Vernaculars as media of instruction', ஆஹா! நான் மாற்றி யெழுதுகிறேன். தமிழை முதலாவது போட்டு, இங்கிலீஷைப் பின்னே போட்டேன். அந்தப் பத்திரிகைகளில் அப்படியில்லை. இங்கிலீஷை முன்னே போட்டு தமிழைக் கீழே போட்டிருக்கிறது. "அமெரிக்க ஸ்த்ரீ" பார்த்தாயா? என்னைத் தெரியாமலே என் கை முதலாவது தமிழ் வார்த்தை எழுதுகிறது! "American woman" "அமெரிக்கா ஸ்த்ரீ," "Our Mathadhipaties." "நமது மடாதிபதிகள்," என்று எழுதியிருக்கிறது. காயிதப் பஞ்சமான காலம்; என்ன அநாவசியம் பார்த்தீர்களா?

இங்கிலாந்தில் வர்த்தமானப் பத்திரிகைகள் ப்ரான்ஸ் தேசத்து மந்திரிகளுடைய உபந்யாசங்களையும் பெரிய சாஸ்திரிமார், பெரிய கைத்தொழில் நிபுணர், த்ரவ்ய சாஸ்திர நிபுணர், ஜனத் திருத்தத் தலைவர் முதலியவர் களின் உபந்யாசங்களையும் பல ப்ரெஞ்சு ராஜாங்க சம்பந்த மான விவகாரங்களையும், ப்ரெஞ்சு பத்திரிகையிலிருந்து மொழி பெயர்த்துப் போடுகின்றன. அப்படியே பிரான்ஸ் தேசத்துப் பத்திரிகைகள் ஜெர்மன் பாஷையிலிருந்து பல விஷயங்களை மொழிபெயர்த்து எழுதுகின்றன. ஆனால் அந்த மொழிபெயர்ப்புகளில் ஸ்வபாஷையின் வழக்கங் களையும் பிரயோகங்களையும் கைவிட்டு அன்னிய பாஷையின் வசன நடையைப் பின்பற்றும் வழக்கம் கிடையாது. ஆனால் தமிழ் நாட்டிலோ முழுவதும் தமிழ் நடையை விட்டு இங்கிலீஷ் நடையில் தமிழை எழுதும் விநோதமான

பழக்கம் நமது பத்திராதிபர்களிடம் காணப்படுகிறது. முதலாவது, நீ எழுதப்போகிற விஷயத்தை இங்கிலீஷ் தெரியாத ஒரு தமிழனிடம் வாயினால் சொல்லிக்காட்டு. அவனுக்கு நன்றாக அர்த்தம் விளங்குகிறதா என்று பார்த்துக்கொண்டு பிறகு எழுது. அப்போதுதான் நீ எழுதுகிற எழுத்து தமிழ் நாட்டிற்குப் பயன்படும். உனக்கு இஹபர க்ஷேமங்களுக்கு இடமுண்டாகும். இல்லாது போனால், நீயும் சிரமப்பட்டு மற்றவர்களுக்கும் பயனில்லாமல் போகிறது. சில சமயங்களில் சில பத்திரிகைகளை வாசித்து விட்டு, நான்:— "ஐயோ, இவ்வளவு காயிதத்தில் எத்தனையோ உண்மைகளும், எத்தனையோ ஆச்சரியங்களும், எத்தனையோ சந்தோஷங்களும் எழுதலாமே?" என்று எண்ணி வருத்தப்படுவதுண்டு.

# 12. தமிழில் சாஸ்த்ர பரிபாஷை

பஞ்ச பூதங்களின் இயற்கையைப் பற்றின ஆராய்ச்சிகளிலே, நம்மைக்காட்டிலும் ஐரோப்பியர் முன்னே நிற்பது தெரிந்த விஷயம். ஆதலால் ஐரோப்பாவில் வழங்கும் லௌகிக சாஸ்திரங்களைத் தமிழில் எழுத வேண்டுமென்று பல பண்டிதர் மிகவும் ஆவலோடிருக்கிறார்கள். ஏற்கெனவே, சில பகுதிகளின் ஆரம்பம் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறது. இந்த முயற்சி மேன்மேல் வளரும்; வளர்ந்து தீரவேண்டும். அந்த சாஸ்திரங்களையெல்லாம் ஏக காலத்திலே தமிழில் எழுதி முடிப்பதற்காக ஒரு பண்டித - சங்கம் ஏற்படக்கூடும். நமது ராஜாக்களுக்கும், ஜமீன்தாரிகளுக்கும், செட்டிகளுக்கும் நல்ல புத்தியுண்டாகித் தமிழில் நவீன சாஸ்த்ரம் சேர்ப்பதாகிய காரியத்தை அவர்கள் தக்க பண்டிதர்களின் உதவி கொண்டு, விரைவில் நிறைவேற்றி மேன்மை பெறக் கூடும்.

## அஸ்திவாரக் காரியம்

இதற்கெல்லாம் முன்னதாகவே பண்டிதர்கள் செய்து வைக்கவேண்டிய அடிப்படைக் காரியம் ஒன்றுண்டு. கூடியவரை சாஸ்த்ர பரிபாஷையை நிச்சயப்படுத்தி வைத்தால், பிறகு மொழிபெயர்ப்புத் தொடங்குவோர்க்கு அதிக சிரமமிராது; ஸங்கடமிராது. பரிபாஷை, ஸங்கேதம், குழுவுக்குறி என்ற மூன்று சொல்லும் ஒரே பொருளைப் பல வகையிலே குறிப்பன. அதாவது, ஒரு கூட்டத்தார் அல்லது சாஸ்த்ரக்காரர் விசேஷார்த்தம் தோன்றும்படி உடன்பட்டு வழங்கும் பொது வழக்கமில்லாத சொல்

இங்ஙனம் பரிபாஷையை நிச்சயப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன், சேலத்தில் வக்கீல் ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாசார்யரும், ஸ்ரீ வெங்கட சுப்பையரும் சேர்ந்து ஒரு மாதப் பத்திரிகையைத் தொடங்கி யிருக்கிறார்கள். இந்தப் பத்திரிகையின் பெயர் 'தமிழ் சாஸ்திர-பரிபாஷைச் சங்கத்தாரின் பத்திரிகை'. மேற்கண்ட பெயருடன் ஒரு சங்கம் சேலத்தில் ஏற்பட்டிருக்கிறது. அந்த சங்கத்தின் கார்யஸ்தர், அந்த ஊர்க்காலேஜில் ப்ரகிருதி சாஸ்தர பண்டிதராகிய ஸ்ரீ ராமநாதய்யர்.

தமிழில் சாஸ்த்ர பரிபாஷை மாஸப்பத்திரிகை என்ற சேலத்துப் பத்திரிகையின் முதலாவது சஞ்சிகை இங்கிலீஷில் வெளிப்பட்டிருக்கிறது. ஆரம்பத்திலே தமிழில் எழுதாமல் தமிழருக்கு வேண்டிய இக்காரியத்தை இங்கிலீஷ் பாஷையிலே தொடங்கும்படி நேரிட்டதற்கு ஸ்ரீ ராஜகோபலாசார்யர் சொல்லும் முகாந்தரங்கள் எனக்கு முழு நியாயமாகத் தோன்றவில்லை. ஆனால் கூடிய சிக்கிரத்தில் தமிழ்ப்பகுதி யொன்று அந்தப் பத்திரிகையில் சேருமென்று தெரிகிறது. அநேகமாக இரண்டாம் ஸஞ்சிகையிலேயே சேருமென்று கேள்விப்படுகிறேன். அங்ஙனம், சேர்ந்து நடக்கும் சாஸ்திரப் பத்திரிகையினால், தமிழ் நாட்டாருக்கு மிகப் பெரிய பயன் விளையுமென்பதில் சந்தேகமில்லை.

### பரிபாஷை சேகரிக்க ஒருபாயம்

ஸ்ரீ காசியிலே, 'நாகரி ப்ரசாரிணி சபையார்' ஐரோப்பிய ஸங்கேதங்களை யெல்லாம் எளிய ஸம்ஸ்கிருத பதங்களில் போட்டு, மிகப் பெரியதோர் அகராதி உண்டாக்கி வருகிறார்கள். அந்தச் சொற்களை வேண்டியவரை, இயன்ற வரை, தேச பாஷைகள் எல்லாவற்றிலும்

ஏககாலத்தில் கைக்கொண்டு வழங்கலாம். ஐரோப்பாவில் எல்லா பாஷைகளும் இவ்விதமாகவே லத்தீன், யவன பரிபாஷைகளைக் கைகொண்டிருக்கின்றன. இவ்வாறு செய்வதால் நமது தேச பாஷைகளில் ஸங்கேத ஒற்றுமை யேற்படும். அதனுல் சாஸ்த்ரப் பயிர் தேச முழுவதிலும் வளர்ந்தோங்கி வருதல் எளிதாகும்.

## 13. தமிழ் வசன நடை

தமிழ் வசன நடை இப்போதுதான் பிறந்தது. பல வருஷமாகவில்லை. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும். ஆதலால், இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்த பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும்படி முயற்சி செய்யவேண்டும். கூடியவரை பேசுவதுபோலவே எழுது வதுதான் உத்தமமென்பது என்னுடைய கக்ஷி. எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது ஒரு தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம் எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாக வே அமைந்துவிட்டால் நல்லது.

பழக்கமில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து, அதாவது ஜனங்களுக்குச் சற்றேனும் பழக்கமில்லாமல், தனக்கும் அதிக பழக்கமில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து எழுத ஆரம்பித்தால் வாக்கியம் தத்தளிக்கத்தான் செய்யும். சந் தேகமில்லை. ஆனாலும் ஒரு வழியாக முடிக்கும்போது வாய்க்கு வழங்குகிறதா என்று வாசித்துப் பார்த்துக் கொள்ளுதல் நல்லது. அல்லது ஒரு நண்பனிடம் படித்துக் காட்டும் வழக்கம் வைத்துக் கொள்ள வேண்டும் சொல்ல வந்த விஷயத்தை மனதிலே சரியாகக் கட்டி வைத்துக் கொள்ளவேண்டும். பிறகு கோணல், திருகல் ஒன்றுமில்லா மல், நடை நேராகச் செல்லவேண்டும் முன் யோசனை இல்லாமலே நேராக எழுதும்திறமையை வாணி கொடுத்து விட்டால் பின்பு ஸங்கடமில்லை. ஆரம்பத்திலே, மனதிலே கட்டி முடிந்த வசனங்களையே எழுதுவது நன்று. உள்ளத் திலே நேர்மையும் தைர்யமுமிருந்தால், கை பிறகு தானு கவே நேரான எழுத்து எழுதும். தைர்யம்இல்லாவிட்டால்

வசனம் தள்ளாடும். சண்டிமாடு போல ஓரிடத்தில் வந்து படுத்துக்கொள்ளும். வாலைப் பிடித்து எவ்வளவு திருகினலும் எழுந்திருக்காது. வசன நடை, கம்பர் கவிதைக்குச் சொல்லியது போலவே, தெளிவு, ஒளி, தண்மை, ஒழுக்கம் இவை நான்குமுடையதாக யிருக்க வேண்டும். இவற்றுள், ஒழுக்கமாவது தட்டுத்தடையில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை. நமது தற்கால வசனநடையில் சரியான ஓட்டமில்லை. தள்ளாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. உள்ளத்திலே தமிழ்ச் சக்தியை நிலைநிறுத்திக்கொண்டால் கை நேரான தமிழ் நடை எழுதும்.

# 14. தமிழ் நாட்டிலே புஸ்தகப் பிரசுரம்

தமிழ் நாட்டிலே புஸ்தகம் எழுதுவோரின் நிலைமை இன்னும் சீராகவில்லை. பிரசுரத் தொழிலை ஒரு வியாபாரமாக நடத்தும் முதலாளிகள் வெளிப்படவில்லை யாதலால், சங்கடம் நீங்காமலிருக்கிறது. புதிய புஸ்தங்களைப்படித்துப் படித்து 'பயன்படுமா படாதா' வென்று தீர்மானம் செய்ய வேண்டும். 'நன்றாகவிலையாகுமா விலையாகாதா' என்பதை ஊகித்தறிய வேண்டும். ஆசிரியரிடமிருந்து புஸ்தகத்தை முன் விலையாகவோ, வேறுவித உடன்பாடாகவோ,வாங்கிக் கொண்டு தாம் கைம்முதல் போட்டு அச்சிட்டு லாபம் பெற வேண்டும். இந்த வியாபாரத்தை நமது தேச முதலாளிகள் தக்கபடி கவனியாமலிருப்பது வியப்பை உண்டாக்குகிறது. புஸ்தகங்கள் வெளிவரத்தான் செய்கின்றன. பெருந்தொகையான ஜனங்கள் வாங்கிப் படிக்கத்தான் செய்கிறார்கள். ஒரு ஒழுங்கான பிரசுர வியாபாரம் நடந்தால் ஜனங்களுக்கு நல்ல புஸ்தகங்கள் கிடைக்கும். இப்போது அச்சிடப் பணமுள்ளவர் எழுதும் புஸ்தகங்களே பொது ஜனங்களுக்குக் கிடைக்கின்றன. பெரும்பாலும் பழைய புஸ்தகங்களிலே ஆச்சரியமானவை பல எழுதப்பட்ட காலத்தில், ஆசிரியர் தனவந்தராக இருந்ததில்லை. மேன்மேலும் ஊக்கத்துடன் நடத்தினால், பிரசுர வியாபாரத்தில் நிறைய லாபம் உண்டாகுமென்பதில் சந்தேகமில்லை.

# 15. தமிழருக்கு

தமிழா, தெய்வத்தை நம்பு. பயப்படாதே. உனக்கு நல்ல காலம் வருகின்றது.

உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர் பிறந்திருக்கிறார்கள். தெய்வங்கண்ட கவிகள், அற்புதமான ஸங்கீத வித்வான்கள், கைதேர்ந்த சிற்பர், பல நூல் வல்லார், பல தொழில் வல்லார், பல மணிகள் தோன்றுகிறார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதராக அவதரித்திருக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்துவிட்டு நான்கு பக்கங்களிலும் பார், ஒரு நிலைக் கண்ணாடியிலே போய்ப் பார்.

நமது நாட்டு ஸ்திரீகளிலே பல சக்தி கணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார்கள். ஒளி, சக்தி, வலிமை, வீர்யம், கவிதை, அழகு, மகிழ்ச்சி நலங்களெல்லாம் உன்னைச் சார்கின்றன.

தமிழா, பயப்படாதே ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்.

ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே 'ஜாதியிரண்டொழிய வேறில்லை' என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்.

பெண்ணை அடிமை என்று கருதாதே. முற்காலத்துத் தமிழர் மனைவியை "வாழ்க்கைத் துணை" என்றார்: ஆத்மாவும் சக்தியும் ஒன்று. . ஆணும் பெண்ணும் சமம்.

வேதங்களை நம்பு. அவற்றின் பொருளைத் தெரிந்து கொண்டு பின் நம்பு. புராணங்களைக் கேட்டுப் பயனடைந்து கொள். புராணங்களைவேதங்களாக நினைத்து மடமைகள் பேசி விலங்குகள்போல் நடந்து கொள்ளாதே.

தமிழா, உன் வேலைகள் அனைத்திலுமே பொய்க் கதைகள் மிதமிஞ்சிவிட்டன. உனது மதக் கொள்கைகள், லௌகீகக் கொள்கைகள், வைதிக நடை—எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலை தூக்கி ஆட இடங்கொடுத்து விட்டாய். இவற்றை நீக்கிவிடு. வீட்டிலும், வெளியிலும். தனிமையிலும், கூட்டத்திலும், எதிலும், எப்போதும் நேர்மையிருக்கவேண்டும்; உண்மையிருக்க வேண்டும் நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது. பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது. பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்றவரை தடுக்கவேண்டும். எல்லாப் பேறுகளைக் காட்டிலும் உண்மைப் பேறுதான பெருமை கொண்டது. உண்மை தவங்களுக்கெல்லாம் உயிர். உண்மை சாஸ்திரங்களுக்கெல்லாம் வேர் உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்மாவின் கண்ணுடி. ஆதலால், தமிழா, எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும்படி செய்.

தமிழா, எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை. எதிர் நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை. "முந்திய சாஸ்திரந்தான் மெய், பிந்திய சாஸ்திரம் பொய்" என்று தீர்மானம் செய்து கொள்ளாதே. காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஓர் கணக்கு ஏற்பட்டிருக்கிறதா? "தகப்பன் வெட்டிய கிணறு என்று சொல்லி மூடர்கள் உப்பு நீரைக் குடிக்கிருர்கள்" என்று பஞ்சதந்திரம் நகைக்கிறது.

இவ்வுலகில் நான்கு புருஷார்த்தங்கள் என்று பெரியோர்கள் காட்டியிருக்கிருர்கள். அவை அறம், பொருள், இன்பம், வீடு—என்பன.

இவற்றுள் அறமாவது கடமை. அது உனக்கும் உனது சுற்றத்தாருக்கும், பிறர்க்கும் நீ செலுத்தவேண்டிய கடமை, 'பிறர்' என்பதனுள் வையகம் முழுதும் அடங்கும். கடமையில் தவறலாகாது. தொழில்களெல்லாம் நற்பயன் தருமிடத்து அறங்களாகும்.

பொருள் என்பது செல்வம். நிலமும், பொன்னும், கலையும், புகழும் நிறைந்திருத்தல், நல்ல மக்களைப் பெறுதல் இனப்பெருமை சேருதல், இவையெல்லாம் செல்வம். இச் செல்வத்தைச் சேர்த்தல் மனித உயிருக்கு ஈசன் இட்டிருக்கும் இரண்டாம் கட்டளை.

இன்பம் என்பது இனிய பொருள்களுடன் உயிர் கலந்து நிற்பது. பெண், பாட்டு, கூத்து முதலிய ரஸ வஸ்துக்களை அனுபவிப்பது. இவ் வின்பங்கள் எல்லாம், தமிழா, உனக்கு நன்றாக அமையும்படி பராசக்தி அருள் புரிக. உன்னுடைய நோய்களெல்லாம் தீர்க. உனது வறுமை தொலைக. உனக்கு இனிமையும் அழகு முடைய வஸ்துக்களெல்லாம் வசப்படுக. பஞ்ச பூதங்களும் உனக்கு வசப்படுக. நீ எப்பொழுதும் இன்பம் எய்துக.

வீடாவது பரமாத்மாவுடன் அறிவு கலந்து நிற்பது. "வீடு" என்ற சொல்லுக்கு "விடுதலை" என்பது பொருள். மேற்கூறப்பட்ட மூன்று புருஷார்த்தங்களும் ஈடேறிய பெரியோருக்கு ஈசன் தானாகவே வீட்டு நிலை யருள் செய்வான். தமிழா, உனது புருஷார்த்தங்கள் கை கூடுக!

## 16. தமிழ் நாட்டு மாதருக்கு

இந்தியா தேசத்து ஸ்திரீகள் இங்குள்ள ஆண் மக்களால் நன்கு மதிக்கப்படுவதற்குள்ள பல உபாயங்களில் வெளி நாட்டாரின் மதிப்பைப் பெற முயல்வதும் ஒரு உபாயமாம். திருஷ்டாந்தமாக, சில வருஷங்களுக்கு முன்பு, ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் 'இந்தியா நாகரீகக் குறைவான தேசம்' என்ற எண்ணம் வெகு சாதாரணமாகப் பரவியிருந்தது. மேற்றிசையோர்களுக்குள்ளே சில விசேஷ பண்டிதர்கள் மட்டும் நம்முடைய வேதங்கள், உபநிஷத்துக்கள், ஸாங்கியம், யோகம் முதலிய தர்சனங்கள் (அதாவது ஞானசாஸ்திரங்கள்); காளிதாஸன் முதலிய மஹா கவிகளின் காவியங்கள்; ராமாயணம், பாரதம்; பஞ்ச தந்திரம் முதலிய நீதி நூல்கள்—இவற்றை மூலத்திலும், மொழிபெயர்ப்புக்களின் வழியாகவும் கற்றுணர்ந்தோராய், அதிலிருந்து ஹிந்துக்கள் பரம்பரையாகவே நிகரற்ற ஞானத் தெளிவும் நாகரீகமும் உடைய ஜனங்கள் என்பதை அறிந்திருந்தனர். இங்ஙனம் மேற்கு தேசங்களில் பதினாயிரம் அல்லது லக்ஷத்தில் ஒருவர் இருவர் மாத்திரம் ஒருவாறு நமது மேன்மையை அங்கீகாரம் செய்தனர். எனினும், அந் நாடுகளிலே பொது ஜனங்களின் மனதில் 'இந்தியா தேசத்தார் ஏறக்குறைய காட்டு மனிதரின் நிலையிலுள்ளோர்' என்ற பொய்க் கொள்கையே குடிகொண்டிருந்தது. அப்பால், ஸ்வாமி விவேகானந்தரும் பின்னிட்டு ரவீந்திரநாத தாகூர், ஜகதீச சந்திர வஸு முதலிய மஹான்களும் மேற்றிசையில் விஸ்தாரமான யாத்திரைகள் செய்து தம்முடைய அபார சக்திகளைக் காண்பித்த பின்னரே, மேற்றிசைவாசிகளில் பலர், 'அடா!

இந்த ஹிந்துக்கள் நாகரீகத்திலும், அறிவிலும் இவ்வளவு மேம்பட்டவர்களா?' என்று வியப்பெய்தினர்.

தவிரவும், மேற்கத்தியார் நம்மைக் குறைவாக நினைக்கிறார்கள் என்பதை அவ்விடத்துப் பத்திரிகைகளின் மூலமாகவும் புஸ்தகங்களின் மூலமாகவும் தெரிந்து கொண்டவர்களால் நமது தேசத்துக் கல்விப் பெருமையால் இந்தியாவின் உண்மையான மாட்சியை அறியாது நின்ற இங்கிலீஷ் படிப்பாளிகளாகிய நம்மவரில் பலரும் வெளி நாட்டாரின் எண்ணத்தையே உண்மையெனக் கருதி மயங்கிவிட்டனர். காலச் சக்கரத்தின் மாறுதலால் இந்நாட்டில் அறிவுத் துறைகள் பலவற்றிலும் மேற்படி இங்கிலீஷ் படிப்பாளிகளே தலைமை வகிக்கும்படி நேர்ந்து விட்டதினின்றும், இந்தியா தன் மாண்பை முற்றிலும் மறந்துபோய் அதோகதியில் விழுந்துவிடுமோ என்று அஞ்சக்கூடிய நிலைமை அநேகமாய் ஏற்படலாயிற்று, இப்படிப்பட்ட பயங்கரமான சமயத்தில் ஸ்வாமி விவேகானந்தர் முதலாயினோர் தம்முடைய ஞான பராக்கிரமத்தால் மேற்றிசை நாடுகளில் திக்விஜயம் பண்ணி மீண்டனர். இதினின்றும், இங்குள்ள இங்கிலீஷ் படித்த •சுதேச தூஷணைக்காரர் தமது மடமை நீங்கி ஹிந்து நாகரிகத்தில் நம்பிக்கை செலுத்துவராயினர். மேற்றிசையோர் எது சொன்னாலும் அதை வேதமாகக் கருதிவிடும் இயல்பு வாய்ந்த நம்மவர், முன்பு இந்தியாவை அந்த அந்நியர் பழித்துக்கொண்டிருந்தபோது தாமும் பழித்தவாறே, இந்தியாவை அவர்கள் புகழத் தொடங்கிய போது தாமும் சுதேசப் புகழ்ச்சி கூறலாயினர். விவேகானந்தர் முதலானவர்கள் ஐரோப்பிய அமெரிக்கர்களால் போற்றப் படுவதன் முன்பு அம் மஹான்களை நம்மவர் கவனிக்கவேயில்லை. அப்பெரியோர் மேற்றிசையில் வெற்றி பெற்று மீண்ட மாத்திரத்தில், அவர்களை நம்மவர் தெய்வத்துக் கொப்பாக எண்ணி வந்தனை வழிபாடுகள்

செய்யத் தலைப்பட்டனர். இந்த விஷயத்தை நம்முடைய மாதர்கள் நன்றாகக் கவனித்தறிந்து கொள்ளுதல் நன்று.

அறிவின் வலிமையே வலிமை. அறிவினால் உயர்ந்தோர்களை மற்றோர் இழிவாக நினைப்பதும், அடிமைகளாக நடத்துவதும் ஸாத்யப்பட மாட்டா. அறிவின் மேன்மையால் வெளித் தேசங்களிலே உயர்ந்த கீர்த்தி படைத்து மீள்வாரை அதன் பிறகு இந்தத் தேசத்தார் கட்டாயம் போற்றுவார்கள். சில ஹிந்து ஸ்திரீகள் வெளிநாடுகளுக்குச் சென்று உயர்ந்த கீர்த்தி ஸம்பாதித்துக்கொண்டு வருவார்களாயின், அதினின்றும் இங்குள்ள ஸ்திரீகளுக் கெல்லாம் மதிப்பு உயர்ந்து விடும். இந்த விஷயத்தை ஏற்கெனவே நம்முடைய மாதர் சிலர் அறிந்து வேலை செய்து வருகிறார்கள். வங்காளத்துப் பிராமண குலத்தில் பிறந்து ஹைதராபாத் நாயுடு ஒருவரை மணம் புரிந்து வாழும் ஸ்ரீ மதி ஸரோஜினி நாயுடு என்ற ஸ்திரீ இங்கிலீஷ் பாஷையில் உயர்ந்த தேர்ச்சி கொண்டு ஆங்கிலேய அறிஞர்கள் மிகவும் போற்றும்படியாக இங்கிலீஷில் கவிதை எழுதுகிறார். இவருடைய காவியங்கள் பல இங்கிலாந்தில் அச்சிடப்பட்டு அங்குள்ளோரால் மிகவும் உயர்வாகப் பாராட்டப்படுகின்றன. மேலும், இந்த ஸ்திரீ இங்கிலாந்தில் பல இடங்களிலே நமது தேசத்து முன்னேற்றத்தை யொட்டி அற்புதமான ப்ரஸங்கங்கள் செய்து சிறந்த கீர்த்தி யடைந்திருக்கிறார். மேலும், வங்காளி, பாஷையிலே கவிதை யெழுதுவோராகிய ஸ்ரீ மதி காமினீ ராய், ஸ்ரீமதி மன குமாரி தேவி, ஸ்ரீமதி அநங்க மோஹினி தேவி என்ற மூன்று ஸ்திரீகளுடைய பாட்டுக்களை இங்கிலீஷில் மொழிபெயர்த்து அமெரிக்காவிலுள்ள பத்திரிகை யொன்று புகழ்ச்சியுரைகளுடன் சிறிது காலத்துக்கு முன்பு ப்ரசுரம் செய்திருப்பதினின்றும்,

இம்மாதர்களுக்கு அமெரிக்காவில் நல்ல கீர்த்தியேற் பட்டிருப்பதாகத் தெரிகிறது.

புனு நகரத்துச் சித்திர பண்டிதராகிய ஜனுப் பைஜீ ரஹ்மின் என்பவர் அமெரிக்காவின் ராஜதானியாகிய 'நியூயார்க்' நகரத்திற்குப் போய் சென்ற வருஷத்தில் அந்நகரத்துச் சிற்பிகளால் மிகவும் போற்றப்பட்டார். இவருடைய சித்திரங்களை அங்குள்ளோர் மிகவும் வியந் தனர். அஜந்தாவிலுள்ள குகைச் சித்திர வேலைகளின் ஆச்சரியத்தைக் குறித்து ஸ்ரீமான் பைஜீரஹ்மின் கொலம்பியா ஸர்வகலா சங்கத்தாரின் முன்னே நேர்த்தி யான உபந்யாஸம் புரிந்தார். இவருடன் இவருடைய மனைவியும் அங்கு சென்றிருந்தாள். இவர் 'இந்தியா தேசத்து ஸங்கீதம்' என இங்கிலீஷில் ஒரு புஸ்தக மெழுதி யிருக்கிறார். ஹிந்து ஸங்கீத சாஸ்திரத்திலும் வாய்ப் பாட்டிலும் நல்ல தேர்ச்சி யுடையவர். இவர் அமெரிக் காவில் பல மாதர் ஸபைகளின் முன்பு ஹிந்து ஸங்கீதத் தைக் குறித்துப் பல உபந்யாஸங்கள் செய்தார். இடைக் கிடையே தம் உபந்யாஸக் கருத்துக்களை திருஷ்டாந்தப் படுத்தும் பொருட்டு நேர்த்தியான பாட்டுக்கள் பாடி அந்நாட்டினரை மிக்வும் வியப்புறச் செய்தார்.

இங்ஙனம், தமிழ் மாதர்களிலும் பலர் மேல்நாடு களுக்குச் சென்று புகழ் பெற்று மீள்வாராயின், அதி னின்றும் இங்கே நம்முடைய ஸ்திரீகளுக்குள்ள மதிப்பு மிகுதிப்படுமென்பதில் சிறிதேனும் ஐயமில்லை. எவ்வாறு நோக்கிய போதிலும், தமிழ் நாட்டு மாதர் ஸம்பூர்ணமான விடுதலை பெற வேண்டுவராயின் அதற்குக் கல்வித் தோணியே பெருந்துணையாம். எனவே, கொஞ்சம் கொஞ்சம் பல துறைகளில் பயிற்சி வாய்ந்திருக்கும் தமிழ் சகோதரிகள் இரவு பகலாகப் பாடுபட்டு அவ்வத்துறை

களில் நிகரற்ற தேர்ச்சி பெற முயலவேண்டும். இடைவிடாத பழக்கத்தால் தமிழ் மாதர் தமக்குள்ள இயற்கையறிவை மிகவும் உன்னத நிலைக்குக் கொணர்ந்து விடுதல் சாலவும் எளிதாம். ஒளவையார் பிறந்து வாழ்ந்த தமிழ் நாட்டு மாதருக்கு அறிவுப் பயிற்சி கஷ்டமாகுமா? சற்றே ஊன்றிப் பாடுபடுவார்களாயின், தமிழ் மாதர் அறிவுப் பயிற்சிகளிலே நிகரற்ற சக்தி படைத்துவிடுவார்கள். அறிவு திறத்தால் பிறகு விடுதலைக் கோட்டையைக் கைப்பற்றுதல் அதிஸுலபமாய் விடும். எனவே, பலவித சாஸ்திரங்கள் படித்துத் தேறுங்கள். தமிழ்ச் சகோதரிகளே! அங்ஙனம் தேறியவர்களில் சிலரேனும் வெளிநாடுகளுக்குப் போய்க் கீர்த்தி ஸம்பாதித்துக் கொண்டு வாருங்கள். விடுதலைத் தெய்வம் உங்களைத் தழுவும் பொருட்டு இரண்டு கைகளையும் விரித்துக்கொண்டு காத்து நிற்கிறது. தமிழ் மாதர்களே! மனம் சோர்ந்து விடாதீர்கள். உங்களுக்கு நல்ல காலம் வருகிறது! வந்துவிட்டது; நீங்கள் விடுதலை பெறுவீர்கள்; உங்களால் உலகம் மேன்மையுறும்.

சகோதரிகளே!

தமிழ் நாட்டின் நாகரீகம் மிகவும் புராதனமானது. ஒரு தேசத்தின் நாகரீகம் அல்லது அறிவு முதிர்ச்சி இன்ன தன்மை யுடையதென்று கண்டுபிடிக்க வேண்டுமாயின், அதைக் கண்ணாடி போல விளக்கிக் காட்டுவது அந்த நாட்டில் வழங்கும் பாஷையிலுள்ள இலக்கியம் அதாவது காவியம் முதலிய நூல்களேயாகும். இங்கிலாந்து தேசத்தின் தற்கால இலக்கிய நூல்களை வாசித்துப் பார்த்தோமாயின், அதன் தற்கால நாகரீகத்தை ஒருவாறு அளவிடக் கூடும். எனவே, தமிழ் நாட்டின் புராதன நாகரீகத்தை அளவிட்டறிவதற்கு தமிழ் நூல்களே தக்க அளவுகோலாகின்றன. இந்தியாவில் பெரும்

பான்மையான பாஷைகள் ஸம்ஸ்க்ருதத்தின் திரிபுகளே யன்றி வேறல்ல. அங்ஙனம் திரிபுகளல்லாததுவும் ஸம்ஸ்க்ருதக் கலப்புக்குப் பிந்தியே மேன்மை பெற்றனவாம்.

தமிழ் பாஷைக்கோ இலக்கணம் முதன்முதலாக அக்ஸ்தியராலும் அவருடைய சிஷ்யராகிய திரணதூமாக்நி (தொல்காப்பியர்) என்ற முனிவராலுமே சமைத்துக் கொடுக்கப்பட்ட தென்பது மெய்யே. அதனின்றும் தமிழ் இலக்கணம் பெரும்பாலும் ஸம்ஸ்கிருத இலக்கணத்தை அனுசரித்தே சமைக்கப்பட்டிருக்கின்ற தென்பது மெய்யே. எனினும் வடமொழிக் கலப்புக்கு முந்தித் தமிழுக்கு வேறுவகையான இலக்கணமிருந்து ஒரு வேளை பின்னிட்டு மறைந்திருக்கக் கூடுமென்று நினைப்பதற்குப் பல ஹேதுக்கள் இருக்கின்றன. இஃது எவ்வாறாயினும், ஸம்ஸ்கிருத பாஷையின் கலப்புக்கு முன்னாகவே, தமிழ் நாட்டில் மிகவும் உயர்ந்த நாகரீகமொன்று நின்று நிலவி வந்த தென்பதற்கு அடையாளமாகத் தமிழில் மிக உயர்ந்த தரமுடைய பல பழைய இலக்கிய நூல்கள் காணப்படுகின்றன.

ஐரோப்பாவிலும், ஆசியாவிலும், பிற இடங்களிலும் காணப்படும் நாகரீகங்களுக்கெல்லாம் முந்தியதும் பெரும்பான்மை மூலாதாரமுமாக நிற்பது ஆர்ய நாகரீகம். அதாவது, பழைய ஸம்ஸ்கிருத நூல்களிலே சித்தரிக்கப்பட்டு விளங்குவது. இந்த ஆரிய நாகரீகத்துக்கு ஸமமான பழமை கொண்டது தமிழருடைய நாகரீகம் என்று கருதுவதற்குப் பலவிதமான ஸாக்ஷ்யங்களிருக்கின்றன. 'ஆதியில் பரம சிவனால் படைப்புற்ற மூல பாஷைகள் வடமொழியென்று செல்லப்படும் ஸம்ஸ்கிருதமும் தமிழுமேயாம்' என்று பண்டைத் தமிழர் சொல்லியிருக்கும் வார்த்தை வெறுமே புராணக் கற்பனை அன்று, தக்க சரித்திர ஆதாரங்களுடையது. "தமிழரும் ஆரியருமல்லாத

ஜனங்களைக் கடவுள் பேச்சில்லாமலா வைத்திருந்தார்?" என்று கேட்பீர்களாயின், மற்றச் சொற்களும் பல இருக்கத்தான் செய்தன. ஆனால், மனித நாகரீகத்தில் முதல் முதலாக இவ்விரண்டு பாஷைகளிலேதான் உயர்ந்த கவிதையும், இலக்கியங்களும், சாஸ்திரங்களும் ஏற்பட்டன. மற்ற பாஷைகளின் இலக்கிய நெறிகள் இவற்றுக்கும் பின்னே சமைந்தன. பல இடங்களில் இவை இயற்றின நடையையே முன் மாதிரியாகக் கொண்டன. அதாவது ஆரியரும் தமிழருமே உலகத்தில் முதல் முதலாக உயர்ந்த நாகரீகப் பதவி பெற்ற ஜாதியார். இங்ஙனம் முதல் முதலாக நாகரீகம் பெற்ற இவ்விரண்டு வகுப்பினரும் மிகப் பழைய நாட்களிலேயே ஹிந்து மதம் என்ற கயிற்றால் கட்டுண்டு ஒரே கூட்டத்தாராகிய செய்தி பூமண்டலத்தின் சரித்திரத்திலேயே மிக விசேஷமும் நலமும் பொருந்திய செய்திகளில் ஒன்றாகக் கணித்தற்குரியது.

தமிழ் நாட்டு மாதராகிய என் அன்புக்குரிய ஸஹோதரிகளே! இத்தனை பழமையும், மேன்மையும் சான்ற இரண்டு பகுதிகளின் கலப்பாகுந் தன்மையால் பாரத தேசத்திலேயே மற்றப் பிரதேசங்களிலுள்ள நாகரீகத்தைக் காட்டிலுங்கூட ஒருவாறு சிறப்புடையதாகக் கருதுவதற்குரிய ஆர்யதிராவிட நாகரிகம் உங்களுடைய பாதுகாப்பிலிருக்கிறது.

இதனை மேன்மேலும் போஷித்து வளர்க்கும் கடமை உங்களைச் சேர்ந்தது. எங்ஙனம் எனில், பொதுப்படையாக நோக்குமிடத்தே மனித நாகரிகங்கள் ஆண்மக்களின் உதவி கொண்டே பிறப்பிக்கப்படுகின்றன. அப்பால் பெரும்பாலும் பெண்களாலேயே காக்கப்படுகின்றன. இடைக்காலத்தில் மகம்மதிய நாகரிகம் வந்து ஹிந்து தர்மத்தைத் தாக்கிற்று. ஆனால் ஹிந்து தர்மம் அதிலுள்ள

முக்கிய அம்சங்களைத் தனதாக்கிக் கொண்டு, அந்தத் தாக்குதலால் அழிவெய்தாமல், முன்னைக் காட்டிலும் அதிக சக்தியுடன் மிஞ்சி நின்றது. ஸமீப காலத்தில் ஐரோப்பிய நாகரிகம் இந்தியாவுக்கு வந்து சேர்ந்திருக்கிறது. இதுவும் நமது நாகரிகத்துடன் நன்றாகக் கலந்து விட்டது. இனி இதன் விளைவுகளை நம் நாட்டாரின் அறிவினின்று முற்றிலும் பிரித்துக் களைதல் ஸாத்யப்படாது. இது நம்முடைய தேச ஞானத்தின் மர்மங்களுக்குள்ளே கலந்து பெரும்பாலும் நமதாய் விட்டது......

ஸஹோதரிகளே! நீங்கள் ஐரோப்பிய நாகரிகத்தின் சேர்க்கையைக் குறித்துச் சிறிதேனும் வருத்தப்பட வேண்டாம். அது நமது தேசத்துப் பயிற்சியை அழிக்கும் வலிமை உடையதன்று. அது நமக்குத் துணை. அது நாம் அஞ்சுதற்குரிய பிசாசன்று. வெவ்வேறு வகைப்பட்ட இரண்டு நாகரிகங்கள் வந்து கூடும்போது அவற்றுள் ஒன்று மிகவும் வலியதாகவும், மற்றொன்று மிகவும் பலவீனமாகவும் இருக்குமாயின் வலியது வலிமையற்றதை இருந்த இடம் தெரியாமல் விழுங்கிவிடும். வலிமையற்ற நாகரிகத்திற்குரிய பாஷையும் மதமும் முக்கியத் தன்மையற்ற புற ஆசாரங்கள் மாத்திரமேயன்றி விவாக முறை முதலிய முக்கிய ஆசாரங்களும் அழிந்து மறைகின்றன. அந்த நாகரிகத்தை காத்து வந்த ஜனங்கள் பலமுடைய நாகரிகங்களின் பாஷை, மதம் முதலியவற்றைக் கைக்கொள்கிறார்கள். பிலிப்பைன் தீவில் அமெரிக்க நாகரிகம் இவ்வகை வெற்றியடைந்திருக்கிறது. ஆனால் நம்முடைய ஹிந்து நாகரிகம் இங்ஙனம் சக்தியற்ற வஸ்துவன்று. பிற நாகரிகங்களுடன் கலப்பதனால் இதற்குச் சேதம் நேருமென்று நாம் சிறிதேனும் கவலைப் படவேண்டிய அவசியமில்லை. உலகத்திலுள்ள நாகரிகங்கள் எல்லாவற்றிலும் நம்முடைய நாகரிகம் அதிக சக்தியுடையது. இது மற்றெந்த

நாகரிகத்தையும் விழுங்கி ஜீர்ணித்துக் கொள்ளும் திறன் வாய்ந்தது. ஆதலால் ஐரோப்பிய 'நாகரிகத்தின் கலப்பிலிருந்து ஹிந்து தர்மம் தன் உண்மையியல்பு மாறுதிருப்பது மட்டுமேயன்றி முன்னைக் காட்டிலும் அதிக சக்தியும் ஒளியும் பெற்று விளங்குகிறது. இந்த விஷயத்தை நம்முடைய மாதர்கள் நன்கு உணர்ந்து கொண்டாலன்றி இவர்களுடைய ஸ்வதர்ம ரக்ஷணம் நன்கு நடைபெருது......

தமிழ் நாட்டு ஸஹோதரிகளே! கணவன்மார், உடன் பிறந்தார், புத்திரர் முதலானவர்களால் நன்கு மதிக்கப் பெருமல் இழிவாகக் கருதப்பட்டு உயிர் வாழ்வதைக் காட்டிலும் இறந்து விடுதல் நன்று.

"மான மிழந்தபின் வாழாமை முன்னினிதே." கல்வி கூட அத்தனை பெரிதில்லை, தைரியம் வேண்டும். எதுவரினும் நம்மைப் பிறர் தாழ்வாகக் கருதவும் தாழ்வாக நடத்தவும் இடங்கொடுக்கக் கூடாது என்ற மன உறுதி வேண்டும்.

ஐரோப்பிய நாகரிகத்தின் புறத்தோற்றங்களிலே ஆக்ஷேபத்துக்கு இடமான அம்சங்கள் பலவும் இருக்கின்றன என்பதில் ஸந்தேகமில்லை. ஆனல் இது வியக்கத்தக்க தொரு செய்தியன்று. நமது ஸநாதந ஹிந்து தர்மத்தின் புறநடைகளிலே கூடப்பல வெறுக்கத்தக்க அம்சங்கள் வந்து கலந்து தான் கிடக்கின்றன. அதுபற்றி ஐரோப்பிய நாகரிகத்தையே வெறுத்தல் சாலமிகப் பேதமையாம்......

ஆகவே, பூமி முழுமைக்கும் பெருந்துணையாக நின்று மனுஷ்ய ஜாதியைக் காப்பாற்றக் கூடிய ஹிந்து மதத்தின் ஸார உண்மைகளை நாம் ஒழுக்கத்திலே காண்பிக்க வேண்டும். இங்ஙனம் காண்பிக்கும்படி நம்மவரைத் தூண்டி வழிகாட்டும் கடமையும், தகுதியும் நம்முடைய மதங்களுக்கே உரியன.

## 17. தமிழ்நாடே சரியான களம்
### (தமிழ் நாட்டின் விழிப்பு)

25 ஜனவரி, 1918

ஜீவஹிம்ஸை கூடாது. மது மாம்ஸங்களால் பெரும் பான்மையோருக்குத் தீங்கு உண்டாகிறது. மது மாம்ஸங்கள் இல்லாதிருந்தால் பிராமணருக்குப் பெரிய கீர்த்தி. அது பெரிய தவம். அது கிருத யுகத்துக்கு வேராகக் கருதக் கூடிய அநுஷ்டானம்.

ஆனாலும், தாம் ஒரு காரியத்தைச் செய்யாமலிருக்குமிடத்து, அதைப் பிறர் செய்யும்போது அஸூயை கொள்வது தவறு.

ஊண், உடை, பெண் கொடுக்கல் வாங்கல் முதலிய விஷயங்களில் மூடத்தனமாகக் கட்டுப்பாடுகளும் விதிகளும், தடைகளும் கட்டுவதில் யாதொரு பிரயோஜனமும் கிடையாது.

மேலும் உலகத்து மனிதர்களெல்லோரும் ஒரே ஜாதி. 'இந்தச் சண்டையில் இத்தனை ஐரோப்பியர் அநியாயமாக மடிகிறார்களே' யென்பதை நினைத்து நான் கண்ணீர் சிந்தியதுண்டு. இத்தனைக்கும் சுதேசியத்திலே கொஞ்சம் அழுத்தமானவன், அப்படியிருந்தும் ஐரோப்பியர் மடிவதில் எனக்குச் சம்மதம் கிடையாது. எல்லா மனிதரும் ஒரே வகுப்பு.

சகல மனிதரும் சகோதரர். மனுஷ்ய வர்க்கம் ஒருயிர். இப்படியிருக்க நாம் ஒரு வீட்டுக்குள்ளே மூடத்தனமாக ஆசாரச் சுவர்கள் கட்டி, "நான் வேறு ஜாதி. என் மைத்துனன் வேறு ஜாதி, இருவருக்குள் பந்தி போஜனம் கிடை

யாது. அவனை ஜாதிப்பிரஷ்டம் பண்ணவேண்டும்'' என்பது சுத்த மடமை யென்பதைக் காட்டும் பொருட்டாக இத்தனை தூரம் எழுதினேனே தவிர வேறில்லை.

தமிழ் நாட்டில் ஜாதி ஸம்பந்தமான மூட விதிகளும் ஆசாரங்களும் சடசடவென்று நொறுங்கி விழுகின்றன.

அடுத்த விஷயம், பெண் விடுதலை. தமிழ் நாட்டில் பெண் விடுதலைக் கக்ஷிக்குத் தலைவியாக ஸ்ரீமான் நீதிபதி சதாசிவய்யரின் பத்தினி மங்களாம்பிகை விளங்குகிறாள். ஸ்ரீ அனிபெசண்ட் இந்த விஷயத்தில் அவருக்குப் பெரிய திருஷ்டாந்தமாகவும், தூண்டுதலாகவும் நிற்கிறாள்.

இவ்விருவராலும் இப்போது பாரத தேசத்தில் உண்மையான பெண் விடுதலை உண்டாக ஹேது ஏற்பட்டது. இவ்விருவருக்கும் தமிழுலகம் கடமைப்பட்டது. இவர்களுடைய கக்ஷி என்னவென்றால், 'ஸ்திரீகளுக்கு ஜீவன் உண்டு; மனம் உண்டு; புத்தியுண்டு; ஐந்து புலன்கள் உண்டு. அவர்கள் செத்த யந்திரங்களல்லர். உயிருள்ள செடி கொடிகளைப் போலவுமல்லர். சாதாரணமாக ஆண் மாதிரியாகவே தான். புறவுறுப்புக்களில் மாறுதல், ஆத்மா ஒரே மாதிரி.'

இதனை மறந்து அவர்களைச் செக்கு மாடுகளாகப் பாவிப்போர் ஒரு திறத்தார். பஞ்சுத் தலையணைகளாகக் கருதுவோர் மற்றொரு திறத்தார். இரண்டும் பிழை.

ஸ்திரீகள் தமக்கிஷ்டமான பேரை விவாகம் செய்து கொள்ளலாம். விவாகம் செய்துகொண்ட புருஷனுக்கு ஸ்திரீ அடிமையில்லை; உயிர்த்துணை; வாழ்க்கைக்கு ஊன்று கோல்; ஜீவனிலே ஒரு பகுதி; சிவனும் பார்வதியும் போலே. விஷ்ணுவும் லக்ஷ்மியும் போலே. விஷ்ணுவும் சிவனும் பரஸ்பரம் உதைத்துக் கொண்டதாகக் கதை

சொல்லும் பொய்ப் புராணங்களிலே விஷ்ணு லக்ஷ்மியை அடித்தாரென்றாவது, சிவன் பார்வதியை விலங்கு போட்டு வைத்திருந்தாரென்றாவது கதைகள் கிடையா. சிவன் ஸ்திரீயை உடம்பிலே பாதியாகத் தரித்துக்கொண்டார். விஷ்ணு மார்பின் மேலே இருத்தினார். பிரம்மா நாக்குக் குள்ளேயே மனைவியைத் தாங்கி நின்றார். ஜகத்திற்கு ஆதாரமாகிய பெருங் கடவுள் ஆண் பெண் என இரண்டு கலைகளுடன் விளங்குகிறது. இரண்டும் பரிபூரணமான சமானம். பெண்ணை அணுவளவு உயர்வாகக் கூறுதலும் பொருந்தும்.

எனவே, இன்று தமிழ் நாட்டில் மாத்திரமே யல்லாது பூமண்டல முழுதிலும், பெண்ணைத் தாழ்வாகவும் ஆணை மேலாகவும் கருதி நடத்தும் முறைமை ஏற்பட்டிருப்பது முற்றிலும் தவறு. அது துன்பங்களுக்கெல்லாம் அஸ்திவாரம்; அநீதிகளுக்கெல்லாம் கோட்டை; கலியுகத்திற்குப் பிறப்பிடம்.

இந்த விஷயம் தமிழ் நாட்டில் பல புத்திமான்களின் மனதிலே பட்டு, பெண் விடுதலைக் கக்ஷி தமிழ் நாட்டின் கண்ணே பலமடைந்து வருவதை நோக்குமிடத்தே எனக்கு அளவில்லாத மகிழ்ச்சியுண்டாகிறது. இந்த விஷயத்திலும் தமிழ் நாடு பூமண்டலத்துக்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்குமென்பதில் ஆக்ஷேபமில்லை.

அடுத்த விஷயம் மத பேதங்களைக் குறித்தது. இதில் பாரத தேசம்—முக்கியமாகத் தமிழ்நாடு—இன்று புதிதாக அன்று, நெடுங்காலமாக தலைமையொளி வீசிவருதல் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ராமானுஜர் தமிழ் நாட்டில் பிறந்தவர் அன்றோ? ஆழ்வார்களும் நாயன்மார் களும் அவதாரம் புரிந்தது தமிழ் நாட்டிலன்றோ? பறையனைக் கடவுளுக்கு நிகரான நாயனாராக்கிக் கோயிலில்

வைத்தது தமிழ் நாட்டிலன்றே? சிதம்பரம் கோயிலுக்குள்ளே நடராஜாவுக்கு ஒரு சந்நதி, பெருமாளுக்கொரு சந்நதி. ஸ்ரீரங்கத்திலே, பெருமாளுக்கு ஒரு துருக்கப் பெண்ணைத் தேவியாக்கித் துலுக்க நாச்சியார் என்றுபெயர் கூறி வணங்குகிறார்கள். "எம்மதமும் சம்மதம்" என்றார் ராமலிங்க ஸ்வாமி.

உலகத்திலுள்ள மதபேதங்களை யெல்லாம் வேருடன் களைந்து ஸர்வ ஸமய ஸமரஸக் கொள்கையை நிலைநாட்ட வேண்டுமானால், அதற்குத் தமிழ் நாடே சரியான களம். உலக முழுவதும் மத விரோதங்களில்லாமல் ஒரே தெய்வத்தைத் தொழுது உஜ்ஜீவிக்கும்படி செய்யவல்ல மஹான்கள் இப்போது தமிழ்நாட்டில் தோன்றியிருக்கிறார்கள். அது பற்றியே பூமண்டலத்தில் புதிய விழிப்பு தமிழகத்தே தொடங்கு மென்கிறோம்.

மேலே சொன்னபடி, 'பரிபூரண ஸமத்வம் இல்லாத இடத்தில் நாம் ஆண் மக்களுடன் வாழமாட்டோம்' என்று சொல்லுவதனால் நமக்கு நம்முடைய புருஷராலும் புருஷ சமூகத்தாராலும் நேரத்தக்க கொடுமைகள் எத்தனையோ யாயினும், எத்தன்மையுடையனவாயினும் நாம் அஞ்சக் கூடாது. சகோதரிகளே! ஆறிலும் சாவு; நூறிலும் சாவு; தர்மத்துக்காக இறப்போரும் இறக்கத்தான் செய்கிறார்கள் ஆதலால், சகோதரிகளே! பெண் விடுதலையின் பொருட்டாகத் தர்ம யுத்தம் தொடங்குங்கள். நாம் வெற்றி பெறுவோம். நமக்குப் பராசக்தி துணைபுரிவாள். வந்தே மாதரம்.

# 18. புனர் ஜன்மம்

மலைப் பாம்புக் கதை கேட்டிருக்கிறீர்களா அல்லவா? அதன் வாலிலே தீப்பற்றி எரியுமாம். மலைப் பாம்பு சுகமாக குறட்டைவிட்டுத் தூங்குமாம். செல்லரித்துக்கொண்டு போனது நமது ஸ்மரணையிலே தட்டவில்லை. அத்தனை கர்வம், அத்தனை கொழுப்பு, அத்தனை சோம்பர்.

நமது கவிதையிலே ஆனந்தம் குறையத் தொடங்கிற்று. ருசி குறைந்தது. கரடுமுரடான கல்லும் கள்ளி முள்ளும் போன்ற பாதை நமது கவிகளுக்கு நல்ல பாதையாகத் தோன்றலாயிற்று. கவிராயர் 'கண்' என்பதை 'சக்கு' என்று சொல்லத் தொடங்கினர். ரஸம் குறைந்தது; சக்கை அதிகப்பட்டது. உண்மை குறைந்தது; பின்னல் திறமைகள் அதிகப்பட்டன.

சவியுறத்தெளிந்து தண்ணென்றொழுக்கமும் தழுவிச்
சான்றோர்
கவியெனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்

என்று கம்பன் பாடியிருக்கிறான்.

'சவி' என்பது ஒளி; இது வடசொல்; கம்பன் காலத்தில் அதிக வழக்கத்திலிருந்தது போலும். "ஒளி பொருந்தும்படி தெளிவுகொண்டதாகி தண்ணென்ற (குளிர்ந்த) நடையுடையதாகி, மேலோர் கவிதையைப் போலக் கிடந்தது கோதாவரி நதி" என்று கம்பன் வர்ணனை செய்கிறான். எனவே, கவிதைகளில் ஒளி தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்கவேண்டுமென்பது கம்பனுடைய மதமாகும். இதுவே நியாயமான கொள்கை.

மேலும், நெடுங்காலத்துக்கு முன்னே எழுதப் பட்ட நூல்கள் அக்காலத்து பாஷையைத் தழுவினவை. காலம் மாற மாற பாஷை மாறிக்கொண்டு போகிறது; பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர் அந்த அந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய பதங்களையே வழங்கவேண்டும். அருமையான உள்ளக்காட்சிகளை எளிமை கொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை. ஆனால் சென்ற சில நூற்றாண்டுகளாக, புலவர்களும் சாமியார்களும் சேர்ந்து வெகு ஸாதாரண விஷயங்களை அஸாதாரண அலௌகிக அந்தகார நடையில் எழுதுவதுதான் உயர்ந்த கல்வித் திறமை என்று தீர்மானஞ் செய்து கொண்டார்கள்.

இடைக்காலத்து ஸங்கீதம்

பாரத தேசத்து ஸங்கீதம் பூமியிலுள்ள எல்லா தேசத்து ஸங்கீதத்தைக் காட்டிலும் மேலானது. கவிதையைப்போலவே ஸங்கீதத்திலும் நவரஸங்களின் தொழில் இருக்க வேண்டும். நவரஸங்களைப்பற்றி இந்தப் பத்திரிகையிலே (சுதேசமித்திரன்) தனியாக ஒரு வியாஸம் பின் எழுதப்படும். இன்ன இன்ன ராகங்களிலே இன்ன இன்ன சமயங்களில் இன்ன இன்ன ரஸங்கள் தோன்றப் பாட வேண்டுமென்ற விதிகள் எல்லாம் பூர்வ காலத்து நூல்களிலே காணப்படுகின்றன. கீர்த்தனத்திலுள்ள சொற்களின் அர்த்தமும் ராகத்தின் ஒலியும் ரஸத்திலே ஒன்றுபட்டிருக்க வேண்டும். தியாகையர் காலம்வரை நமது தேசத்து ஸங்கீதம் ஒளியுடனிருந்தது. பிறகு இதிலும் இருள் சேரத் தொடங்கிவிட்டது. பாட்டிலே ரஸச் சேர்க்கை கிடையாது. அப்படியே சேர்த்தாலும் சோக ரஸம் (கருணை ரஸம்) தான் சேர்ப்பார்கள். மற்றவை மடிந்து போயின. பாட்டுக் கிசைந்தபடி தாளம் என்பதுபோய் தாளத்துக் கிசைந்தபடி பாட்டாகிவிட்டது. 'இன்பத்தைக் காட்டி

லும் கணக்கே பிரதானம்' என்று முடிவு செய்து கொண்டார்கள். இன்பமும் கணக்கும் சேர்ந்திருக்கவேண்டும். இன்பமில்லாமல் கணக்கு மாத்திர மிருந்தால், அது பாட்டாகாது.

இடைக் காலத்தே நமக்குச் நேர்ந்த கேட்டிற்கு ஸங்கீதத்தையும் கவிதையையும் திருஷ்டாந்தங்காட்டினோம். ஆனால், இந்தக் கேடு அவை இரண்டையும் மாத்திரமே தொட்டு நிற்கவில்லை. நமது சித்திரத் தொழில், நமது சிற்பம், நமது ஜனக்கட்சி, ஜன நீதி, நமது சாஸ்திரம், தலை, கால்— எல்லாவற்றிலும் இந்தக் கேடு பாய்ந்துவிட்டது. நோய் முற்றிப்போயிருந்தது. பராசக்தி நல்ல வேளையில் நமக்குள் உயர்ந்த வைத்தியர் பலரை அனுப்பினாள். அவளுக்கு நம்மீது கிருபைவந்து விட்டது. எனவே, பிழைத்தோம். ஆனாலும், இம்முறை பிழைத்தது புனர்ஜன்மம். இந்தப் புனர் ஜன்மத்தின் குறிகளை எல்லாவற்றிலும் காண்கிறோம். பாரத ஜாதி புதிதாய்விட்டது. தற்காலத்திலே பூமண்டலத்து மஹா கவிகளில் நமது ரவீந்த்ரநாதர் ஒருவர் என்று உலகம் ஒப்புக்கொள்ளுகிறது. இதுவரை ஐரோப்பிய பண்டிதர்கள் இயற்கை நூல் (ப்ரகிருதி சாஸ்திரம்) தமது விசேஷ உடைமை என்று கருதி வந்தார்கள்: இப்போது நமது ஜகதீச சந்திர வஸு அந்த வழியில் நிகரற்ற திறமை பெற்றவர் என்பதை மேல் நாட்டு வித்வான்களில் ஒப்புக் கொள்ளாதார் யாருமில்லை. தமிழ் நாட்டிலே புதிய கவிதையும் சாஸ்திர ஒளியும் விரைவிலே தோன்றும்; உலகம் பார்த்து வியப்படையும்.

செத்துப் பிழைத்தோம். ஆனால் உறுதியாக நல்ல வயிரம் போலவே பிழைத்து விட்டோம். புதிய ஜன்மம் நமக்கு மிகவும் அழகான ஜன்மமாகும்படி தேவர்கள் அருள் புரிந்திருக்கிறார்கள். அதன் பொருட்டு அவர்களை இடைவிடாமல் வாழ்த்துகின்றோம்.

# 19. தென்றலுடன் பிறந்த பாஷை

"தமிழ்ப் பாஷையின் இனிமை" என்ற தலைப் பெயருடன் சென்னை, "சுதேசமித்திரன்" பத்திரிகையிலே இனியதோர் குறிப்பு எழுதபட்டிருக்கின்றது. அதனை மற்றோரிடத்திலே எடுத்துப் பிரசுரித்திருக்கிறோம். தென்றலுடன் பிறந்த தமிழ் மொழியின் இளமையைப் பற்றி டாக்டர் ஜி. யு. போப் என்னும் புகழ் பெற்ற விற்பன்னர் கொண்டிருக்கும் மதிப்பை அதில் எடுத்துக் காட்டியிருப்பது தமிழர்கள் அனைவரும் கண்டு மகிழத் தக்கதாக இருக்கின்றது. ஆங்கிலப் பெண்களின் இதழ் நயத்திற்கும், செவி நுட்பத்திற்கும், அபிசிருக்கும் தமிழைப் போன்ற பொருத்தமுடையது வேறெந்த பாஷையும் இல்லையென்று போப் கூறுகிறார். தற்காலத்திலே நம் நாட்டவர்கள் நமது அருமைத் திருமொழியின் சுவையை வளர்க்க முயலாமல் அதன் இன்பமெல்லாம் பாழாக விட்டிருப்பதைப் பற்றி மேற்படி குறிப்பெழுதியவர் மிகுந்த கோபமுணர்த்தி இருக்கின்றார். நாம் அந்த விஷயங்களில் நமக்கேற்பட்டிருக்கும் அன்புகளைப் பல வாரங்களின் முன்பு ஒரு தடவை விஸ்தாரமாக எழுதியிருக்கிறோம்.

பொறுப்பென்பதே அற்ற சில மூட வாலிபர்கள் தாம் அரைகுறையாகக் கற்றிருக்கும் அன்னிய பாஷைத் தருக்கு மேலிட்டவர்களாகித் தமிழ் மொழியே இறந்து போய்விட வேண்டுமென்று கூறுவதை நன்கு கண்டித்துப் பேசியிருக்கிறோம். இவர்கள் கிடக்க, மற்றப்படிப் பொதுவாக இந்நாட்டில் ஆங்கிலம் கற்றோரெல்லாம் சுபாஷாபிமானம் என்பது மிகவும் குன்றியிருப்பது அன்றி, அதன் நயமறியாது திட்டுவதை நினைக்கும்பொழுது நமக்கு

வருத்தமுண்டாகிறது. இதன் சம்பந்தமாகச் சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய மஹா வித்வான் ஸ்வாமிநாதையர் சொல்லிய வார்த்தை யொன்று நமது நெஞ்சை விட்டு ஒருபோதும் அகல மாட்டாது. மேற்படி காலேஜ் தமிழ்ச் சங்கத்தில் ஒரு 'மீட்டிங்' நடந்தது. தமிழ்ப் பாஷையின் அருமையைப் பற்றி ஏதோ பிரஸ்தாபம் வந்தது. அப்போது ஸ்வாமி நாத ஐயரவர்கள் எழுந்து பின்வருமாறு பேசினார்:— "ஆங்கிலேய பாஷையின் இலக்கிய நூல்களில் எத்தனையோ அருமையான கருத்துக்கள் ததும்பிக் கிடப்பதாகச் சொல்கிறார்கள். அந்தப் பாஷை எனக்குத் தெரியாது. அதனால் அவ் விஷயத்தில் ஒரு விதமான அபிப்பிராயமும் என்னால் கொடுக்க முடியாது. என்ற போதிலும் மேற் கண்டவாறு சொல்வோர் தமிழ்ப் பாஷையிலே அவ்வித மான அருமையான விஷயங்கள் கிடையாவென்று சொல் லும் பொழுது உடன் எனக்கு வருத்தமுண்டாகிறது. இவ்வகுப்பினர்களுடன் நான் எத்தனை முறையோ சம் பாஷணை செய்திருக்கிறேன். அந்தச் சமயங்களிலே நான் இவர்களது தமிழ் வன்மையைப் பரிசோதனை புரிந்திருக் கிறேன். இவர்கள் அத்தனை சிறந்த பண்டிதர்களென்று எனக்குப் புலப்படவில்லை. பழங்காலத்துத் தமிழ் நூல் களிற் பயிற்சி யில்லாத இவர்கள் அவற்றைப் பற்றி இழி வான அபிப்பிராயம் கொடுப்பதுதான் வெறுக்கத் தக்க தாக இருக்கின்றது. ஆனையையே பார்த்திராத குருடனு அதன் நிறம் முதலியவற்றைப் பற்றி ஓர் அபிப்பிராயம் கொடுக்க வேண்டும்? "போப் முதலான விற்பன்னர்கள் இவர்கள் இருக்கும் திசை நோக்கிக் காறியுமிழும் வண்ண மாக" நம்மவர்களிற் சிலர் நடந்து கொள்கிறார்களென்று மேற்கூறப்பட்ட "மித்திரன்" குறிப்பில் எழுதபட்டிருப் பதை நாம் முற்றும் அங்கீகாரம் செய்கிறோம்.

''சுதேசமித்திர''னில் வெளிவந்த குறிப்பு வருமாறு:—

## தமிழ் பாஷையின் இனிமை

[ ''மித்திரன்'', 1906 ஸெப்டம்பரில் வெளிவந்த குறிப்பு ]

பாற் கடலிலே பிறந்த மீன்கள் பாலைப் பெரிதாகப் பாராட்டுவது வழக்கமே கிடையாதென்பது நெடுங்கால மாக வழங்கி வரும் உண்மையாகும். அவ்வசனக் கருத்து முற்றும் மெய்யென்பதற்குச் சிறிது காலத்தின் முன்பு டாக்டர் போப்பையர் லண்டனில் ராயல் ஏஷியாடிக் சபை யார் முன்பு செய்த உபந்நியாசத்திலே நல்லதோர் திருஷ் டாந்தம் அகப்பட்டது. திருக்குறள், திருவாசகம் என்னும் தெய்வீக நூல்களை இங்கிலீஷிலே மொழி பெயர்த்தவரும் அநேக இலக்கண நூல்கள் பிரகரித்திருப்பவரும் ஆகிய டாக்டர் போப்பைத் தமிழ் நாட்டாரில் பெரும்பான்மை யோர் நன்கு அறிவார்கள். இவர் சொல்கிறார்:—''அநேகர் (அதாவது அநேக ஆங்கிலேயர்கள்) பிரெஞ்சு, ஜெர்மன், இடாலியன் முதலிய பாஷைகளைப் போய்ப் படித்துக் கொண்டு இடர்ப்படுகிறார்கள். இப்படிச் செலவிடப்படும் காலத்தைத் தமிழ் கற்பதில் செலவிட்டால் எவ்வளவோ விசேஷமாகும். நான் அநேக (ஆங்கில) மாதர்களுக்குத் தமிழ் கற்பித்திருக்கிறேன். அவர்களுடைய இதழ் நயத் திற்கும், செவி நுட்பத்திற்கும் அபிருசிக்கும் அந்தப் பாஷை யைப் போல் எந்தப் பாஷையும் ஒத்து வருவதில்லை'' என்றார். இவர் தமிழ்ப் பாஷையின் இனிமையையும் பெரு மையையும் குறித்து எவ்வளவோ சிலாக்கியமாகப் பேசி யிருக்கிறார். ஆனால் தமிழ்நாட்டிலே பிறந்து வளர்ந்த நம்ம வர்களோ அந்தப் பாஷையின் இனிமையைப் பாதுகாக்க வேண்டுமென்றேனும் அபிவிருத்தி செய்யவேண்டுமென்றே னும் சிறிதும் முயல்வதில்லை.

தமிழ் மட்டும் தெரிந்த ஜனங்களிற் சிறுபாலார் தமிழ் விஷயத்தில் ஒருவிதமான மூடபக்தியாவது வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆங்கிலம் கற்றுணர்ந்தவர்கள் இவ் விஷயத்தில் தமது கடமையை முற்றும் மறந்து விடுகிறார்கள். இவர்கள் தமிழ்ப் பாஷை விஷயத்தில் கொண்டிருக்கும் எண்ணத்தையும் இவ் விஷயத்தில் இவர்கள் வகிக்கும் அசிரத்தையையும் டாக்டர் போப்பைப் போன்ற ஆங்கிலேயர்கள் அறியும் பக்ஷத்தில் இவர்கள் இருக்கும் திசையை நோக்கிக் காறியுமிழும் வண்ணமாக நம்மவர்கள் நடந்து கொள்கிறார்கள்.

# 20. தமிழில் எழுத்துக் குறை

## 1

ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி, பெங்காளி, மஹாராஷ்ட்ரம், குஜராத்தி, தெலுங்கு, கன்னடம்; மலையாளம், முதலிய மற்ற பாரத பாஷைகளிலெல்லாம் வர்க்க எழுத்துக்கள் உண்டு.

அதாவது, க-ச-ட-த-ப என்ற ஐந்து வல்லெழுத்துக் களில் ஒவ்வொன்றுக்கும் நான்கு வேறுபாடுகள் இருக் கின்றன. திருஷ்டாந்தமாக :

| | வடசொல் | | பொருள் |
|---|---|---|---|
| 1. | பரம் | | மேலானது |
| 2. | பலம் | (ப = Ph)) | பயன் |
| 3. | பலம் | (ப = b) | வலிமை |
| 4. | பாரம் | (ப = bh) | சுமை |

வெவ்வேறு எழுத்துக்களை முதலாகக் கொண்ட இந்த நான்கு சொற்களையும் தமிழில் வழங்கி வருகிறோம். ஆனால், "எல்லி செட்டிலெக்க ஏகலெக்க" என்பது போல எல்லா வற்றிற்கும் ஒரே "ப" தான் போடுகிறோம்.

ஆனால் ஸம்ஸ்க்ருதச் சொற்களை ஸம்ஸ்க்ருத வழக்கப் படி நாம் உச்சரிக்க வேண்டிய அவசியம் இல்லையாதலால், நமக்கு அந்த எழுத்துக்கள் வேண்டுவதில்லை யென்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். சரி, நியாயமென்று வைத்துக் கொள் வோம்.

வெளிநாட்டு ஊர்களின் பெயர்களையும் மனிதர்களின் பெயர்களையும் நாம் சரியானபடி சொல்ல வேண்மாடு,

அதுவும் வேண்டாமா? "சுதேசமித்திரன்" பத்திரிகையை சென்ற 15 வருஷங்களாகப் படித்து வரும் ஓர் ஐயங்கார் நமது நிதானக் கட்சித் தலைவராகிய ஸ்ரீ கோகலேயின் பெயரைத் தப்பாக உச்சரிப்பதை நான் பார்த்திருக்கிறேன். 'தங்கம்' என்ற சொல்லில் 'க' உச்சரிப்பது போல அப்பெயரின் முதலெழுத்தாகிய "கோ" (Go)வை வலிதாகச் சொல்ல வேண்டும். பிராமணர் "கோபுரம்" என்று சொல்லும்போது "கோ"வை எப்படிச் சொல்லுகிறார்களோ அதுபோலக் "கோகலே"யின் முதலெழுத்தைச் சொல்ல வேண்டும். இரண்டாவதெழுத்தாகிய "க" என்பதை "க்ஹ" என்ற ஒலி இலேசாகத் தோன்றும்படி அழுத்தி உச்சரிக்கவேண்டும். "மகம்" என்று வைதிகப் பிராமணர் சொல்வது போலே. ஷெ ஐயங்கார் இதை "கோஹலே" என்று சொன்னார். அவர் மேல் குற்றமில்லை; "சுதேச மித்திரன்" மேலும் குற்றமில்லை; தமிழில் எழுத்துக் குறைகிறது.

பெள்ளாரி, குத்தி, பனாரஸ், பம்பாய்—என்று நாட்டு ஊர்ப் பெயர்களைக்கூட நாம் விபரீதமாக எழுதும்படி நேரிட்டிருக்கிறது. இதற்கென்ன விமோசனம்?

கல்கத்தாவில் இருக்கும்போது ஸ்ரீமான் அரவிந்த கோஷ் (இவர் பெயரையும் தமிழில் சரியாக எழுத இடமில்லை. "Ghosh" என்பதை "Cosh" என்று எழுத நேரிடுகிறது!)—ஸ்ரீமான் அரவிந்தர் தமிழ் கற்றுக்கொள்ள விரும்பினாராம். அங்குத் தென்னாட்டு மனிதர் ஒருவர் இவருக்கு நமது அரிச்சுவடி முழுதும் கற்றுக் கொடுத்தார். முதல் பாடப் புஸ்தகமும் நடந்தது. அப்படியிருக்கும் ஒருநாள் ஒரு தமிழ் நாட்டுப் பத்திரிகை அகப்பட்டது. அதில், "பீரேந்திரநாத் தத்த குப்தர் வழக்கு" என்று மகுடமிட்டு ஒரு வியாஸம் எழுதியிருந்தது.

அதைப் பார்த்துவிட்டு அரவிந்தர் தமது தமிழ் வாத்தியாரிடம், "இதென்ன" என்று கேட்டார்.

வாத்தியார், "இது ஒரு பெங்காளிப் பெயர்" என்று சொன்னாராம்.

அரவிந்தர் மயங்கிப் போய். "எப்படி?" என்று கேட்டார்.

வாத்தியார், "Birendranath Dutta Gupta" என்று அச் சொல்லைப் பெங்காளி ரூபத்திலே சொன்னார்.

"இங்கிலீஷ் தெரியாத கிராமத்துத் தமிழர் இச் சொல்லை எப்படி வாசிப்பார்கள்?" என்று அரவிந்தர் கேட்டார்.

"நீர் வாசித்தது போலவே Pirendiranata Tatta Kuptar (t...த) என்றுதான் வாசிப்பார்கள்" என்று வாத்தியார் சொன்னாராம்.

இன்றும் அரவிந்தர் இந்தக் கதையைச் சொல்லிச் சொல்லிச் சிரிக்கிறார்.

நமது பத்திரிகைகளில் ஐரோப்பாவிலுள்ள நகரங்கள், மலைகள், முதலியவற்றின் பெயர்களைப் பார்க்கும்போது கண் கூசுகிறது. அதைத் தமிழ் மாத்திரம் அறிந்த தமிழர் எப்படி வாசிப்பார்களென்பதை நினைக்கும்போதே காது கூசுகிறது.

இங்கிலீஷ் அக்ஷரத்தில் ப்ரெஞ்ச், அரபி, பார்ஸி, ஸம்ஸ்க்ருதம் முதலிய பாஷைகளின் பதங்கள் சிலவற்றை எழுதுவதற்கு இங்கிலீஷ் அரிச்சுவடி இடங்கொடாததைக் கருதிச் சில புதிய குறிகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எல்லா ஐரோப்பிய பாஷைகளுமே அந்நிய பாஷைகளிலுள்ள விசேஷ உச்சரிப்புகளுக்கு இணங்கும்படி சில

தனிக் குறிகள் ஏற்பாடு செய்து வைத்துக்கொண்டிருக்கின்றன.

நாமும் அப்படியே சில விசேஷக் குறிகள் ஏற்பாடு செய்து கொள்ளுதல் மிகவும் அவசியமாகும்.

ஏற்கெனவே நான் இந்தக் குறையை நீக்கும் பொருட்டாக மிகவும் சுலபமாக ஐந்து நிமிஷங்களில் யாரும் கற்றுக் கொள்ளக்கூடிய சில குறிகள் தயார் செய்து வைத்திருக்கிறேன். ஆனால் இப் புதிய வழியைத் தமிழ் நாட்டுப் பத்திராதிபர்களும் பிறரும் அறியும்படி துண்டுப் பத்திரிகைகள் போட்டு வேலை செய்வதற்கு வேண்டிய சௌகர்யங்கள் எனக்கு இன்னும் சில மாதங்கள் கழிந்த பிறகுதான் ஏற்படும்.

இப் புதிய உபாயத்தை அனுஸரிப்பதால் இப்போது நாமெல்லோரும் எழுதி வரும் முறைமைக்கு யாதொரு ஸங்கடமும் உண்டாகாது புதிய குறிகள் தெரியாதவர்கள் கூட வழக்கம் போலவே படித்துக் கொண்டு போவார்கள். யாருக்கும் எவ்விதமான சிரமமும் ஏற்படாது. நமது பாஷைக்கு நமது அரிச்சுவடி போதும். அந்நிய தேசப்பெயர்கள் முதலியவற்றுக்காக மாத்திரமே இப் புதிய முறை ஏற்பட்டது. எனது புதிய முறையை இப்போதே அறிந்து கொள்ள விரும்புவோர் கீழே கண்ட என் விலாசத்துக்கு இரண்டணா தபால் முத்திரை வைத்தனுப்பினால் அவர்களுக்கு இம் முறையை நல்ல கையெழுத்தில் தெளிவாக எழுதுவித்து அனுப்புகிறேன்.

## 2

ஜ, ஷ, ஸ ஹ, க்ஷ என்ற எழுத்துக்களைத் தமிழ் அரிச்சுவடியில் நமது பூர்விகர் சேர்த்திருக்கிறார்கள். இவற்றைச் சேர்க்காவிட்டால் தமிழ் நேரே பேச முடியாமலும் எழுத

முடியாமலும் போய்விடுமென்று அவர்களுக்கு அச்சமுண் டாயிற்று.

தொல்காப்பியர் கட்டின அரிச்சுவடி போதாத வண்ணமாக நமது பாஷை வளர்ச்சி பெற்றவுடனே நமது முன்னோர்கள் மேற் காட்டிய எழுத்துக்களையும் சேர்த்தார் கள்.

நாமும் அப்படியே நமக்கு இக்காலத்தில் ஏற்படும் உச்சரிப்புக் கஷ்டங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்கு, கிரந்த எழுத்துக்களைச் சேர்க்கலாமென்று சில பெரியோர் கருதுகிறார்கள். ஆனால் அதைக் காட்டிலும் அடையாளங் கள் போடுவது சுலபமான வழி.

இப்போதுள்ள அரிச்சுவடியிலே பழகிய தமிழருக்கு மேற்படி அடையாளங்களால் எவ்வித ஸங்கடமும் நேரி டாது. தப்பாகவோ, சரியாகவோ வழக்கம்போல வாசித் துக்கொண்டு போவதை அடையாளங்கள் தடுக்க மாட்டா. கிரந்த எழுத்துக்களைக் கொண்டு சேர்த்தால் பாதி படிக்கும் போதே நிறுத்திவிட நேரிடும்.

ப்ரெஞ்ச், இங்கிலீஷ் முதலிய ஐரோப்பிய பாஷை களிலும், ஹிந்தி முதலிய நமது நாட்டுப் பாஷைகளிலும் —உயிருள்ள பாஷைகளிலே வளர்வனவெல்லாவற்றிலும் உச்சரிப்புத் திருத்தத்தைக் கருதிப் பழைய எழுத்துக்களில் சில அடையாளங்கள் சேர்த்து சௌகர்யப் படுத்திக் கொள்ளுகிறார்கள். இதனால் எழுத்தின் வடிவத்தில் யாருக்கும் சந்தேகம் நேரிடாது. இந்த எளிய வழியை அனுசரித்து நமது தமிழ் மொழி விசாலமடைய வேண்டு மென்பதே என்னுடைய விருப்பம்.

# 21. தமிழ் பாஷைக்கு உள்ள குறைகள்

[பி. ஏ. பரீட்சை தேறிய ஒரு வாலிபனுடைய எண்ணங்கள்]

வாலிபன் : தமிழ்ப் பாஷை ஒன்றுக்கும் பிரயோஜனமில்லை. இது சீக்கிரம் அழிந்தால்தான் நமது நாடு பிழைக்கும்.

புலவன் : ஏதப்பா, உனக்கு இந்தப் பாஷையிலே இவ்வளவு கோபம் உண்டாயிருக்கின்றது?

வா : நவீன நாகரிகத்தினுடைய சங்கதி உமக்குத்தெரியாதையா! மனித ஜாதி குரங்கு நிலைமையினின்றும் மாறிக் காட்டு மனிதன் ஸ்திதிக்கு வந்தபோது உங்கள் தமிழ்ப் பாஷை ஏற்பட்டது. இப்போது உலகம் எவ்வளவோ விசாலமடைந்து போயிருக்கிறது. வானத்தில் உள்ள கிரகங்கள், நக்ஷத்திரங்கள் முதலியவற்றையெல்லாம் மனித அறிவு ஊடுருவிச் சென்றிருக்கிறது. பதார்த்தங்களின் அணுக்களிலே எல்லாம் மனுஷ புத்தி நுழைந்து சென்றிருக்கிறது: பிரகிருதி விநோதங்களை மனிதன் எவ்வளவோ அதிகமாக ஆராய்ச்சி செய்திருக்கிறான். சமுத்திரத்து ஜலம் அனைத்தையும் குடத்துக்குள்ளே எப்படி அடைக்க முடியும்? அதுபோலவே அளவின்றி விரிந்து கிடக்கும் மனுஷ புத்தியின் நவீன சலனங்களை எல்லாம் உம்முடைய பண்டைக்காலத்துத் தமிழிலே கொண்டு நுழைப்பது மிகவும் பிராணாபத்தாய் இருக்கின்றது. நாம் நாகரிகம் அடைய வேண்டுமானால் இந்தத் தமிழ் பாஷையை முற்றும் கைவிட்டு விட வேண்டும்.

புல : 'நாம்' என்று யாரையப்பா சேர்த்துச் சொல்கிறாய்? உன் மட்டிலே நீ பேசுவதைப் பார்த்தால் ஞானக்

கடலின் கரை கடந்தவனாக நினைத்துக் கொண்டிருக்கிறாய்! உன்னைப்போல் இங்கிலீஷ் படியாத மற்ற ஜனங்கள் தமிழ்ப் பாஷையை எப்படிக் கைவிட முடியும்? ஒரு பாஷையை நீ மரக்கிளை என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா? அதை ஜனங்கள் பிடித்துத் தொத்திக்கொண்டு விட மாட்டோம் என்கிறார்களென்று எண்ணுகிறாயா? மனுஷ பாஷைகள் மனுஷ வாழ்க்கையோடு ஒட்டி உடன் வளர்ந்த பொருள்களல்லவோ? தலைமுறை தலைமுறையாய் எத்தனையோ நூற்றாண்டுகளாக ஒரு நாட்டார் பேசி வரும் பாஷை அவர்களின் உயிரோடு ஒன்றி விடுகின்றது. மனித அறிவு வளர்ச்சிக்குப் பாஷை ஒருகண்ணாடி. ஒரு நாட்டாரின் அறிவு வளர்ந்துகொண்டு வரவர அந் நாட்டின் பாஷையும் விசாலம் அடைந்து வருகிறது. அன்னிய ராஜாங்கம், தாரித்திரியம், சரீரபலக் குறைவு, நோய், உற்சாகமின்மை முதலிய காரணங்களால் இப்போது இழிவு கொண்டு போயிருக்கும் தமிழ் நாட்டு ஜனங்கள், ஆங்கிலேயர் முதலிய சுதந்திர நாட்டாரைப் போல் விருத்தி அடைந்து வருதல் அசாத்தியமாக இருக்கிறது என்பது ஒருவாறு மெய்யாக இருக்கலாம். அதற்குப் பாஷையைக் குற்றம் சொல்வதிலே என்ன பிரயோஜனம் இருக்கிறது? 'ஆடத் தெரியாத தாசி கூடம் போதாது' என்பது போலக் கதை சொல்லுகிறாயே?

வா : போமையா! பொதுப்படையாகப் பேசிக் கொண்டு போவதிலே என்ன பயன் இருக்கிறது? இப்போது ஐரோப்பியர்கள் பூமி நூல், கடல் நூல், பிராணி நூல், அணு நூல் முதலிய நூல்களிலே எல்லாம் அளவு கடந்த முதிர்ச்சி பெற்றிருக்கிறார்கள். மின்சாரம், காந்தம் இவற்றின் குணதிசயங்களைப் பற்றி நவீன ஆராய்ச்சி வரம்பு இல்லாதிருக்கிறது. மின்சாரம், நீராவி, என்பவற்றைத் துணையாக வைத்துக்கொண்டு மனித

ஜாதியின் சௌகர்யங்களுக்கும் அபிவிருத்திக்கும் பயன் படுமாறு ஆயிரக்கணக்காக யந்திரங்களும், புதிய கருத்துக் களும் லக்ஷக்கணக்காக உண்டாயிருக்கின்றன. இவற்றுக்கு எல்லாம் தமிழ்ப் பாஷையிலே பெயரும் கிடையாது, மண்ணும் கிடையாது. இப்படி இருக்க நீர் ஏதோ பொதுப்படையாக உருட்டிக்கொண்டு போகிறீர்?

புல : அடடா! உனது விவகாரத்தின் நுட்பத்தை என்னென்று சொல்வேன்! நீ ஓயாமல் அடுக்கிக் கொண்டு போன நவீன ஆராய்ச்சிக் கதைகள் எல்லாம் தமிழ் நாட்டு ஜனங்களுக்குள்ளே வழக்கமான பிறகல்லவோ அவை தமிழ்ப் பாஷையிலே வழங்குவதற்குச் சுலபமாகும். தமிழ் நாட்டிலேயோ பொது ஜனங்களுக்கு எழுதப் படிக்கத் தெரிவதே அருமையாய் இருக்கிறது. வயிற்றுப் பிழைப்பே பெரிய கஷ்டமாய் இருக்கின்றது. ராஜாங்கத்தார் பொது ஜனக் கல்விக்கு மிக்வும் வெட்கக்கேடான சிறு தொகை செலவிடுகின்றார்கள். சிறுபான்மையோருக்குத் தரப்படும் கல்விகூட அவர்களைக் குமாஸ்தாக்களாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் கொடுக்கப்படுவதே யன்றி வேறு எவ்விதமான பெருந் தொழிலுக்கும் தகுதி யாக்க் அன்று. எனவே இந்நாட்டார் பொதுவாக மிகவும் அறிவு சுருங்கிப் போயிருக்கிறார்கள். இதற்குப் பாஷை என்ன செய்யும்? நீராவியினால் ஓட்டப்படும் ரெயில் வண்டி இந் நாட்டிலே வழக்கமாய் இருக்கிறது. இப்போது பொது ஜனங்கள் அதற்கு வார்த்தை ஏற்படுத்திக் கொள்ளாமலா இருக்கிறார்கள்? மின்சார சக்தியால் தந்தி ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. அதற்குத் தமிழர்கள் வார்த்தை உண்டாக்கி கொள்ளவில்லையா? கோவணம் இல்லாத நிர்வாண தேசத் தாரின் பாஷையிலே பட்டு அங்கவஸ்திரத்துக்குப் பெயர் கிடையாதென்றால் அதற்கு அவர்களுடைய பாஷையின் மேல் என்ன குற்றம் இருக்கிறது? துணியைக் கொண்டு

கொடுத்து வழக்கப்படுத்தினால் முறையே வார்த்தைகளும் உண்டாக்கிக் கொள்வார்கள். தமிழ் நாட்டிலே தொழில் வகைப்பாடும் ஆலோசனை மிகுதியும் ஏற்பட்டால் தமிழ் பாஷை அன்றைக்கே வளர்ந்துவிடும். அப்படிக்கின்றி இந்தப் பாஷையையே ஒழித்துவிட வேண்டும் என்று சொல்லுவது மகா மூடத்தனம் அல்லவா? கண்ணிலே வியாதி கொண்டிருக்கும் ஒருவன் அதன் மூல காரணங்களைத் தெரிந்து கொண்டு ஔஷதப் பிரயோகம் செய்யாமல், இந்தக் கண்களையே ஒழித்து விட்டு நல்ல பிரகாசமுள்ள இரண்டு பிரான்ஸ் தேசத்துக் கண்கள் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும் என்று யோசிப்பது நல்ல அறிவாகுமா? உன் கண்களை நீக்கிவிட்டுப் பிரான்ஸ் தேசத்துக் கண்களை வாங்கி வைத்துக்கொள்வது சாத்தியமா?

வா : ஏனையா சும்மா வளர்க்கிறீர்? நான் சொல்வதன் குறிப்பு உமக்குத் தெரியவில்லையே! தமிழ்ப் பாஷை இயற்கையிலே நவீனக் கருத்துக்களுக்குப் பொருத்தம் உடையதன்று. இப்போது கவிதை விஷயத்தை எடுத்துக் கொள்வோம். இதற்கும் மின்சாரம் காந்தம் முதலிய பூத சாஸ்திர அபிவிருத்திகளுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாதல்லவா? இதில்கூடத் தமிழ்ப் பாஷை ஏன் இத்தனை சீர் கெட்டு இருக்கிறது? டெனிஸன் முதலிய நவீன ஆங்கிலக் கவிகளையும், சூரியநாராயண சாஸ்திரி முதலிய தமிழ் நாட்டுப் புலவர்களையும் ஒப்பிட்டுப் பாரும். ஆங்கிலப் படிப்பற்ற தமிழ்ப் புலவர்களின் நிலைமை சொல்ல வேண்டியதில்லை.

புல : யோசனையின்றி ஏனடா பேசுகிறாய்? தமிழ் நாடு இப்போது சுதந்திரமும், சரீர பலமும், மனோபலமும் இழந்து தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிட்டது. எனவே இந்

நாட்டில் உயர்ந்த கவிஞர்கள் இல்லாமல் போய் விட்டார்கள். நோய் கொண்ட மாமரத்திலே நல்ல பழம் எங்ஙனம் தோன்றும்? மரத்தின் நோயைத் தீர்த்தல்லவோ பிறகு கனியினுடைய ருசியைப் பார்க்க வேண்டும்? தமிழர்களைப் புனிதப்படுத்திப் பிறகு பார்த்தால் தமிழ்ப் பாஷையின் நறுமணம் விளங்கும். தமிழர்கள் நேர்மையாய் இருந்த காலத்தில் திருத்தக்கதேவர், இளங்கோ, கம்பர் முதலிய எண்ணிறந்த தமிழ்ப் புலவர் இருந்து அருமையான தெய்வீகப் பாடல்கள் பாடியிருக்கிறார்கள்.

வா : சும்மா ஸ்தோத்திரம் பண்ணாதேயும்; கம்பன் டம்பன் எல்லாம் நானும் கொஞ்சம் பார்த்திருக்கிறேன்.

புல : அப்பா தயை செய்து உளறாதே. காலேஜுகளிலே கம்ப ராமாயணம் சொல்லித் தரப்படும் மாதிரியிலே உனக்கும் உன்போன்றோர்க்கும் தமிழ்ப் புலவர்களிடம் வெறுப்பு ஏற்படுதல் சகஜமேயாம். எனினும், போப் முதலிய ஆங்கிலேய வித்வான்கள் கூடப் பண்டைத் தமிழ் புலவர்களின் ஆழ்ந்த கருத்துக்களையும் பெருமைகளையும் கண்டு மிகுந்த வியப்படைகிறார்கள்.

கம்ப ராமயணத்திலே ஸீதை தனியாக அசோக வனத்திலே இருக்கும்போது ராமபிரான் அவ்வப்போது செய்த செய்கைகளையும் விளையாடிய விளையாட்டுக்களையும் நினைத்து நினைத்து வருந்திக் கொண்டிருப்பதாகச் சில பாடல்கள் சொல்லப்படுகின்றன. அதிலே ஒரு பாட்டை உனக்கு எடுத்துச் சொல்லிப் பொருள் கூறுகின்றேன். அது ஸ்ரீராமன் பட்டாபிஷேகம் பெறும்படி கட்டளை இடப்பட்ட காலத்திலேயும், 'ராஜ்யத்தை விட்டு வனாந்தரம் செல்' என்று கட்டளையிடப்பட்ட போதும் ஒரே மாதிரி மனமுடையவனாக முகம் மலர்ந்திருந்த வியப்பை ஸீதை

நினைத்துப் பார்த்துக் கொள்வதாகக் கூறப்படுகிறது. அப் பாட்டைக் கேள்:

"மெய்த் திருப்பதமேவென்ற காலையும்
இத்திருத் துறந் தேகென்ற போதிலும்
சித்திரத்தி லலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கு முகத்தினை யுன்னுவாள்"
(பாடலின் பொருள் சொல்லுகிறார்.)

பார்த்தாயா? இதிலே என்ன ஓசை நயமும், சொல் நயமும், பொருள் இன்பமும் மலிந்து கிடக்கின்றன. இதை உனக்கு ஒரு திருஷ்டாந்தமாகச் சொன்னேன். இவ்வாறு கம்ப ராமாயணத்திலே ஆயிரக்கணக்கான பாட்டுக்கள் செறிந்து கிடக்கின்றன. மாம்பழம் அழுகி இருக்கும்போது தின்று பார்த்தவன் பொதுப்படையாக மாம்பழமே கெட்ட பொருள் என்று நிந்திப்பது போல, தமிழ்ப் பாஷையும் தமிழர்களும் பதனம் அடைந்து போயிருக்கும் இந்தக் காலத்தைக் கவனித்து விட்டு நீ பாஷையையே குற்றஞ் சொல்லுவது நியாயமன்று. மஹரிஷி பால கங்காதர திலகர் முதலிய மஹான்கள் சொல்லும் வழிகளைப் பின் பற்றி நமது நாடு செல்வமும் பெருமையும் சுதந்திரமும் பெற்ற பிறகு, நமது பாஷை 'இருக்கும் மாதிரியைப் பார்த்தால் அப்போது ஆச்சரியம் அடையத் தக்க விதமாக இருக்கும்.

## 22. வருங்காலம்

உலகம் எவ்வளவு தீவிரமாக மாறிக்கொண்டு வருகிறதென்பதைத் தமிழ்நாட்டார் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். ஒவ்வொருவரும் சிற்சில விவகாரங்களில் மனத்தைப் பதிய வைத்துக்கொண்டு வெளியுலகத்தின் மாறுதல்களிலே புத்திசெலுத்தாமல் அற்ப விஷயங்களிலும் அற்பச் செய்கைகளிலும் நாளையெல்லாம் கழியவிட்டுக் கிணற்றுத் தவளைகளைப் போல் வாழ்வதிலே பயனில்லை.

வர்த்தகஞ் செய்வோர் கோடிக்கணக்கான பணப் பழக்கம் ஏற்படும்படி பெரிய வர்த்தகங்கள் செய்ய வழி தேட வேண்டும். படிப்பவர் அபாரமான சாஸ்திரங்களையும் பல தேசத்துக் கல்விகளையும் கற்றுத்தர வேண்டும். ராஜ்ய விவகாரங்களில் புத்தி செலுத்துவோர் உலக சரித்திரத்தை நன்றாகத் தெரிந்து கொண்டு, மற்ற ராஜ தந்திரிகளும் மந்திரிகளும் கண்டு வியக்கும்படியான பெரிய பெரிய யோசனைகளை செய்து நிறைவேற்றிப் புகழ் பெறவேண்டும். கைத்தொழில்களின் விஷயத்திலே நாம் இப்போது காட்டி வரும் சோர்வும் அசிரத்தையும் மிகவும் அருவருப்புக்கு இடந் தருகின்றன.

திருஷ்டாந்தமாக, நேர்த்தியான சித்திரங்களும் வர்ணங்களும் சேர்த்துப் பட்டிலும் பஞ்சிலும் அழகான ஆடைகள் செய்யவல்ல தொழிலாளிகள் நமது நாட்டில் இருக்கிறார்கள். இவர்களுக்குப் படிப்பில்லை; வெளியுலக நிலை தெரியாது. கையிலே முதற் பணமுமில்லை. நமக்குள்ளே கல்வியும் செல்வமும் உடையோரர் கூடி ஆராய்ச்சிகள் செய்து வெளிநாடுகளில் ஆவலுடன் வாங்கக்கூடிய

மாதிரிகள் எவை என்பதைக் கண்டுபிடித்து அவற்றை நமது தொழிலாளிகளைக் கொண்டு செய்வித்தால் மிகுந்த லாப முண்டாகும்.

இரும்புத் தொழில் உலகத்திலே வலிமையும் செல்வ முங் கொடுப்பது. எல்லாவிதமான கைத் தொழில்களும் தற்காலத்தில் இரும்பு யந்திரங்களாலே செய்யப்படு கின்றன. ஆதலால், நமது தேசத்துக் கொல்லருக்கு நாம் பலவிதங்களிலே அறிவு விருத்தியும் ஜீவன ஸௌகர்யங் களும் ஏற்பாடு செய்து கொடுத்து இடத்துக்கிடம் இயன்ற வரை இரும்புத் தொழில்களை வளர்க்க வேண்டும்.

இனி, வர்ணப்படம், தையல் வேலை, மைத் தொழில் முதலிய சித்திர வேலைகளில் நமது ஜனங்களின் அறிவு மிகவும் சிறந்தது. கொஞ்சம் சிரமப்பட்டால், இந்தத் தொழில்களை மறுபடி உயர்ந்த நிலைமைக்குக் கொண்டு வந்து விடலாம். சிறிது காலத்துக்கு முன்பு சீனத்திலிருந் தும் ஜப்பானிலிருந்தும் பல சித்திர வேலைகளைக் கொண்டு போய் அமெரிக்காவில் காட்டியபோது, அங்கே அவற்றிற்கு மிகுந்த புகழ்ச்சியும் பிரியமும் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

இதை நாமேன் செய்யக்கூடாது?

வெளி நாட்டுக்குக் கப்பலேறிப் போங்கள், புறப்படுங் கள். தொழிலாளிகளே, வியாபாரிகளே, வித்வான்களே, புத்திமான்களே, எப்படியேனும் யாத்திரைச் செலவுக்குப் பணம் தயார் செய்துகொண்டு அன்னிய தேசங்களைப் பார்த்துவிட்டு வாருங்கள். நமது தொழில்களுக்கும் கலை களுக்கும் யோசனைகளுக்கும் வெளி நாடுகளில் ஏராள மான உதவி கிடைக்கும். சந்தேகப்பட வேண்டாம்.

பரோடாவிலிருந்து இநாயத்கான் என்ற சங்கீத வித்வான் சில வருஷங்களுக்கு முன்பு தென் ஜில்லாக்களில் யாத்திரை செய்யவந்தது நம்மிலே சிலருக்கு ஞாப

மிருக்கலாம். இங்கே அவர் சாதாரணமாக இருந்தார். பின்னிட்டு அவர் பல தேசங்களிலே சஞ்சாரம் செய்து, பிரான்ஸ் தேசத்திலே போய் நல்ல கீர்த்தியடைந்திருக்கிறார். அங்கே பல பெரிய வித்வான்களும் பிரபுக்களும் அவருடைய தொழிலை அற்புதத்திலும் அற்புதம் என்று கொண்டாடுகிறார்கள். சங்கீத ஞானமுடைய தமிழ்ப் பிள்ளைகள், முதலாவது கொஞ்சம் இங்கிலீஷ் கற்றுக் கொண்டு பிறகு ஐரோப்பிய சங்கீதத்தின் மூலாதாரங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். இது மிகவும் சுலபமான காரியம். தமிழருடைய அறிவுக்கு எந்த வித்தையும் சுலபம். இந்தத் தேர்ச்சி கொஞ்சமிருந்தால், பிறகு நமது சங்கீதத்தை ஐரோப்பியர் அனுபவிக்கும்படி செய்தல் எளிதாகும். அப்பால் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் போய் நமது சங்கீதத்தின் உயர்வை அவர்களுக்குக் காட்டினால் மிகுந்த கீர்த்தியும் செல்வமும் பெறலாம்.

எவ்விதமான யோசனை, எவ்விதமான தொழில், எவ்விதமான ஆசை, எதையும் கொண்டு பிறதேசங்களுக்குப் போகவேண்டும். ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் யாத்திரை செய்யப் போதுமான திரவிய மில்லாதவர்கள் ஜப்பானுக்குப் போகலாம். வெளியுலகம் நம்மை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது. நமது வரவுக்குக் காத்திருக்கிறது. நமது மேன்மைக்கு வசப்பட ஆவல் கொண்டிருக்கிறது. வெளியுலகத்தில் நாம் சென்று மேம்பாடு பெற்றாலொழிய, இங்கே நமக்கு மேன்மை பிறக்க வழியில்லை. ஆதலால், தமிழ்ப் பிள்ளைகளே, வெளி நாடுகளுக்குப் போய் உங்களுடைய அறிவுச் சிறப்பினாலும், மன வுறுதியினாலும், பல விதமான உயர்வுகள் பெற்றுப் புகழுடனும், செல்வத்துடனும், வீர்யத்துடனும், ஒளியுடனும் திரும்பிவாருங்கள். உங்களுக்கு மஹாசக்தி துணை செய்க.

## 23. தேசீயக் கல்வி

தமிழ், நாட்டில் தேசீயக் கல்வி யென்பதாக ஒன்று தொடங்கி அதில் தமிழ்ப் பாஷையைப் ப்ரதானமாக நாட்டாமல் பெரும்பான்மைக் கல்வி இங்கிலீஷ் மூலமாகவும் தமிழ் ஒருவித உபபாஷையாகவும் ஏற்படுத்தினால், அது 'தேசீயம்' என்ற பதத்தின் பொருளுக்கு முழுதும் விரோதமாக முடியும் என்பதில் ஐயமில்லை. தேச பாஷையே ப்ரதானம் என்பது தேசீயக் கல்வியின் ஆதாரக் கொள்கை. இதை மறந்து விடக் கூடாது. தேச பாஷையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் தொடங்கப்படுகிற இந்த முயற்சிக்கு நாம் தமிழ் நாட்டிலிருந்து பரிபூர்ண சஹாயத்தை எதிர்பார்க்க வேண்டுமானால், இந்த முயற்சிக்குத் தமிழ் பாஷையே முதற்கருவியாக ஏற்படுத்தப்படும் என்பதைத் தம்பட்டம் அறைவிக்க வேண்டும்.

ஆரம்பப் பள்ளிக்கூடம் : உங்களுடைய கிராமத்தில் ஒரு பாடசாலை ஏற்படுத்துங்கள். அல்லது பெரிய கிராமமாக இருந்தால் இரண்டு மூன்று வீதிகளுக்கு ஒரு பள்ளிக் கூடம் வீதமாக எத்தனை பள்ளிக் கூடங்கள் ஸாத்யமோ அத்தனை ஸ்தாபனம் செய்யுங்கள். ஆரம்பத்தில் மூன்று உபாத்தியாயர்கள் வைத்துக் கொண்டு ஆரம்பித்தால் போதும்.

இந்த உபாத்யாயர்களுக்கு தேச பாஷையில் நல்ல ஞானம் இருக்கவேண்டும். திருஷ்டாந்தமாக இங்ஙனம் தமிழ் நாட்டில் ஏற்படும் தேசீயப் பாடசாலைகளில் உபாத்யாயர்களாக வருவோர் திருக்குறள், நாலடியார் முதலிய நூல்களிலாவது தகுந்த பழக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும். சிறந்த ஸ்வதேசாபிமானமும், ஸ்வதர்

மாயினமும், எல்லா ஜீவர்களிடத்திலும் கருணையும் உடைய உபாத்யாயர்களைத் தெரிந்தெடுத்தால் நன்று. அங்ஙனம் தேசாபிமானம் முதலிய உயர்ந்த குணங்கள் ஏற்கெனவே அமைந்திராத உபாத்தியாயர்கள் கிடைத்த போதிலும், பாடசாலை ஏற்படுத்தும் தலைவர்கள் அந்த உபாத்தியாயர்களுக்கு அந்தக் குணங்களைப் புகட்டுதற்குரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஆரோக்கியமும், திட சரீரமும் உடைய உபாத்தியாயர்களைத் தேர்ந்தெடுப்பது நன்று.

தேச பாஷையின் மூலமாக சரித்திரப் படிப்பு மட்டுமேயன்றி மற்றெல்லாப் பாடங்களும் கற்பிக்கப்படமேண்டுமென்பது சொல்லாமலேயே விளங்கும். தேச பாஷையின் மூலமாகக் கற்பிக்கப்படாத கல்விக்கு தேசீயக் கல்வி என்ற பெயர் சொல்லுதல் சிறிதளவும் பொருந்தாது போய்விடுமன்றோ?

ஜின ராஜ் தாஸரின் கருத்து: கல்வியைப் பற்றிய மூலக் கருத்துக்கள் எல்லா நாடுகளுக்கும் பொது, ஆனால், அந்தக் கொள்கைகளை வெவ்வேறு தேசங்களில் பிரயோகப் படுத்தும்போது இடத்தின் குணங்களுக்கும், ஜனங்களின் குணங்களுக்கும் தக்கபடி கல்வி வழியும் வைவ்வேறாய்ப் பிரிந்து தேசீயமாகி விடுகிறது.

இந்தியாவில் மாத்திரம் சுதேசியக் கல்வி இல்லை. இந்நாட்டுக் கல்வி முழுதும் பிரிட்டிஷ் குணமுடையதாக இருக்கிறது. ஒரு வாரத்தில் இரண்டு மூன்று மணி நேரம் ஹிந்து தேச சரித்திரமும், தேச பாஷையும் கற்றுக் கொடுத்தால் போதாது. அதினின்றும் சுதேசிய ஞானம் ஏற்படாது. சென்னையில் 'பிரஸிடென்ஸி காலேஜ்' என்று சொல்லப்படும் மாகாணக் கலாசாலையின் கட்டடம் நமது தேச முறையைத் தழுவியதன்று. பழைய இத்

தாலிய வழி யொன்றை அனுசரித்தது. இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்ட் கேம்பிரிட்ஜ் சர்வ கலா சங்கங்களின் கட்டடங்கள் இத்தாலிய முறையிலா கட்டியிருக்கிறார்கள்? அதுபோலவே பாரத தேச முறைமைப்படி கட்டிய கட்டடங்களில் கற்றுக் கொடுக்காத கல்வி இங்கு சுதேசீயக் கல்வி என்று சொல்லத் தகுந்த யோக்யதை பெறாது.

இது ஜினராஜ தாஸர் சில தினங்களின் முன்பு சென்னைப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்திருக்கும் ஒரு வ்யாசத்தின் ஸாரமாம். இதில் கடைசி அம்சம் மிகவும் கவனிக்கத் தகுந்தது. நமது தேசத்து முறைப்படி கட்டிய கட்டடத்திலேயன்றி பிறநாட்டு முறை பற்றிக் கட்டிய மனைகளிலே கூட தேசீயக் கல்வி பயிற்றுதல் ஸாத்யமில்லையானால், ஒஹோ, பாஷை விஷயத்தை என்னென்று சொல்வோம்! தமிழ் நாட்டில் தேசீயக் கல்வி கற்பிக்க வேண்டுமானால், அதற்குத் தமிழே தனிக் கருவியாக ஏற்படுத்த வேண்டுமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

## தமிழ் நாட்டுப் பெண்கள்

தமிழ் நாட்டு ஸ்திரீகளையும் சேர்த்துக் கொண்டு, அவர்களுடைய யோசனைகளையும் தழுவி நடத்தா விடின் அக்கல்வி சுதேசீயம் ஆக மாட்டாது. தமிழ்க் கல்விக்கும் தமிழ்க் கலைகளுக்கும் தொழில்களுக்கும் தமிழ் ஸ்திரீகளே விளக்குகளாவர். தமிழ்க்கோயில், தமிழரசு, தமிழ்க் கவிதை, தமிழ்த் தொழில் முதலிய வற்றுக்கெல்லாம் துணையாகவும் தூண்டுதலாகவும் நிற்பது தமிழ் மாதரன்றோ?

தேசீயக் கல்வியின் தமிழ் நாட்டுக் கிளையென ஒரு கிளை ஏற்பட வேண்டும். அதன் ஆட்சி மண்டலத்தில் பாதித் தொகைக்குக் குறையாமல் தமிழ் ஸ்திரீகள் கலந்திருக்கவேண்டும்.

## கிராமப் பள்ளிக் கூடங்கள்

அனுவசியமான தண்டத்திற்கெல்லாம் தமிழர் பணத்தை வாரி இறைக்கிறார்கள். கான்பரன்ஸ் என்றும், மீட்டிங் என்றும் கூட்டங்கள் கூடி விடிய விடிய வார்த்தை சொல்லுகிறார்கள். கிராமங்கள் தோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் போடுவதற்கு யாதொரு வழியும் செய்யாமல் இருக்கிறார்களே! படிப்பில்லாத ஜனங்கள் மிருகங்களுக்குச் சமானமென்று திருவள்ளுவர் பச்சைத் தமிழிலே சொல்லுகிறார். நமக்குள் எத்தனையோ புத்திமான்கள் இருந்தும், நம்மிலே முக்கால் பங்குக்கு மேலே மிருகங்களாக இருக்கும் அவமானத்தைத் தீர்க்க ஒருவழி பிறக்க வில்லையே! ஏன்? எதனாலே? காரணந்தான் என்ன?

ஜாதி என்ற சொல் இரண்டு அர்த்த முடையது. முதலாவது, ஒரு தேசத்தார் தமக்குள் ஏற்படுத்தி வைத்துக் கொள்ளும் பிரிவு; வேளாள ஜாதி பிராமண ஜாதி, கைக்கோள ஜாதி என்பது போல. இரண்டாவது தேசப்பிரிவுகள் தழுவிய வேற்றுமை. ஜப்பானிய ஜாதி, சீன ஜாதி பாரஸிக ஜாதி, ஆங்கிலேய ஜாதி, ஜர்மானிய ஜாதி ருமானிய ஜாதி என்பது போல. இவ்விரண்டிலும் அதிக அநுகூலமில்லை யென்பது ஸ்ரீமான் ரவீந்திர நாத தாகூருடைய கக்ஷி.

வெளி தேசத்தாருக்கு தர்மோப தேசம் செய்கையில் நமது நாட்டில் குற்றங்கள் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கலாமா? இங்கே, அனுவசியமாக ஜாதி விரோதங்களும் அன்புக் குறைவுகளும் அவமதிப்புகளும் வளர விடலாமா? அவற்றை அழித்து உடனே அன்பையும் உடன் பிறப்பையும் நிலை நாட்டுவது நம்முடைய கடமை யன்றோ?

எது எப்படியானாலும்,இந்த தினத்தில், இந்த க்ஷணத்தில் நாமெல்லோரும் பறையர், பார்ப்பார் எல்லோரும் ராஜாங்க விஷயத்தில் ஒரே ஜாதி.

தேசீயக் கல்வி, மனுஷ்யஜாதியின் விடுதலை, இவ்விரண்டு பெருங் காரியங்களைத் தொடங்குவதற்கும் இப்போது காலம் மிகவும் பொருத்தமாக வாய்த்திருக்கிறது.

இவற்றுள் மனுஷ்யஜாதியின் விடுதலை நிறைவேற வேண்டுமாயின் அதற்கு பாரத தேசத்தின் விடுதலை இன்றியமையாத மூலாதாரமாகும்.

இங்ஙனம் பாரத தேசம் விடுதலை பெற வேண்டுமாயின் அதற்கு தேசீயக் கல்வியே ஆதாரம்.

"அ............ன்"

மேலே காட்டிய குறியின் பொருள் யாது?

தமிழ் நாட்டில் தேசீயக் கல்வி நடைபெற வேண்டுமாயின் அதற்கு அகர முதல் னகரப் புள்ளி இறுதியாக எல்லா வ்யவஹாரங்களும் தமிழ் பாஷையில் நடத்த வேண்டும் என்பது பொருள்.

ஆரம்ப விளம்பரம் தமிழில் ப்ரசுரம் செய்யவேண்டும். பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டால், அங்கு நூல்களெல்லாம் தமிழ் மொழி வாயிலாகக் கற்பிக்கப்படுவது மன்றிப் பலகை, குச்சி எல்லாவற்றுக்கும் தமிழிலே பெயர் சொல்ல வேண்டும்; 'ஸ்லேட்' 'பென்ஸில்' என்று சொல்லக்கூடாது.

## 24. தமிழ் நாட்டில் கல்வி

தமிழ் நாட்டில் உண்மையான கல்வி பரவ வேண்டுமானுல், சகல சாஸ்திரங்களும் தமிழ் பாஷை மூலமாகவே கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை நமக்குள்ளே அறிவுடையோரெல்லோரும் கொண்டிருக்கிருர்கள். ஆனுல் இதை அனுஸரணைக்குக் கொண்டு வருவதற்குத் தக்கபடி நமக்குள்ளே சக்தி பிறக்கவில்லை. ஐரோப்பிய ஸ்திரீயாகிய மிஸ்ஸஸ் பெஸண்ட் கூடச் சில தினங்களின் முன்பு பெங்களுரில் செய்த பிரசாங்க மொன்றிலே தமிழ் பாஷையை மிகவும் வியந்து கூறி, நாமெல்லோரும் தமிழ்ப் பயிற்சியில் தக்கபடி சிரத்தை செலுத்தாமல் இருப்பது பற்றி வருத்தப்பட்டதாகத் தெரிகிறது. இப்படி நம்மைப் பார்த்துப் பிறர் இரக்கப் படும்படியான அவமான நிலை விரையில் நீங்க வேண்டுமென்று தேவர்களை வணங்குகிறோம்.

## 25. ஸரஸ்வதி பூஜை—உண்மை வழி

சொல்லை ஸாதாரணமாக நினைத்துவிட லாகாது. உண்மைச் சொல் க்ஷேம மந்திர மாகும். பொய்ச்சொல் அழித்துவிடும். "வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணி பூண்டு வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்."

இவளை அறிஞன் தனக்குள்ளே ஞான வெள்ளமாகக் காண்கிறான். அவனுடைய அறிவு கதிர் விடுகின்றது. இவளுடைய பூஜைக்கு முக்கிய வழிகள் எவை? தான் எப்போதும் எவ்விடத்திலும் உண்மை சொல்லுதல், பிறர் உண்மை சொல்வதை எப்போதும் எவ்விடத்திலும் விருப்பத்தோடு கேட்டல் என்ற இவ்விரண்டுமேயாம். தான் உண்மை சொல்வது மிகவும் சிரமமாய் விட்டது. பிறர் உண்மை சொல்வதைக் கேட்கும்போது நாராச வாணமாய்விட்டது. ஸாதாரண நிலையில், மனித வாழ்க்கை அத்தனை கோணலாகி விட்டது; மனித அறிவு அவ்வளவு குழப்பமடைந்து நிற்கின்றது.

### தேவ வாக்கு அவதாரம் : ஸரஸ்வதி

வேத மார்க்கமாகிய வேள்வியின் ரஹஸ்யப் பொருளை உணர்ந்து நடந்தால், உண்மை சொல்வதிலும் துன்பமிராது; கேட்பதிலும் துன்பமிராது. உலக வாழ்க்கையே தேவருக்குச் செய்யப்படும் வேள்வியல்லவா? அதனை ஸரஸ்வதியே தரிக்க வேண்டு மென்று மதுச்சந்த ரிஷி வேண்டுவதை மேலே கண்டோம். உண்மைச் சொல்லே ஸரஸ்வதி வசம் நமது வேள்வியை ஒப்புக் கொடுப்பதற்கு முக்கிய வழி யென்றோம். இதனுடன் நிந்தை, பழி, சாபம், பயம், அசுசி— இவற்றினால் வாக்கை

மாசுபடுத்தா திருக்க வேண்டும். அமங்கல வார்த்தைகளும் அவச் சொற்களும், பய வசனங்களும் தீமை தரும். பரிபூர்ணமான தீரமும், வலிமையும், உண்மையும், திருத்தமும், தெளிவும் பொருந்திய வாக்கே தேவ வாக்கென்று சொல்லப்படும். மனித ஜாதிக்கு தேவ வாக்குப் பிறந்திடுக.

## ஸரஸ்வதியும் இலக்கியமும்

உலக நடையிலே, உண்மை முதலிய குணங்கள் ஸரஸ்வதி தேவியின் கருணைக்கு நம்மைப் பாத்திரமாக்கி, நம்மிடத்தில் தேவ வாக்கைத் தோற்றுவித்து, நமது வேள்வியைக் காக்கும் என்பது கண்டோம். இலக்கியக் காரருக்கோ வென்றால், இத்தெய்வமே குலதெய்வம். அவர் இதனைச் சுடர் செய்யும் உண்மையுடனே போற்ற வேண்டும். எதுகை மோனைகளுக்காகச் சொல்ல வந்த பொருளை மாற்றிச் சொல்லும் பண்டிதன் ஸரஸ்வதி கடாக்ஷத்தை இழந்து விடுவான். யமகம் திரிபு முதலிய சித்திரக் கட்டுக்களை விரும்பிச் சொல்லுக்குத் தக்கபடி பொருளைத் திரித்துக் கொண்டு போகும் கயிறு பின்னிப் புலவன் வாணியின் திருமேனியை நோகும்படி செய்கிறான். அவசியமில்லாத அடைமொழிகள் கோப்போன் அந்த தெய்வத்தின் மீது புழுதியைச் சொரிகின்றான். உலகத்தாருக்குப் பொருள் விளங்காதபடி இலக்கியஞ் செய்வோன் அந்த சக்தியைக் கரித்துணியாலே மூடுகின்றான். 'வெள்ளைக்கலை' யுடுத்துவதில்லை. மனமறிந்த உண்மைக்கு மாறு சொல்லும் சாஸ்திரக் காரனும் பாட்டுக்காரனும் ஸரஸ்வதிக்கு நிகரில்லாத பாதகம் செய்கின்றனர். இலக்கியத்துக்குத் தெளிவும் உண்மையுமே உயிரெனலாம். இவ்வுயிருடைய வாக்கே அருள் வாக்கென்று சொல்லப்படும்.

# 26. வீரத் தாய்மார்கள்

18, அக்டோபர் 1907

*'தாயைப்போல் பிள்ளை' : ஓர் தேசத்தார் ஞானமும், செல்வமும், வீரமும், புகழும் கொண்டு உன்னத நிலையிலே இருக்கும்போது, அவர்களுக்குள் ஆண் மக்களிடம் மட்டுமே யல்லாது பெண் பாலரிடத்திலும் கூடத் தர்மாபிமானமும், வீரத்தன்மையும் சிறந்து விளங்கும். ராஜபுத்திரர்கள் உன்னத நிலையிலே இருந்த காலத்தில் ராஜபுத்திர ஸ்திரீகள் காட்டிய வீர குணங்கள் இன்றுகூட உலகத்தாரெல்லாம் கேட்டு மெய் சிலிர்க்கும்படியாக இருக்கின்றன. யுத்த காலங்களில் ராஜபுத்திர ஸ்திரீகள் தமது உயிரைப் புல்லினும் சிறிதாக மதித்து, மானத்திற்காகவும், தர்மத்திற்காகவும், கற்பிற்காகவும் செய்திருக்கும் வீரச்செயல்கள் எண்ணி முடியாதன. 'டாட்' என்ற ஆசிரியர் எழுதியிருக்கும் ராஜஸ்தான சரித்திரத்தை வாசித்தவர்களுக்கு நமது பாரத நாட்டு க்ஷத்திரிய மாதர்களுக்கு நிகரான 'வீரத்தாய் மார்' உலகத்தில் வேறெங்குமிருந்ததில்லை என்பது நன்கு விளங்கும். நிற்க*

*நமது தமிழ் நாட்டிலேயும் அத்தகைய பெருங்குடி (மூதில்) மாதர்கள் இருந்திருக்கிறார்களென்பதைச் "செந்தமிழ்"ப் பத்திரிகாசிரியர் இம்மாதம் எழுதியிருக்கும் ஓர் திவ்யமான உபந்நியாசத்திலே பல அரிய திருஷ்டாந்தங்களால் விளக்கியிருக்கிறார். அவரது உபந்நியாசத்தைச் சென்ற வாரத்திலே ஒருபகுதியும் இவ்வாரத்தில் ஒரு பகுதியுமாக நமது பத்திரிகையிலே பிரசுரம் செய்திருக்கின்றோம். இன்னும் சிறிது மிஞ்சியிருக்கின்றது. இதனை அடுத்த*

வாரத்தில் பிரசுரம் செய்வோம். தமிழ் நாட்டுத் தாய் மாரைப் பற்றிச் "செந்தமிழ்" ஆசிரியர் எழுதியிருக்கும் உபந்நியாசத்தைப் படித்தபோது, எமக்குண்டான பெரு மகிழ்ச்சிக்கும் பெருந் துயரத்திற்கும் அளவில்லை. 1,800 வருஷங்களுக்கு முன்பாகவே இத்தனை பெருங்குணங்கள் வாய்க்கப்பெற்றிருந்த நாகரீக நாட்டிலே, இவ்வளவு உயர்வு கொண்டிருந்த பெரியோரின் சந்ததியிலே, இவர் கள் நடையிலும் செய்கைகளிலும் நிகரில்லாது கையாண்டு வந்த தமிழ்ப் பாஷையைப் பேசும் பெருங்குடியில் நாம் பிறந்திருக்கிறோமென்பது அரிய மகிழ்ச்சி யுண்டாக்கு கிறது.

ஆனால், பிரம்ம சந்ததியிலே இராவணன் பிறந்தது போல, இத்தனை பெரிய நாகரீகமும் சிறப்பும் அறவலிமை யும் பொருந்திய மேலோரின் சந்ததியிலே குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பாகத் தோன்றி நாம் இக் காலத்திலே இருக்கும் நிலையையெல்லாம் பார்க்கும்போது மனம் புண்ணாய் உலைகின்றது.

அந் நாட்களில் மாதர்கள் காட்டிய வீரத்தன்மையை யும், இந்நாளிலே ஆண்மக்கள் காட்டும் பேடித்தன்மையை யும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, "ஆ! நமது உயர்வு கொண்ட பாரத ஜாதி இத்தனை தாழ்ந்த நிலைக்கு வருவ தைக் காட்டிலும் ஒரேயடியாக அழிந்து போயிருந்தாலும் சிறப்பாயிருக்குமே" என்று மனம் குமுறுகின்றது.

நமது பத்திரிகை படிக்கும் நேயர்களனைவரும் நாம் "செந்தமிழ்"ப் பத்திரிகையிலிருந்து பெயர்த்துப் பதிப் பிட்டிருக்கும் உபந்யாசத்தைத் தாம் பல முறை படிப்பது மட்டுமே யன்றித் தமது சுற்றத்தாருக்கும் மித்திரருக்கும் தமது வீட்டு மாதர்களுக்கும் திரும்பத் திரும்பப் படித்துக் காட்டுதல் நலமென்று கருதுகிறோம்.

"மகனைப் பெற்று விடுதல் எமது கடமை. அவனைத் தக்கோன் ஆக்குதல் அவன் தந்தையின் கடமை. அவனுக்கு வேல் செய்து கொடுத்தல் இரும்புக் கொல்லனது கடமை. என் மகனது கடமை எனிலோ யுத்தத்திலே சென்று யானையைக் கொன்று மீளுதல் ஆகும்" என்று ஓர் தமிழ்த்தாய் பாடியிருக்கின்றாள்.

இனி மற்றொரு தாய், "எனது மகன் யுத்த களத்திலே போர் வீரர் வாளினிலே கழுத்தறுப்புண்டு மடிவானானால், அதுதான் எனக்கு மேலான தர்மம்; அதுவே ஸத்கர்மம்" என்று பாடினாள். பின்னுமொரு பெண் புலவர், தமது சுற்றத்திலுள்ள ஓர் அம்மை தன்மகன் போரிலே யானையை வீழ்த்திக் கொன்று தானும் இறந்தான் என்று கேள்வி யுற்று, தான் அவனைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சி யைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சியடைந்த சிறப்பைக் கண்டு வியந்து பாடல் சொல்லியிருக்கின்றார்.

அப்பால், ஒரு தமிழ்த்தாய் தனது தந்தையும் கணவ னும் போரிலே சிறிது காலத்திற்கு முன்பு இறந்து போயிருக் கவும், யுத்தப் பறையின் ஒலி கேட்டவுடனே சந்தோஷம் மிகுந்து, தன் மகனுக்கு நல்ல ஆடை யுடுத்தி, அவன் குடுமிக்கு எண்ணெயிட்டுச் சீவி முடித்து அவன் கையிலே வேலெடுத்துக் கொடுத்துத் தனது ஒரே பிள்ளையைப் போர்க்களத்திற்குப் போ என்று அனுப்பிய பெருமையை ஓர் பெண் புலவர் வியந்திருக்கின்றார். பின்னுமொரு தாய், தன் மகன் யுத்த களத்திலே வலியிழந்து புறங்கொடுத்து ஓடியது உண்மையாயின், 'அவன் பால் உண்டு வளர்ந்த தற்குக் காரணமாயிருந்த என் முலைகளை அறுத்திடுவேன்' என்று வாளைக் கையிலே கொண்டு போர்க்களத்திற்குப் போய், அங்கே வீழ்ந்து கிடக்கும் பிணங்களை வாளினால் புரட்டித் தேடுகையிலே, அப் பிணங்களினிடையில் தன்

மகன் உடலும் இரண்டு துண்டமாகக் கிடந்ததைப் பார்த்து, அவனைப் பெற்ற பொழுதைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சியடைந்தாள் என்று ஓர் பாடல் இருக்கிறது.

இன்னும், அதுபோல எத்தனையோ ஆச்சரியமான திருஷ்டாந்தங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இடம் போதாமைபற்றி அவற்றை இங்கே எடுத்துக் கூற முடியவில்லை.

இவ்வளவு மேலான வீரப்பயிற்சி இருந்த நாடு இப்போது என்ன நிலைமைக்கு வந்துவிட்டது!

ஆனால், நமக்கு ஒரு ஆறுதல் இருக்கின்றது. அதுவும் வீணான ஆறுதலன்று. உண்மை பற்றிய ஆறுதல்.

அந்த ஆறுதல் யாதெனில், நமது ஜாதியை இடையே பற்றிய சிறுமை நோய் விரைவிலே நீங்கி விடும் என்பதற்கு ஆயிரக்கணக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. பரிசுத்தமான நெஞ்சமும் தெய்வ பக்தியும் தன்னல மறப்பும் உடைய பல மேலோர்களை இப்போது நாட்டிலே காண்கிறோம். இது வீணாக மாட்டாது. நம்மைப் பற்றியிருந்த புன்னோய் சீக்கிரத்திலே மாறிப்போய்விடும். வானத்திலே துந்துபியொலி அதிரக் கேட்கின்றோம். மகாபாரதம் (Great india) பிறந்துவிட்டது. வந்தே மாதரம்.

மேற்கண்ட கட்டுரையை யொட்டி

பிரம்மஸ்ரீ. மு. இராகவையங்காரவர்களுக்கு

எழுதிய லிகிதம்.

**இந்தியா ஆபீஸ்,**

பிராட்வே, மதறாஸ்,

18th October 1907.

அநேக நமஸ்காரம்.

ஒவ்வொரு காலத்துச் சோம்பர் மிகுதியாலும், ஒவ்வொரு காலத்தே முயற்சி மிகுதியாலும், தங்களைப் போன்ற பெரியோர்களுக்கு அடிக்கடி கடிதங்களெழுதிப் புனிதத் தன்மை பெறுவதற்கு அவகாசமில்லாதவனாக இருக்கின்றேன்.

சென்ற முறை வெளிவந்த "செந்தமிழ்"ப் பத்திரிகையிலே தாங்கள் எழுதியிருக்கும் "வீரத்தாய்மார்கள்" என்ற அற்புத உரையைக் கண்டு மகிழ்ச்சி பூத்து அம் மகிழ்ச்சியைத் தமக்கு அறிவிக்கும் பொருட்டாக இக் கடிதம் எழுதலானேன்.

தாங்கள் பாண்டித்தியத்தை நான் புகழ வரவில்லை. அதனை உலகமறியும். தங்களுடைய பரிசுத்த நெஞ்சிலே எழுந்திருக்கும் "ஸ்வதேச பக்தி" என்ற புது நெருப்பிற்குத் தான் நான் வணக்கம் செய்கிறேன்.

"காலச் சக்கரம் சுழலுகிறது" என்று அவ்வுபந்நியாசத்தின் இறுதியிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆம்! காலச்

சக்கரம் சுழலவே செய்கின்றது; அச் சுழற்சியிலே, சிறுமைச் சேற்றில் ஆழ்ந்து கிடந்த 'நீச பாரதம்' போய் 'மஹா பாரதம்' பிறக்கும் தறுவாய் வந்துவிட்டது.

'தாழ் நிலை' என்ற இருளிலே மூழ்கிக் கிடக்கும் பாரத வாஸிக்ளுக்கு மஹாபாரதம் காட்டத் தோன்றியிருக்கும் சோதிகளிலே தமது நெஞ்சிற் பிறந்திருக்கும் நெருப் பொன்றுகும். அதற்கு வணக்கம் செய்கிறேன். அது வளர்க. ஓம்!

ஸி. சுப்பிரமணிய பாரதி.

குறிப்பு:—ஸ்ரீ அழகிய சிங்கப் பெருமாளையங்கார் (பச்சையப்பன் காலேஜ்) அவர்களும் அவர் தம்பி ஸ்ரீகிருஷ்ணமாசாரி யாரும் தங்களுக்கு ஸாஷ்டாங்க வணக்கம் கூறும்படி என்னிடம் கற்பித்தார்கள்.

## 27. பாரதி வாக்கு

கோவிலுக்குப் போனாலும் சரி; போகாவிட்டாலும் சரி; தெய்வத்தைக் கும்பிட்டாலும் சரி, கும்பிடா விட்டாலும் சரி; பிறரை ஏமாற்றுவதை நிறுத்தினால் தெய்வம் அருள் புரியும். துளிகூட, ஓர் அணுக்கூட, மற்றவர்களை ஏமாற்றுவதே கிடையாது என்று ஒருவன் பரிபூர்ண சக்தி அடைவானாகில் அவனே ஈஸ்வரன்.

*   *   *

தமிழ் ஜனங்களுக்குள் சக்தி மேன்மேலும் பெருகச் செய்ய வேண்டுமென்பது நமது நோக்கம். இந்த நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டாகவே நாம் உயிர் தரிக்கின்றோம்.

*   *   *

இன்று தேவர்களை அழைக்கின்றோம்.
இந்த மண்ணுலகத்திலே மீளவும் கிருத
யுக்த்தை நாட்டும் பொருட்டாக.

*   *   *

ஒரு தனியிடத்தே போயிருந்து உயர்ந்த சிந்தனைகள், அமைதி கொடுக்கக் கூடிய சிந்தனைகள், துணிவும் உறுதியும் தரக்கூடிய சிந்தனைகள்— இவற்றால் அறிவை நிரப்பிக் கொண்டு தியானம் செய்வதை ஒரு நாளேனும் தவற விடாதே.